உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 01 ஞாயிற்றுக்கிழமை(14-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:109

### தமிழர் தாயகத்தைக் கூறுபோட முயற்சி:

# பிரதேசப் பாகுபாட்டை எதிர்த்து முறியடிப்போம்!

## கூட்டமைப்பு வேட்பாளர்கள் உறுதி

யாழ்ப்பாணம்,மார்ச்14

**வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழ்பேசும் மக்களின் இணைந்த மரபுவழித் தாயகம். அதனைத் தமது சொந்த நலனுக்காக எவரும் பிரிக்க முற்படுவதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் அனுமதியாது. பிரதேசவாதத்தைத் தூண்டி ஒட்டுமொத்தத் தமிழர்களது நலனையும் குழிபறிக்க முற்பட்டுநிற்கும் சக்திகளை ஓரணியாக நின்று முறியடிப்போம்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர்கள் உறுதிபடத் தெரிவித்திருக்கின்றனர்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர்கள் நேற்று யாழ். மார்ட்டின் வீதியில் உள்ள கூட்டமைப்பின் தேர்தல் அலுவலகத்தில் ஒன்றுகூடி கிழக்கு மாகாண நெருக்கடி நிலைபற்றிக் கலந்துரையாடினர்.

பிரதேசவாதத்தை முன்னிறுத்தி தமிழ்த் தேசிய இனத்தைக் கூறுபோட்டு தேசிய விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பதற்காகக் கிழக்கில் பொது மக்கள் என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாகக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் தங்கள் கண்டனத்தை வெளியிட்டனர்.

தமது சொந்த நலனுக்காகப் பிரதேசவாதத்தைத் தூண்டுபவர்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லையெனவும், வடக்கு - கிழக்கு இணைந்த தாயகம் என்ற ரீதியிலிலேயே கூட்டமைப்பின் எதிர்காலச் செயற்பாடுகளும் அமையும் என்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தின் பின்னர் இடம்

(15ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரண தர பரீட்சைப் பெறுபேறு விரைவில்!

கொழும்பு,மார்ச்14

கடந்த டிசெம்பரில் நடந்த ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சை முடிவுகள் எதிர் வரும் 25ஆம் திகதியளவில் வெளியாகும் என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விடைத்தாள் மதிப்பிடும் பணிகள் பூர்த்தியடைந்துவிட்டன என்றும் -

பாடப்புள்ளிகள் கணனியில் பதியும் பணிகள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றன என்றும் -

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ம-3)

## கூட்டமைப்பு வேட்பாளர்கள் நாளை தேர்தல் ஆணையாளரைச் சந்திப்பர்

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் நாளை திங்கட்கிழமை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

முன்னதாக கூட்டமைப்புப் பிரதிநிதிகள் இந்த விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளா சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து இன்று பேச்சு நடத்தவுள்ளனர். பின்னர் கொழும்பு செல்லவுள்ள அவர்கள் அங்கு தேர்தல் ஆணையாளரைச் சந்தித்துப் பேசுவர்.

வன்னியில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்தபோதிலும் இது வரை திட்டவட்டமான பதிலேதும் கிடைக்கவில்லை. வன்னியில் சுமார் 63 ஆயிரம் வாக்களர்கள் உள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஓட்டமாவடியில் தேர்தல் வன்செயல்

## பொலீஸாரின் தடியடியில் இரு இளைஞர்கள் காயம்

மட்டக்களப்பு,மார்ச்14

மட்டக்களப்பு, ஓட்டமாவடியில் நேற்று மாலை இடம்பெற்ற தேர்தல் வன்செயலின்போது பொலீஸார் மேற்கொண்ட கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு மற்றும் குண்டாந்தடிப் பிரயோகத்தில் இரு இளைஞர்கள் காயம் அடைந்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திக் கூட்டமைப்பின் முக்கிய வேட்பாளர் ஒருவர் ஓட்டமாவடியில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார். அந்த நேரத்தில் அங்கு வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் அந்தப் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது இரு தரப்பினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது.

அச்சமயம் அங்கு வந்த பொலீஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைக்குண்டுகளை ஏவினர்; குண்டாந்தடிப் பிரயோகம் செய்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வன் முறையில் ஈடுபட்டு, பொலீஸார் மீது கற்களை வீசியதால் தாக்குதல் நடத்த வேண்டி ஏற்பட்டது என்று வாழைச்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக அகதிமுகாம்களிலிருந்து பெண்களை கடத்திவந்து சித்திரவதை

### தப்பி வந்த 12 பெண்கள் வவுனியா அரசியல்துறையில் தஞ்சம்

வவுனியா,மார்ச்14

வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாகக்கூறி தமிழகத்தில் உள்ள அகதிமுகாம்களில் இருந்து அழைத்து வரப்பட்ட தமிழ்ப்பெண்கள் கொழும்பில் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு அழைத்துவரப்பட்டு வததளை மற்றும் குணசிங்கபுர பகுதிகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 12 பெண்கள் அங்கிருந்து தப்பி வந்து வவுனியாவில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரிடம் தஞ்சம் அடைந்துள்ளனர்.

வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாக ஏமாற்றி, தமிழக அகதி முகாமில் உள்ள பெண்களை ஒரு கோஷ்டியினர் அழைத்து வருகின்றனர் என்றும் -

இவ்வாறு அழைத்துவரப்படுபவர்கள் மன்னார், பேசாலை, வவுனியா, தோணிக்கல், வத்தளை, குணசிங்கபுர ஆகிய இடங்களில் தடுத்துவைக்கப்பட்டுச் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்றும் - கூறப்படுகின்றது.



இப்படித் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களில் 14 பெண்கள் ஏற்கனவே தப்பிச்சென்றுவிட்டனர் என்று கூறப்படுகின்றது.

வவுனியா அரசியல்துறையினரிடம் தஞ்சமடைந்த தப்பிவந்த 14

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் வெடித்ததில் அதிகாரி, சிப்பாய் பலி!

கொழும்பு,மார்ச்14

அனுராதபுரம், போகொட இராணுவ முகாமில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற கிரனேட் வெடிப்பில் ஓர் அதிகாரியும் சிப்பாயும் உயிரிழந்தனர்.

பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் கிரனேட் தற்செயலாக வெடித்ததில் இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

பயிற்சியில் ஈடுபட்ட சிப்பாய் கிரனேட்டை எறிந்த சமயம் அது வெடித்தது என்றும் -

அதில் சிக்கி பயிற்சி அளித்துக் கொண்டிருந்த அதிகாரியும் அந்தச் சிப்பாயும் உயிரிழந்தனர் என்றும் - பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் மற்றும் ஓர் இராணுவ அதிகாரி காயமடைந்தார். அவர் கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ம-3)

## ஜனாதிபதி மற்றும் பிரதமரை படுகொலை செய்யும் சாத்தியம்!

### சர்வதேச உளவுப் பிரிவுகள் எச்சரிக்கை

கொழும்பு,மார்ச்14

தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடும் சமயத்தில் ஜனாதிபதியோ பிரதமரோ படுகொலை செய்யப்படும் சாத்தியம் உள்ளதாக சர்வதேச உளவுப் பிரிவுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறையில் இருந்தபோதும், பிளவுபட்டு நிற்கும் விடுதலைப் புலிகளின் ஓர் அணியால் இந்த அச்சுறுத்தல் இருப்பதாகவும் அந்த உளவுப்பிரிவுகள் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குச் தகவல் கொடுத்துள்ளன.

இத்தகவலை அடுத்து ஜனாதிபதி பொதுக் கூட்டங்களில் உரையாற்றுவதை நிறுத்தியுள்ளார் என்றும் -

செய்மதி மூலமே தமது உரைகளை நிகழ்த்தவுள்ளார் என்றும் - கொழும்பு செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

அதேபோல பிரதமரும் பல கூட்டங்களை ரத்துச் செய்துள்ளார் என்றும் கூறப்பட்டது.

எனினும் திருகோணமலையிலும் வவுனியாவிலும் இன்று இடம்பெறும் பிரசாரக் கூட்டங்களில் திட்டமிட்டபடி அவர் உரையாற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகரசபை வளாகத்தில் இன்று இடம்பெறும் கூட்டத்தில் அவர் பங்குபற்றுவதையொட்டி நேற்று பொலீஸ் ஒத்திகை ஒன்றும் இடம் பெற்றது.

(ம-3)

### இராணுவ சூனியப் பிரதேசத்துக்குள்

## கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைப்பது பற்றி அடுத்தவாரமே முடிவு

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச மக்கள் வாக்களிப்பதற்கு கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைப்பது தொடர்பான இறுதி முடிவு அடுத்த வாரமே எடுக்கப்படவிருக்கின்றது.

இராணுவத் தளபதி மற்றும் பொலீஸ்மா அதிபர் ஆகியோருடன் பேச்சுக்களை தேர்தல் ஆணையாளர் நடத்திய பின் இந்த முடிவு எடுக்கப்படும் என பிரதித் தேர்தல் ஆணையாளர் ஜே.சேனநாயக்க தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச மக்கள் வாக்களிக்கக் கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைப்பது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களின் அரச அதிபர்களுடன் நேற்று ஆராய்ந்தார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட அரச அதிபர்கள் இக் கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை.

தேர்தல் ஆணையாளருடனான சந்திபபின்போது விடுவிக்கப்படாத பகுதிகளில் வாக்குச்சாவடிகளை அமைக்க வேண்டும் என்று தாங்கள் கோரினர் என்றும் -

இக்கோரிக்கையைத் தேர்தல் ஆணையாளர் நிராகரித்துவிட்டார் என்றும் - மட்டக்களப்பு அரச அதிபர் மோனகுருசாமி தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் உள்ள சூனியப் பிரதேசங்களில் வாக்குச்சாவடிகளை அமைப்பது குறித்து ஆராயப்படுகிறது என்றும் -

இராணுவத் தளபதி மற்றும் பொலீஸ்மா அதிபருடன் அடுத்த வாரம் கலந்துரையாடி இதுதொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் - தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார் என மோனகுருசாமி மேலும் கூறினார்.

(ம-3-6-ரி)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

'பொன் அணிகள் போர்'

# சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி!



யாழ்ப்பாணம்,மார்ச்14

பொன் அணிகள் போரில் சென். பற்றிக்ஸ் கல்லூரி கிரிக்கெட் அணி நேற்று 9 விக்கெட்டுக்களால் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை வெற்றிகொண்டது.

கடந்த இரு தினங்களாக யாழ். சென்.பற்றிக்ஸ் மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் காலை சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி தனது முதல் இனிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித் தது. 9 விக்கெட்டுக்களை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண் டது.

அந்த அணி சார்பில் ஆர்.வினோ தன் 62 ஓட்டங்களையும் எஸ்.ஜெனன் ராஜ 41 ஓட்டங்களையும் ஆர்.நிஷாந் தன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

37 ஓட்டங்களைப் பெற்றால் 4 விக்கெட்டுக்களையும் சுரேன் 23 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை யும் வீழ்த்தினர்.

பற்றிக்ஸ் அணியைவிட 118 ஓட் டங்கள் குறைவாகப் பெற்றதன் காரண மாக அந்த அணி 'பொலோன்' நிலைக் குத் தள்ளப்பட்டது. இதனால், அந்த அணி மீண்டும் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்டது.

இரண்டாவது இனிங்ஸில் ஒரு வாறு சமாளித்துக்கொண்ட யாழ்ப்பா ணக் கல்லூரி அணி 154 ஓட்டங் களைப் பெற்றது. உதயகுமார் 59 ஓட்டங்களையும் எம்.எஸ்.திலீபன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சுரேன் 5 விக்கெட் டுக்களைச் சாய்த்தார். செல்வின் லொயிட் 3 விக்கெட்டுக்களை வீழ்த் தினார்.

## விளையாட்டு

யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் பந்துவீச்சில், துஜன் 6 விக்கெட்டுக் களைச் சாய்த்தார். திலீபன் 2 விக் கெட்டுக்களை வீழ்த்தினார்.

அன்றையதினம் மாலையே தனது முதல் இனிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது யாழ்ப்பாணக் கல்லூரி அணி. ஆட்டநேர முடிவில் அந்த அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுக் காலை அணி ஆட்டத் தைத் தொடர்ந்தது. மதிய உணவு இடைவேளைக்கு முன்னதாக சகல விக்கெட்டுக்களையும் இழந்து மேல திகமாக 44 ஓட்டங்களை மட்டுமே அணியால் பெறமுடிந்தது. அணி சார் பாக அதிகபட்சமாக தனுஜன் மட்டும் 27 ஓட்டங்களைப் பெற்றார்.

பற்றிக்ஸ் அணி சார்பாக செல் வின் லொயிட் 28 ஓட்டங்களுக்கு

வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்தது பற்றிக்ஸ் அணி. ஒரு விக்கெட்டை இழந்து அது வெற்றி இலக்கை இலகுவாக அடைந்தது. ஜெனன்ராஜ் 10 ஓட்டங்களையும் செல்வின் லொயிட் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களையும் பெற்றனர். 9 விக்கெட்டுக்களால் பற் றிக்ஸ் அணி வெற்றிபெற்றது.

ஸ்கோர் விவரம்:

**முதல் இனிங்ஸ் -**
பற்றிக்ஸ் - 204/9
யாழ்ப்பாணக் கல்லூரி 86/10

**இரண்டாவது இனிங்ஸ் -**
யாழ்ப்பாணக் கல்லூரி- 154/10
பற்றிக்ஸ் - 39/1

(ம-5)




| | |
|---|---|
| சிறப்பாட்டக்காரர் | : ஜே.சுரேன் (பற்றிக்ஸ்) |
| சகலதுறை ஆட்டக்காரர் | : செல்வின் லொஜிட் (பற்றிக்ஸ்) |
| சிறந்த களத்தடுப்பாளர் | : எம்.எஸ்.திலீபன் (யாழ்ப்பாணக் கல்லூரி) |
| சிறந்த துடுப்பாளர் | : ஆர்.வினோதன் (பற்றிக்ஸ் - முதலாவது) |
| | உதயகுமார் (யாழ்ப்பாணக் கல்லூரி - 2ஆவது) |
| சிறந்த பந்துவீச்சாளர்கள | : துஜன் (யாழ்ப்பாணக் கல்லூரி - முதலாவது) |
| | செல்வின் லொயிட் (பற்றிக்ஸ் - 2ஆவது) |
| சிறந்த இணைப்பாட்டம் | : ஆர்.வினோத் - விதுபாலா (பற்றிக்ஸ்) |
| விசேட விருதுகள் | : ஜனன்ராஜ் (பற்றிக்ஸ்) |
| | தனுஜன் (யாழ்ப்பாணக் கல்லூரி) |

# இந்தியா-அமெரிக்கா உறவு மேலும் வலுவடையும் என்கிறார் ரம்ஸ்பீல்ட்!

வாஷிங்ரன்,மார்ச்14

இந்தியா - அமெரிக்கா இடையே இராணுவ நிலையில் காணப்படும் உறவில் முன்னேற்றம் திருப்தி தரு வதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவத் தளபதி என். சி.விஜ்ஜை வெள்ளிக்கிழமை சந் தித்த ரம்ஸ்பீல்ட் இதனைத் தெரி வித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புப் போரில் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுப்பெறும் என்று அமெரிக்கா நம்புகின்றது. பயங் கரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவும் இந்தியாவும் முழு அளவில் ஈடுபட்டு வருகின்றன. இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப் பக்சுனை ஒக்சுமைப்ப முக்கியக்சு வம்வாய்ந்தது என்றும் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

இரு தரப்பு இராணுவமும் சேர்ந்து கூட்டுப் பயிற்சி நடத்துகின்றன; தக வல்களைப் பரிமாறிக்கொள்கின்றன. இத்தகைய பரஸ்பர ஒத்துழைப்பு வருங்காலத்தில் பலம் அடையும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க முப்படைத் துணைத் தலைவர் ஜெனரல் பீற்றர் பேஸ் மற் றும் விஜ் இருவரும் ஆலோசனை நடத்தியபோது அங்கு திடீரென வந்த ரம்ஸ்பீல்ட், விஜ்ஜைச் சந்தித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள அமெரிக்க முப்படைத் தளபதி ரிச்சர்ட் மையர்ஸ் சார்பில் விஜ்ஜைச் சந்தித்தார் பேஸ். இந்தி யாவில் சுற்றுப்பயணம் செய்ய ஆர் வத்துடன் இருப்பதாகவும் அவர் தெரி வித்தார்.

தெற்கு ஆசியா மற்றும் மத்திய கிழக்கில் தற்போது நிலவும் சூழலை மையமாக வைத்து பாதுகாப்பு விட யங்களில் இந்தியா கொண்டுள்ள கவலை, இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை அமெரிக்கா வுடன் பகிர்ந்து கொள்வது, பரஸ்பர ஆதாயத்துக்காக இராணுவ நிலையில் ஒத்துழைப்பைப் பலப்படுத்துவது, ஜெனரல் மாக்கருடன் தனிப்பட்ட நிலையில் உறவை வளர்ப்பது போன் றவை விஜ் பயணத்தின் நோக்கம் என்றும் தூதரகம் தெரிவித்தது.(ம)

# தீவிரவாதிகள் ஊடுருவலைத் தடுக்க ஈராக்கில் பாதுகாப்பு அதிகரிப்பு!

பத்தாக்,மார்ச்14

வெளிநாட்டுத் தீவிரவாதிகள் ஈராக்கினுள் நுழைவதைத் தடுக்கும் வகையில் மேலும் கடினமான புதிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என அங்கு இருக்கின்ற அமெ ரிக்க அதிகாரி போல் பிறீமர் அறி வித்துள்ளார்.

ஈராக் எல்லைப் பிரதேசங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட உள்ளது டன், நாட்டுக்குள் வந்துபோகக்கூடிய வகையில் உள்ள எல்லைக் கடவு களும் குறைக்கப்படவுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புகளை அதிகரிக்கும் வகையில் தற்போது எல்லைப்படை யாக இருக்கும் 8 ஆயிரம் பேரைக் கொண்ட துணைப்படையின் எண்ணிக் கையை இரண்டு மடங்காக அதிகரிப் பதற்கும் அமெரிக்கா தீர்மானித்துள் ளது.

இதைவிட ஈராக்கிற்குள் வந்து போகின்ற ஒவ்வொரு தனிமனிதனை யும் அடையாளம் காணக்கூடிய வகை யிலான புதிய ஆள் அடையாளத் திட்டமும் அறிமுகப்படுத்தப்படவுள் ளது.

கடந்த சில மாதமாக ஈராக்கில் இடம்பெற்றுவரும் குண்டுத் தாக்குதல் களுக்குப் பின்னால் வெளிநாட்டு கிளர்ச்சிக்காரர்கள் இருக்கலாம் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்ற னர்.

(ம-6)

## ஈராக்கில் குண்டுவெடிப்பு; ஒருவர் பலி!

பக்தாத்,மார்ச்14

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள கனராய் என்ற கடைகள், அலுவலகங்கள் நிறைந்த இடத்தில் நேற்று சனிக்கிழமை மாலை குண்டு வெடித்துள்ளது. இக்குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஒரு நபர் உயிரிழந்தது டன் பலர் காயங்களுக்குள்ளாகினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடை ஒன்றுக்கு அருகில் பையி னுள் மறைத்துவைக்கப்பட்ட குண்டு வெடித்ததாக ஈராக்கியப் பொலீஸார் கூறுகின்றார்கள். இக்குண்டு வெடிப் பில் உயிரிழந்தவர் ஈராக்கில் உள்ள கட்சி உறுப்பினர் ஒருவரின் மைத்து னர் எனத் தெரிவிக்கப்படுகிறது.(ம-6)

# ஸ்பெயின் குண்டுவெடிப்புக்கு பொறுப்பேற்கிறது அல்கெய்டா

துபை,மார்ச்14

ஸ்பெயின் தலைநகர் மட்றிட்டில் வியாழக்கிழமை நடந்த குண்டு வெடிப்புக்கு அல்கெய்டா தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்பதாகத் தெரிய வந்துள்ளது.

இதைப்போல் துருக்கி இஸ்தான் புல் நகரில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலுக்கும் அந்த அமைப்பு பொறுப்பேற்பதாக லண் டனில் வெளியாகும் 'அல் கத்ஸ் அல்அராபி' என்ற இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மார்ச் 11ஆம் திகதியிடப்பட்ட அந்த அறிக்கை அபு ஹப்ஸ் அல் மஸ்ரி படை/அல்கெய்டா என்ற அமைப்பின் பெயரில் அனுப்பட்டுள் ளது.

கூட்டணி நாடுகளின் தூண்க ளில் ஒன்றான ஸ்பெயினுக்கு அபு ஹப்ஸ் அல் மஸ்ரி பிரிகேட் தற் கொலைப் படை பலத்த அடி கொடுத் துள்ளது என்கிறது அந்த அறிக்கை.

ஈராக் மீது அமெரிக்கா படை யெடுத்தபோது, அதற்கு ஆதரவாக 1,300 துருப்பினரை ஸ்பெய்ன் பிரத மர் ஜோஸ் மரியா அஸ்னர் அனுப்பி யிருந்தார்.

அவரைக் கேள்வி கேட்கும் வகை யில் அறிக்கையில், உங்களை யார் காப்பாற்றப் போகிறார்கள், பிரிட்டனா? ஜப்பானா? இத்தாலியா? அமெரிக்கா வின் கூட்டாளி நாடா? எனக் குறிப் பிடப்பட்டுள்ளது.

இதைப்போல் துருக்கியில் தங் கும் விடுதியில் கடந்த செவ்வாய் இரவு நடந்த தாக்குதலுக்கும் அதே அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இஸ்தான்புல் நகரில் உள்ள யூதர்களின் விடுதியின் மீது ஜண்ட் அல்கத்ஸ் போராளிகள் தாக்குதல் நடத்தினர். அதில் மூவர் இறந்தனர்.(ம)

14 ஆண்டுகளின் பின்னர்

# பாகிஸ்தான் மண்ணில் நேற்று இந்தியாவுக்கு பரபரப்பான வெற்றி!

கராச்சி,மார்ச்14

இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையே 14 வருடங்களின் பின்னர் பாகிஸ்தானின் கராச்சி மைதா னத்தில் நேற்று நடைபெற்ற பரபரப் பான முதலாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 5 ஓட்டங்களால் வெற் றியீட்டியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ் தான் அணித் தலைவர் இன்சமாம் உல ஹக், இந்திய அணியை முதலில் துடுப் பெடுத்தாடக் கேட்டார். களம் இறங் கிய இந்திய அணியின் வீரர்கள், பாகிஸ் தான் பந்துவீச்சாளர்களைத் துவம்சம செய்தனர். ஆரம்பம் முதலே ஓட்டங் களை விரைவாகக் குவித்தனர். 50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 349 ஓட டங்களைப் பெற்றது. அணியின் சார் பில் ராகுல் ட்ராவிட் 99 ஓட்டங்களை யும் ஷேவாக் 78 ஓட்டங்களையும் விளா சினர். அணித் தலைவர் சௌரவ் கங குலி 45 ஓட்டங்களையும் முகமட் கைவ் 47 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பாகிஸ்தான் அணியின் சார்பில் ஷொகைப் அகதர், முகமட் சமி ஆகி யோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப் பற்றினார்கள். தொடர்ந்து ஆடத் தொடங்கிய பாகிஸ்தான் அணியும்



விரைவாக ஓட்டங்களைக் குவிக்க முற்பட்டது. இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் பாலாஜி, பாகிஸ்தா னின் வேகத்துக்குத் தடையிட்டார். 50 ஓட்டங்களுக்குள் தமது முதலாவது விக்கெட்டை இழந்தது அந்த அணி. தொடர்ந்து வந்த யூசுப் யுகானாவும் அணித் தலைவர் இன்சமாமும் மிகத் திறமையான ஓர் இணைப்பாட்டத்தைக் கொடுத்தனர். இருவரும் இந்திய பந்து வீச்சைத் துவம்சம் செய்தனர். யூசுப் யுகானா 73 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்த போதும் இன்சமாம் தொடர்ந்து நிலைத்து நின்றாடினார். அவர் 122 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முரளிகார்த்திக்கின் பந்துவீச்சில் ஆட்ட மிழந்தார்.

தொடர்ந்து விளையாடிய யூனுஸ் கான் 46 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத் தார். இதனால், இரண்டு அணிகளில் எந்த அணி வெற்றிபெறும் என்று தீர் மானிக்க முடியாதளவிற்கு ஆட்டம் மிகவும் பரபரப்பாகச் சென்று கொண்டி ருந்தது. மைதானத்தில் குழுமியிருந்த ரசிகர்கள் இருக்கைகளில் இருந்து எழுந்து நிற்குமளவுக்குப் போட்டி உச் சக்கட்டத்தை அடைந்தது.

இறுதியில் ஓர் ஓவரில் 9 ஓட்டங் களைப் பெறவேண்டிய நிலையில் இருந்த பாகிஸ்தான் அணிக்கு கடைசி ஓவரை ஆசிஸ் நெஹ்ரா வீசினார். அந்த ஓவரில் 3 ஓட்டங்களை மட்டும் எடுத்து பாகிஸ்தான் அணி 5 ஓட்டங்களால் தோல்வியுற்றது. இந்திய அணியின் சார்பில் சஹீர்கான் 3 விக்கெட்டுக்க ளையும் முரளிகார்த்திக் 2 விக்கெட்டுக் களையும் பாலாஜி, நெஹ்ரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தி னார்கள். ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்சமாம் தெரிவு செய்யப்பட்டார். (ம-10)

| | | | |
|---|---|---|---|
| சூ. ▲ புத. | வெ. ராகு | செவ். | சனி |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | வியா. |
| சந். | | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 14-03-2004 - 20-03-2004

### மாற்றம்

14.03.2004 மூலம் நட்ஷத்திரம் - தனுசு இராசியில் சந்திரன் நிற்கும். வடக்கு - கிழக்கு அரசியலில் எதிர்பாராத திசை திருப்பங்கள் கொடுக்கும். மனமாற்றங்கள் ஏற்படும். தேர்தலில் வன்முறைகள் அதிகரிக்கும். ஆயினும், வெளிநாட்டு அழுத்தங்கள் அதிகரித்தபடி இருக்கும். திசை மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும். புலிகளின் பலம் அதிகரிக்கும். கூட்டமைப்பு வடக்கில் செல்வாக்குப்பெறும். இந்தியாவில் தேர்தல் பிரசாரம் உச்சக் கட்டமடையும். தலைவர்கள் சிலரின் உயிருக்கு அச்சுறுத்தல் வரும். மத்திய கிழக்கில் அழிவுகள், எதிர்பாராத திசை திருப்பம் ஏற்படும். அரபிக், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் வெப்பம் அதிகரித்து நோய்களால் மக்கள் வேதனைப்படுவர். வடக்கே பனி வீழ்ச்சி நிலை மெல்லமெல்ல மாறும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

அரசியலில் விளையாட்டு, மக்களுக்கு வேதனை. தொழில் ஸ்தானத்தில் கலகலப்பான காலமாகும். சங்கீதச் செலவுகள், குடும்பத்தில் குதூகலம், பிறசர்கூடும், உடல்நிலைத் தாக்கம், தலைவலிவரும். குடும்பத்தில் அமைதி இராது. எதிலும் அலட்சியப்போக்கு, அரசியல் வாதிகளின் தலையீடு, சகோதரங்களின் உதவிகள் கிடைக்கும். பொருளில் கொடுக்கல், வாங்கலில் நிதானமாக இருக்கவும். பொருள் வரவு விட்டுவிட்டுக் கிடைக்கப் பலன்கள் உண்டு.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வியாழன்.*

### இடபம்

விதியின் செயற்பாட்டை எவரும் இலகுவில் கண்டு பிடித்து விடமுடியாது. அரசியலில் எதுவும் நடக்கச் சந்தர்ப்பங்கள் உண்டு. நினைப்பது ஒன்று செய்வது ஒன்றாகும். ஆஸ்பத்திரிச் செலவுகள் இருக்கும். போக்குவரத்தில் கவனம் தேவை. இழப்புக்களைச் சந்திக்க நேரிடும். எதிர்ப்பாலாருடன் வாக்குக் கலகம் வரும். மாமன் வழியிலிருந்து உதவிகள் கிடைக்கும். எண்ணெய், பாதுகாப்பு, தரகு போன்ற துறைகளிலிருந்து இலாபங்கள்வரும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன்.*

### மிதுனம்

தொழில் பிரச்சினைவரும். பொருள் வரவு உண்டு. நண்பர்கள் எதிர்ப்பார்கள். கல்வி நிலை மாறும். மாணவர்களுக்குப் புதிய இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். குடும்பத்தினருக்காக ஓடியாடித் திரிய நேரிடும். அயலவர்கள் உதவி செய்வார்கள். சளி, வாய்வு, தலைப்பாரம் கொடுக்கும். பிரயாணங்கள் நல்லதல்ல. வியாபாரிகள், வைத்தியத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன்.*

### கடகம்

அரசியல் வாதிகளுக்கு நல்ல காலமாகும். அடிக்கடி மாற்றங்கள் கொடுக்கும். மன மாற்றம், இடமாற்றங்கள் ஏற்படும். பேச்சுச் சாதுரியத்தால் நன்மைகள் அதிகரிக்கும். வீடு வாகன யோகங்கள் கொடுக்கும். பிறசர், வயிற்றுநோ, சளித்தன்மை கொடுக்கும். கடற்தொழில், பிரயாணத்துறை, அரசியல்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன்.*

### சிங்கம்

உதயத்ததிபதி சூரியன் அட்டமத்தில் இருப்பதனால் இடமாற்றங்கள் கொடுக்கும். தந்தைக்கு - தந்தை வழியினருக்கு நல்லதல்ல. நண்பர்கள் தூரஇடங்களிலிருந்து நன்மைகள் செய்வார்கள். அலைச்சலுண்டு. வாகன சுகம். செலவுகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமைகள் கொடுக்கும். குருத்துறை, உலோகப் பொருள்கள் செய்பவர்கள், இயந்திரம் சம்பந்தப்பட்டவர்கள் நன்மைகள் அடைவார்கள். சளித் தொல்லை கால் உளைவுகளுக்கு மருந்து எடுங்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன்.*

### கன்னி

வீட்டில் வைத்தியச் செலவு, புத்திரர்களுக்கு உடல்நிலைப் பாதிப்பு என்பன கொடுக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். எதிர்ப்பாலாரால் வீண் பிரச்சினைகள் கொடுக்கும். வரவுக்கு மீறிய செலவுகளால் வேதனை கொடுக்கும். சளித் தொல்லை, வாய்வுத் தொல்லை, தொண்டை நோ வரும். மின்சாரப் பகுதி, புடைவைப் பகுதி, இசைத்துறை, பத்திரிகைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வியாழன்.*

### துலாம்

குடும்பத்தவர்களுக்கு உடல்நிலை பாதிப்புக்கள் வரஇடமுண்டு. சட்டத்திற்கு மாறான செயற்பாடுகள், வீடு, வாகனம் சம்பந்தமான பலவீனம் கொடுக்கும். அரசியல் வாதிகளுக்கும், சட்டத்துறை, பாதுகாப்பு மற்றும் குருத்துறையினருக்கும் மாற்றங்களும், நன்மைகளும் புத்திரர், சகோதரங்களுக்கு பல நன்மைகளும் கொடுக்கும். கொடுக்கல் வாங்கலால் பிரச்சினைகள் வர இடமுண்டு. கிட்னி, நரம்பு சம்பந்தமான வருத்தங்கள் கொடுக்க இடமுண்டு.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வியாழன்.*

### விருச்சிகம்

நீங்கள் திட்டமிட்டதைச் செயற்படுத்த முடியாமல் அவதிப்படுவீர்கள். பணவரவு கொடுக்கும். ஆயினும், எதிர்ப் புணர்வு இனஜனங்களிடையே இருக்கும். பொருள் விஷயங்களில் அவதானமா[illegible] இருங்கள். சகோதரர்கள் எதிர்ப்பார்க[illegible] பொருள் தவறும் அல்லது களவு போகலாம். நாரி நோ, சளி[illegible]டைவருத்தம் கொடுககும். அடிக்கடி களைப்பு வரு[illegible] [illegible]பாரிகள், சட்டம் - அரசியல துறையினர்கள் நன்மை அ[illegible]கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன்.*

### தனுசு

உத்தமர்கள் உறவில் பல நன்மைகள் பெறுவீர்கள். சலனமனம் இருக்கும். இருக்கும் இடத்திலேயே உறுதி நிலை கொடுக்கும். காணிபூமி சம்பந்தமான மாற்றங்கள் கொடுக்கும். கொடுத்த பொருள்வராது. மூட்டுநோ, சளி, கால் உளைவு கொடுக்கும். கலைத்துறை, புத்தகத் துறை, அச்சுத்துறை, குருத்துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். பிரயாணங்களைத் தவிர்த்தல் நன்று.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன்.*

### மகரம்

இனஜனங்கள் நன்மைகள சொல்லமாட்டார்கள். மறைமுகப்பகை தொழில் ஸ்தானத்தில் இருக்கும். பொருள்கள் தவறலாம். சிலருக்கு இடமாற்றம ஏற்பட்டு வேதனை கொடுக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். தூரத்துச் செய்திகள் மன ஆறுதலைக் கொடுக்கும். நாரிநோ, வயிற்றுவலி கொடுக்கும். சளித்தொல்லை தரும். திட்டமிட்டபடி தொழில்ஸ்தானத்தில் நடக்கமாட்டீர்கள். கடற்றொழில், குருத்தொழில் செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன்.*

### கும்பம்

ஏன் அடிக்கடி கோவிக்கிறீர்கள். உங்கள் ஆலோசனைப்படி பலரை உருவாக்க ஆலோசனை சொன்னபடி இருப்பீர்கள். சிலர் ஆலோசனைகளைக் கேட்காத பட்சத்தில் கோவிப்பீர்கள். பணம் வரும். தெய்வ பக்தியுள்ளவர்கள் உதவி தருவர். உறவினர்கள் நன்மை செய்வா[illegible] இடமாற்றங்களைத் தவிர்க்கவும். கால் வருத்தம், தொண்டை வரட்சி, மூட்டு வலி என்பன கொடுக்கும். இது சந்தை வியாபாரிகள், அரசியல் வாதிகள், ஆசிரியர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும் காலமாகும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன்.*

### மீனம்

தொழில் ஸ்தானத்[illegible] புதிய திட்டம் தீட்டுவீர்கள். இடமாற்றங்களால் நன்மைகள் அதிகரிக்கும். பணவரவு கொடுக்கும். அன்னிய நாட்டிலிருந்து புதிய செய்திகள்வரும். புத்திரர்கள் சிறப்படைவார்கள். வருமான அதிகரிப்பு வருங்காலச் செயலாக்கத்திற்கு அத்திபாரமிடுவீர்கள். சல வருத்தம், சளித்தொல்லை வரும். கடற்றொழில் செய்பவர்கள் மது பானச்சாலை வைத்திருப்பவர்கள் மற்றும் பிரயாணத்துறை, வியா பாரத் துறை, அரசியல்துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியா[illegible]*

**மகாதேவா ஜோதி[illegible]**

---

# தவக்காலத்தில் தவறுகளைத் திருத்தி புதிய வாழ்வுக்கு அத்திபாரமிடுவோம்!

தவக்கால மூன்றாம் ஞாயிறுவார சிந்தனையானது காய்க்காத அத்திமரத்தின் சம்பவத்தைச் சுவை பட எடுத்துக் கூறிநிற்கிறது. இந்த அத்திமரத்தின் கதையினைப் படிக்கும்போது ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு. அக்காலத்தில் அவை நடந்தேறியாக வேண்டும். அவை நடைபெறவில்லை என்றால் அதன் தாக்கங்களையும், எதிர்த்தாக்கங்களையும் நாம் அனுபவிக்கவேண்டும் என்றொரு எண்ணம் அன்றாட அனுபவத்தின் அடிப்படையில் மனதில் எழுவது தவிர்க்கப்பட முடியாததாகிறது.

வேதாகமத்தின் சபை உரையாளர் என்ற நூலிலிருந்து இக்காலங்கள் பற்றிய ஒரு கணிப்பைப் படிக்கக் கூடியதாக இருக்கிறது. ஒவ்வொன்றிற்கும ஒரு காலம் உண்டு. ஒரு நேரம் உண்டு. அதற்கேற்ற விதமாகத்தான உலகில் எல்லா விடயங்களுமே நடக்கின்றன. பிறப்பிற்கொரு காலம். இறப்பிற்கொரு காலம் நடுகைக்கு ஒரு காலம. அறுவடைக்கு ஒருகாலம். கொல்லுதலுக்கு ஒரு காலம். குணப்படுத்தலுக்கு ஒரு காலம். இடித்தலுக்கு ஒரு காலம் கட்டுதலுக்கு ஒரு காலம் அழுகைக்கு ஒரு காலம். சிரிப்பிற்கு ஒரு காலம். துயரப்படுதலுககு ஒரு காலம். துள்ளி மகிழ்தலுக்கு ஒரு காலம். கற்களை எறிய ஒரு காலம். கற்களை சேர்க்க ஒரு காலம். அரவணைக்க ஒரு காலம். அரவணையாது இருக்க ஒருகாலம். தேடிச் சேர்ப்பதற்கு ஒரு காலம். இழப்பதற்கு ஒரு காலம். காக்க ஒரு காலம் தூக்கி எறிய ஒரு காலம் கிழிப்பதற்கு ஒரு காலம் தைப்பதற்கு ஒரு காலம். பேணுவதற்கு ஒரு காலம். பேசாதிருப்பதற்கு ஒரு காலம் அன்புக்கு ஒரு காலம் வெறுப்புக்கு ஒரு காலம். போருக்கு ஒரு காலம் அமைதிக்கு ஒரு காலம் என்று ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலம் உண்டு. காலத்தின் தன்மையையும தேவையையும் உணர்ந்தே எமது வாழ்வும அன்றாட நிகழ்வுகளும் நகர்ந்து செல்கின்றன.

அத்திமரத்தின் கதையைப் படிக்கின்றபோது அத்திமரம் நடப்பட ஒரு காலம் இருந்ததையும் பயன்தர ஒரு காலம் இருந்ததையும் அறியக்கூடியதாக இருக்கிறது. உரியகாலத்தில் அது பயன்தராவிட்டால் அர்த்தமற்றதாக அகற்றப்படவேண்டியதுதான் என்றும் உணரக்கூடியதாக இருக்கிறது. இந்த எண்ணக்கருக்களோடு காய்க்காத அத்தி

**ஞாயிறு நற்பிரசாதம்**

மரத்தின் கதைகக்கு வருவோம்.

ஒருவர் தனது திராட்சைத் தோட்டத்திலே அத்திமரம் ஒன்றை நட்டு வைத்தார். ஒரு மரத்தினை நடுகின்றபோது அதன் நிழலினைப் பெறவேண்டும். அதன் பயனைப் பெறவேண்டும் என்ற ஏக்கமும், எதிர்பார்ப்பும் ஒவ்வொருவரிடமும் இருக்கவே செய்கிறது. அத்தகைய நோக்கத்துடன்தான் மரங்களை நட்டு வைக்கிறோம். இப்பயன்களை நாம் பெறவில்லை என்றால் மரம் நட்டதிலும் அதனைப் பாதுகாத்து வளர்த்ததிலும் அர்த்தமில்லை.

அத்திமரத்தை நட்டவருக்கு இப்படியான ஓர் அனுபவம் நிகழ்ந்திருக்கிறது. மரத்திலே கனியைத்தேடினார். அவரால் எதனையுமே காணமுடியவில்லை. தோட்டத் தொழிலாளரை அழைத்து மூன்று ஆண்டுகளாக இந்த அத்திமரத்தில் கனியைத் தேடி வருகிறேன். ஒன்றையும் காணவில்லை. இதை வெட்டிவிடு. வீணாக இடத்தை அடைத்துக் கொண்டிருக்கிறது. தொழிலாளருக்கு கட்டளையிட்டார். தொழிலாளரின் பதிலோ இரக்கம் நிறைந்ததாய், மனம் திரும்ப அழைப்பு விடுப்பதாய் புதிய வாழ்வுக்கு அத்திபாரம் இடுவதாய ஒருவரின் காலத்தை இன்னும் அதிகரிப்பதாய் இருக்கிறது. தொழிலாளரின் மறுமொழி இதுதான் இந்த ஆண்டும் இதை விட்டுவிடும். நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுகிறேன். அடுத்த ஆண்டு கனிகொடுத்தால் சரி, இல்லையானால இதை வெட்டிவிடலாம்.

தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு வாரத்தில் தரப்படும் இக்கதையானது மனமாற்றத்தை மனிதர்களிடமிருந்து வேண்டிநிற்கும் ஒரு கதையாக அமைந்திருக்கிறது. மூன்று ஆண்டுகள் காத்திருந்து கனிபெற முடியாவிட்டாலும் மேலும் கால அவகாசம் கொடுக்கப்படுகிறது. அக்காலத்தில் கனிகொடுப்பது அத்திமரத்தின் அவசர தேவையாக இருக்கிறது. இல்லாவிட்டால் அது அழிக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகிவிடும்.

இத்தவக்காலத்தில் மனம் திரும்பாவிட்டால் நீங்கள் அழிவீர்கள் என்பதே இக்கதையின் பின்னால் பொதிந்து எமக்குத் தரப்படுகின்ற பாடமும் படிப்பினையுமாகும். மனித வாழ்விற்கு மனமாற்றம் எப்போதும் அவசியமானது.

**அருள்திரு.ரூபன் மரியாம்பிள்ளை**

தமது வாழ்வை, வாழவின் நிலையை, அதன் பயனை, பயனற்ற தன்மைகளை நின்று நிதானித்துப் பார்க்கவும், அறியவும், ஆய்வு செய்யவும் ஒவ்வொருவருக்கும் ஒரு காலத்தேவை. அக்காலமே இத்தவக்காலமாகும். உண்மையில் இக்காலம் இரக்கத்தின் அடிப்படையில் தரப்பட்ட ஒரு காலம். எமது பயன்தரா நிலைமையைக்கண்டு தரப்பட்ட ஒரு கால அவகாசம். இக்காலத்தில் நாம் நின்று நிதானிப்பதன் வழியாகப் பயனற்றுக் கிடக்கும் ஒரு காலத்தைக் கடந்து பயன்தரும் ஒரு காலததிற்கு நகர்ந்துசெல்ல அழைக்கப்படுகிறோம்.

இத்தவக்காலத்தில் நாம் செய்ய வேண்டிய பணிகள் என்ன? சொல்லாலும் செயலாலும் கடமையில் தவறியதாலும் செய்த தவறுகள் என்ன? என்று ஆராய்ந்து பார்த்து அவற்றைத் திருத்தி ஒரு புதிய வாழ்விற்கு அத்திபாரம் இடவேண்டும். *



குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதிய 'நாடக வழக்கு' நூல் வெளியீட்டு விழா அண்மையில் இணுவில் கலை இலக்கிய வட்டத்தினால் நடத்தப்பட்டது. நூலின் சிறப்புப் பிரதியை பேராசிரியர் சபா.ஜெயராசாவிடமிருந்து யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் பெற்றுக்கொள்வதை முதல் படத்திலும் -

பேராசிரியர் சபா.ஜெயராசா, இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், ஆறு.திருமுருகன், த.சிவகுமாரன், கந்தையா ஸ்ரீகணேசன், கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் அடுத்த படத்திலும் காணலாம்.

## இலவச பாடநூல்கள்

தென்மராட்சி, மார்ச்14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான இலவச பாடநூல்கள (தரம் 6 உட்பட) நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணி வரை கோட்டக் கல்வி அலுவலகத்தில் விநியோகிக்கப் படுமென கோட்டக் கல்வி அலுவலா் நா.சத்தியநாதன் அறிவித்துள்ளாா்.

அன்றையதினம் சகல பாடசாலை அதிபர்களும் வந்து தமக்குரிய பாடநூல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளாா். (ஐ-117)

## கோழிகளுக்கு தடுப்பு மருந்து

யாழ்ப்பாணம்,மார்ச்14

அரியாலை-நாயன்மார்கட்டு அம்பாள் சனசமூகநிலையத்தில் வைத்து இன்று காலை 9.30 மணிமுதல் கோழிகளுக்கான இலவச தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளதாக கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் அறிவித்துள்ளாா். (எ-10)

## பாதுகாவலா் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்14

காணாமற்போனோர் பாதுகாவலா சங்கத்தின் கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்பலாலி வீதியில் அமைந்துள்ள அன்னையர் முன்னணி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (எ-10)


## தேவை

இரசாயன இயற்கை
உர உற்பத்திப் பொருள்களை
சந்தைப்படுத்துவதற்கு
விற்பனை முகவர்கள் தேவை.
(REP) விவசாயத்துறையில்
அறிவும் அனுபவமும் உள்ளோர்
சான்றிதழுடன்
விண்ணப்பிக்கவும்.

**ML&CO**
235,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:222-2506
(29645)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி செல்லம்மா பொன்னு

*அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்த அன்புத் தெய்வமே!*
*உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (14.03.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*90. புங்கன்குளம் வீதி,*
*கொழும்புத்துறை.*

- குடும்பத்தினர்.

(இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்)

(29622)(34-19-16)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 02 - 06 - 1953



விண்ணுலகில் 25 - 03 - 2003

### அமரர் வேல்விநாயகம் வேலையா

திதி:14.03.2004

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
ஆறாது எம் நெஞ்சம்
தீராத வேதனையால் துடித்தே அழுகின்றோம்
மாறாத உமது அன்பு முகத்தை எப்போ இனிக்காண்போம்.
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்

*பாடசாலை வீதி,*
*ஆழியவளை,*
*தாளையடி.*

(29643)(21-19-16)

உங்கள் நினைவுடன்:
**மனைவி, பிள்ளைகள், உறவினர்.**

## மரண அறிவித்தல்கள்



### திருமதி நாகம்மா சம்பந்தர்

61, பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா சம்பந்தர் 11.03.2004 வியாழக்கிழமை காலமானாா்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி மதுரைநாயகத்தின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற சம்பந்தர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம், ஜெயமகாராணி (கனடா), சர்வலட்சுமி, இராஜேந்திரம் (ஜேர்மனி), முருகானந்தம் (கொழும்பு), சாந்தகுமார் (சிமெந்துக் கூட்டுத்தாபனம் - இலங்கை), சிவகுமார் (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நகுலேஸ்வரி சிவநாதன் (கனடா), காலஞ்சென்ற சத்தியதேவன் (ஓய்வுபெற்ற தொழில் நுட்பவியலாளர்) மற்றும் இராஜேஸ்வரி (ஜேர்மனி), மனோரஞ்சினி, நந்தினி ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் பத்மாவதி, காலஞ்சென்ற வேதநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுஜித்குமார், ஜெயவாணி, நித்தியகல்யாணி, சயந்தன், சஞ்சய், கம்ஸத்வனி, நர்மதா, ஜெயசக்தி, ஜனகன், சிவாஞ்சலி, நிசாந்தினி, சாந்தலோகினி, சாந்தரூபினி, நிசாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கோகுலனின் பூட்டியுமாவாா்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (14.03.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு (புதிய நேரம்) கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*(193) 61, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(29641)(39-16-19-21)

தகவல்:
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்.**

### நாகலிங்கம் சிவபாலன்

(உரிமையாளர், நாகலிங்கம் அன்சன்ஸ், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம், நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும 190ஆம் கட்டை, நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவபாலன் நேற்று (13.03.2004) சனிக்கிழமை காலமானாா்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துத்தம்பி மற்றும் இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தமலர் (குஞ்சு) அவர்களின அன்புக் கணவரும் குணபாலன் (இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி), வசந்தகோகிலம் (கொழும்பு), வசந்தகுமாரி (கனடா), தேவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாந்தநாயகி, சாந்தகுமாரி, சாந்தகோகிலம் (தாதி, யாழ். போதனா வைத்திய சாலை), சந்திரன், சாந்தரூபி (மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நித்தியகலா, காலஞ்சென்ற வசந்தன் , பாலேந்திரன், கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் மகாலிங்கம், சமன், பஞ்சலிங்கநாதன் (யாழ். போதனா வைத்தியசாலை), கல்யாணி, ஸ்ரீரூபன் ஆகியோரின் சகலனும் ஆவாா்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும். .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*190ஆம் கட்டை,*
*நுணாவில் மேற்கு,சாவகச்சேரி.*

(29640)(24)

தகவல:
நா.குணபாலன்
(சகோதரன்).


## வன்னிக்கு வளமான வாழ்வு தந்து எம்மை உயர்த்திய தலைவன்



**வீ.ஆனந்தசங்கரி**
முன்னாள் - நா.உ.
யாழ்ப்பாணம்
இல : 4

அகதியாய் அழிபட்டு ஓடி வந்த எங்களுக்கு

- வாழ்வு தந்து,
- குடியிருக்க நிலம் தந்து
- வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கி

கிளிநொச்சி மாவட்டத்தின் பெருமையையும் தகைமையையும் உயர்த்திவைத்த பெருமகன்.

※ நின் நாமம் சொல்ல எத்தனை புதுக்கிராமங்கள் அத்தனையும் சீரழிந்து, சின்னாபின்னப்பட்டாலும் தங்களின் சேவையால் மீண்டும் எம் மாவட்டம் புதுப்பொலிவு பெறும் என்று நம்பும் பல்லாயிரக்கணக்கான மக்களின்............



**இ. சங்கையா**
முன்னாள் தொ.நு.உதவியாளர்
யாழ்.பல்கலைக்கழக
மருந்துவபீடம்
இல : 5

# வீ. ஆனந்தசங்கரி (தலைவர் - தமிழர் விடுதலைக் கூட்டணி)

தலைமையிலான

## சுயேச்சைக் குழு : 1

X 4 5

அமோக ஆதரவுடன் பெருவெற்றியைக் கொடுப்போம் - கிளிநொச்சி மாவட்ட மக்கள்.

குறிப்பு : எக்காரணங்கொண்டும் சுயேச்சைக்குழு 01 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளாது என உறுதியாகத் தெரிவிக்கின்றோம். வீண் வதந்திகளைத் தயவுசெய்து நம்பவேண்டாம்.

உதயன்

## கட்டுக்கோப்பை விட்டுக் கொடுக்கலாமா?

ஈழத் தமிழினத்துக்குத் தென் தமிழீழத்திலிருந்து கருணாவும் அவரது அடியாள்களும் செய்த வரலாற்றுத் துரோகமும் அதற்குத் தென்னிலங்கை மற்றும் இந்திய ஊடகங்கள் கொடுக்கும் அளவுக்கு மீறிய - முறையற்ற - பிரசாரமும் முழுத் தமிழினத்தையும் வேதனைக்கும் விசனத்துக்கும் எரிச்சலுக்கும் உட்படுத்திக் கொண்டிருக்கின்றன.

கருணா என்ற தனிமனித அதிகார ஆசைக்காக ஓர் இனத்தின் முழு விடுதலைப் போரே - 17 ஆயிரம் போராளிகளின் உயிரிலும் உதிரத்திலும் உடலிலும் கட்டியெழுப்பப்பட்ட விடுதலை வேள்வியே - விலைபோய் விடும் அவல நிலைமை இன்று உருவாகியிருக்கின்றது.

ஈழத் தமிழரின் தாயகம் என்ற அடிப்படைக் கோட்பாட்டையே தமது சுயநல ஆதிக்கத்துக்காக விற்க முனைந்திருக்கும் ஒரு நயவஞ்சகக் கூட்டத்தின் பின்னால் ஒரு சில நூறு அல்லது ஒரு சில ஆயிரம் பேராவது திரளுகின்றார்கள் என்பது ஈழத்தமிழினத்துக்குக் கிடைத்த சாபக்கேடே அன்றி வேறில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது வெறும் அரசியல் இயக்கம் அல்ல; அல்லது ஓர் அரசியல் கட்சியல்ல; இராணுவக் கட்டமைப்புடன் கூடிய ஒரு விடுதலை அமைப்பு. கரந்தடிப் படையாகத் தொடங்கி பெரும் மரபு வழி இராணுவமாக அது பரிணமித்து நிற்கின்றது. வெறும் சொல் அளவில் இல்லாமல் - செயல் அளவில் - அளவிடமுடியாத ஈகங்களைப் புரிந்து, பெரும் சமர்க்களங்களில் தீரத்துடன் போராடி, தன்னை மரபு வழி இராணுவமாக அது வளர்த்துக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் இரண்டு இராணுவங்கள் உள்ளன என்று சர்வதேசமுமே ஒப்புக்கொள்ளும் விதத்தில் இலங்கை அரச இராணுவத்தைப் போன்று தனது இராணுவ வல்லாதிக்கத்தையும் விரிவுபடுத்தி, ஸ்திரப்படுததித் தன்னை நிலைப்படுத்தியிருக்கின்றது விடுதலைப் புலிகள் அமைப்பு.

இலங்கையில் அமைதி முயற்சிகளும், சமாதான நடவடிக்கைகளும் தொடர்கின்றன. யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருக்கின்றது. பொதுத் தேர்தலுக்கு விடுதலை அமைப்பானது புலிகள் இயக்கம் ஒத்துழைப்பு அளிக்கின்றது.

இதன் அர்த்தம் புலிகள் அமைப்பு, இராணுவக் கட்டமைப்பிலிருந்து அரசியல் கட்சியாக மாறிவிட்டது என்பதல்ல.

தமிழினத்தின் பலமே - சக்தியே - விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமையும், அதிகாரமும் தான்.

தமிழினத்தின் விடிவே அந்த இராணுவ வலிமையில் தான் தங்கியுள்ளது.

இந்தப் பத்தியில் ஏற்கனவே நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியது போன்று அந்த இராணுவ வலிமைக்கு - தமிழினத்தின் ஏகோபித்த, ஏகபோக பிரதிநிதித்துவத்துக்கு - மேலும் அரசியல் வலிமை சேர்ப்பதற்காகவே ஜனநாயகத் தேர்தலைத் தமிழ் மக்களும், புலிகளும் அதற்கேயுரிய பலபக்கப் பங்களிப்போடு பயன்படுத்த முயல்கின்றனர்.

அதற்காக விடுதலைப் புலிகள் இயக்கம், இராணுவக் கட்டமைப்புடன் கூடிய தனது செயற்பாட்டை .இழந்து அரசியல் கட்சியாகிவிட்டது என்று அர்த்தம் அல்ல.

மட்டக்களப்பு, அம்பாறையில் கருணாவின் பக்கம் சாய்ந்துள்ளோரின் தூண்டுதலின் பேரில் சில சலசலப்புக்களைச் செய்வோர், ஏதோ அரசியல் கட்சி ஒன்றிலிருந்து ஒரு பிரமுகரை வெளியேற்றியமை போன்றும், அதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது போன்றும் ஆரவாரம் செய்கின்றார்கள். அவற்றைத் தென்னிலங்கை மற்றும் இந்திய ஊடகங்கள் அளவுக்கு அதிகமாக ஊதிப்பெருப்பித்துக் காட்டவும் செய்கின்றன.

இது இனத்தின் வீடுதலைக்கான அமைப்பு, இராணுவக் கட்டமைப்புக்குரிய ஒழுக்கமும், கடப்பாடும், கண்டிப்பும் அவற்றைமீறும்போது கடும் தண்டனையும்தான் இந்த விடுதலை அமைப்பை ஒரு மரபு வழி இராணுவமாக உயர வழி செய்தன என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

இனத்தின் விடுதலைப்போராட்டம் அதன் இலக்கை அடையும் வரை இந்தக் கண்டிப்பும், கட்டுக்கோப்பும் மேன்மேலும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதே இனத்தின் விடுதலையை வேணவாவாகக் கொண்ட அனைவரினதும் கருத்தாக உள்ளது.

இது, அரசியல்வாதிகள் நாற்காலிக்கு நடத்தும் சண்டை போன்ற விவகாரம் அல்ல என்பதை, மட்டக்களப்பில் மக்கள் பங்களிப்பு என்ற பெயரில் சலசலப்புக் காட்டுவோர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

கட்டுக்கோப்பான இயக்கத்தைக் கட்டிவளர்த்து வந்த விடுதலைப் புலிகள் இயக்கம், எத்துணை அழிவு வந்தபோதும் தனது கட்டுக்கோப்பை விலைபேச அனுமதிக்கவில்லை. அதுதான் எத்துணை வீழ்ச்சியிலும் வீறு கொண்டெழுந்த அதன் உயர்ச்சிக்குக் காரணம்.

இந்த விவகாரத்தில் அந்த நிலைப்பாடு உறுதிக்கு உறுதி செய்வதாகவே தென்படுகின்றது.

எனவே, அடியாள்களை வைத்து ஆரவாரம் நடத்துவோர், என்றோ ஒரு நாள் யதார்த்தத்தைத் தாங்கள் சந்திக்க வேண்டியவர்களாக இருப்பார்கள். இதனை அவர்கள் மறந்து செயற்படுவது, எவ்வகையிலும் நல்லதும் அல்ல; புத்திசாலித்தனமானதும் அல்ல.

# வடக்கு - கிழக்கு என்ற பேதங்கள் பாராது மண்ணை மீட்கவே பிள்ளைகளை அனுப்பினோம்

## அம்பாறை கூட்டமைப்பு வேட்பாளர் தெரிவிப்பு

அம்பாறை,மார்ச்14

தமிழீழத் தேசியத் தலைவருக்குக் கீழே ஒன்றுதிரண்டு எமது தமிழீழத் தேசத்தை மீட்பதற்காகத்தான் தாய்மார்கள் தமது பிள்ளைகளைப் போராட்டத்துக்கு அனுப்பினார்களே தவிர, வடக்குக்கென்றும் கிழக்குக்கென்றும் தனித்தனியாக அனுப்பவில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் அம்பாறை மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் திருமதி சபாபதி யோகாம்பிகை.

மட்டக்களப்பு நிலைமைகள் தொடர்பாக பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது மட்டக்களப்பில் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினையானது மக்கள் மத்தியில் ஏற்பட்ட ஒரு திடீர்ப் பிரச்சினைதான்.

வடக்கு - கிழக்கு இணைந்த தமிழீழதேசம் ஒரு தேசியத் தலைவருக்குக் கீழ் விடுதலை பெறவேண்டும். எமது தமிழ் இனம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவே எமது தாய்க் குலம் தமது பிள்ளைகளைப் போராட்டத்திற்கு அனுப்பியிருந்தது.

இதில் எந்தப் பாகுபாட்டிற்கும் இடமில்லை. இப்போது எமது பிள்ளைகள் ஒரு அந்தரமான நிலையில் இருக்கின்றார்கள். இப்போது ஏற்பட்டிருக்கின்ற நிலைமையைப் பார்த்து நாங்கள் வெட்கப்படுகின்றோம்; வேதனைப்படுகின்றோம்.

எமது ஒரே கொள்கை தமிழீழம்தான். எமது தேசியத் தலைவர் தமிழீழத்தை நெருங்கிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் இத்தகைய நிலை ஏற்பட்டிருப்பது கவலையளிக்கின்றது.

இப்போது இருதரப்பினருக்கும் இடையில் ஒற்றுமை ஏற்படவேண்டும். விரைவில் நாங்கள் வன்னிக்குச் சென்று தலைவரைச் சந்திக்கப் போகிறோம்.

எமது தாய்மார்கள் தலைவரை நம்பியே தமது பிள்ளைகளைப் போராட்டத்திற்கு அனுப்பியிருந்தனர். எனவே, தலைவரைச் சந்தித்து இந்தப் பிரச்சினைக்கு உரியதீர்வு காணுமாறு கோரப்போகின்றோம் - என்றார் அவர். (எ-4-7)

# சட்டவிரோத மணல் அகழ்வு நெடுங்குளத்தில் தொடர்கிறது

அரியாலை,மார்ச்14

கொழும்புத்துறை, நெடுங்குளம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

டிராக்டர்கள் மற்றும் லான்ட்மாஸ்ரர் போன்றவற்றில் வருவோர் வகைதொகையின்றி மணலைப் பெருமளவில் அகழ்ந்து செல்வதைக் காணமுடிகின்றது.

இரவுபகலாக இந்த மணல் அகழும்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும் -

இவ்வாறு அனுமதியின்றி மணல் ஏற்றிவரும் டிராக்டர்கள், லாண்ட்மாஸ்ரர்கள் சுவாமியார் வீதியூடாக யாழ். கண்டிவீதியில் புங்கங்குளம் சந்தியில் பிரவேசித்துப் பின்னர் அரியாலை புறூடி ஒழுங்கையூடாக விற்பனைக்காகக் கொண்டுசெல்லப்படுகின்றன என்றும் -

இதனால், மேற்படி வீதிப்பகுதியில் இரவு, பகல் வேளைகளில் வாகன நடமாட்டம் அதிகரித்துள்ளதுடன், வாகன இரைச்சலால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவிப்பதாகவும் - கூறப்பட்டது.

இது குறித்து, இப்பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-17)

## சங்கானை ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பம்

வலி.மேற்கு,மார்ச்14

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

வலி.மேற்குப் பிரதேச மக்களின் நன்மைகருதி சங்கானை அரசினர் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் -

இதனால் இப்பிரதேச மக்கள் வைத்தியசாலைக்குச் சென்று உடனடியாக வைத்திய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது என்றும் - வைத்திய அதிகாரி தெரிவித்தார். (எ-175)

## வெளிநாட்டு நோட்டுக்களுடன் நகைகள் பலவும் திருட்டு!

### கொழும்புத்துறையில் வியாழனிரவு சம்பவம்

அரியாலை,மார்ச்14

ஜன்னால் கம்பியை வளைத்து வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த தங்க நகைகள் மற்றும் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பண நோட்டுக்கள் போன்றவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் துணிகரத் திருட்டுச் சம்பவம் கொழும்புத்துறை - புங்கன்குளம் வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த வியாழக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட வீட்டுக்காரர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் திருடர்கள் துணிகரமாக ஜன்னல்க் கம்பியை வளைத்து, வீட்டிற்குள் நுழைந்து தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

90 பவுண் தங்க நகைகளும், மூன்று லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப்பண நோட்டுக்களும் இவ்வாறு சூறையாடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-17)

### 'ரீ.வி'யில் நாடகம் பார்க்க

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற குடும்பத் தலைவியருக்கு அபராதம்

தெல்லிப்பழை,மார்ச்14

தொலைக்காட்சி நாடகம் பார்ப்பதற்கு என்று கூறிச் சட்டவிரோதமாக மின்பெற்ற குற்றத்திற்காக மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட 4 குடும்பத் தலைவியர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டமாகச் செலுத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்தவார இறுதியில் மின்சாரசபை அதிகாரிகளும் சுன்னாகம் பொலீஸாரும் இணைந்து ஏழாலை, குப்பிளான் பகுதிகளில் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது சுமார் 15 பேர் சட்டவிரோதமாக மின் பெற்றதாகக் கூறி கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் ஐவர் கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர். அப்போது குறிப்பிட்ட குடும்பத் தலைவியர்களுக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (எ-150)

**நாளை**

பங்குனி 02
திங்கட்கிழமை
(15.03.2004)
திதி: நவமி
பகல் 12.40 வரை.
நட்சத்திரம்: பூராடம்
பின்னிரவு 1.20 வரை
முதலாம் பங்குனித் திங்கள்
சுபநேரம்: 12.20 - 1.50
ராகுகாலம்: 7.50 - 9.20
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிப்பான். தப்புச் செய்தவன் தண்டனை கொள்வான்.

## 20 லட்சம் செலவில் ஆயுர்வேத மருந்தகம்

தென்மராட்சி,மார்ச்14

பளைப் பிரதேச சபையின் முகமாலை உப அலுவலக வளவில் 20 லட்சம் ரூபா செலவில் ஆயுர்வேத மருந்தகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இத்தாவிலில் உள்ள இந்த உப அலுவலகம் மற்றும் பொதுநூல் நிலையம் ஆகியவற்றின் கட்டடங்கள் கடந்தகால யுத்த அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்தன என்றும்-

இந்தக் காணியிலேயே தற்போது ஆயுர்வேத மருந்தகக் கட்டடம் அமைக்கப்பட்டுவருவதாகவும் - பிரதேச சபையின் செயலாளர் இ.து.சிவராசா தெரிவித்தார். (எ-117)

## குடாநாட்டு சமுர்த்தி வங்கிகள் ஊடாக சுயதொழில் முயற்சிக்குக் கடன்

### யாழ். வந்த அதிகார சபை அதிகாரிகள் தகவல்

யாழ்ப்பாணம்,மார்ச்14

குடாநாட்டிலுள்ள சமுர்த்தி வங்கிகள் ஊடாக சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு விரைவில் கடன் வழங்கப்படவுள்ளது.

மேற்படி சுயதொழில் கடன் வழங்குவது தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று அண்மையில் திருநெல்வேலியிலுள்ள விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்றது. இந்தப் பட்டறையில் கலந்துகொண்ட சமுர்த்தி அதிகார சபை அதிகாரிகள் இந்தத் தகவலைத் தெரிவித்தனர். இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் வங்கி நிதி நடவடிக்கைகள் பிரிவினால் நடத்தப்பட்ட இப்பயிற்சி நெறியில் வங்கி நிதி நடவடிக்கைப் பணிப்பாளர் திருமதி பி.எம்.எஸ்.மல்லிகா பெரேரா, வங்கிநிதி நடவடிக்கை பிரதிப் பணிப்பாளர் எஸ்.எஸ்.ஏ.குணரத்ன, வடக்கு - கிழக்கு பெருந்தோட்ட பிரதிப் பணிப்பாளர் எஸ்.நடேசராசா ஆகியோர் அடங்கிய குழுவினர் கலந்துகொண்டனர்.

சமுர்த்தி வங்கிகளில் இதுவரை காலமும் வைப்புச் செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்தி விவசாயக் கடன், மீன்பிடிக்கடன், சுயதொழில்கடன், இடர்க்கடன், நுகர்வுக்கடன் போன்ற கடன்கள் வழங்கப்படவுள்ளன என்றும் -

சமுர்த்தி முத்திரை வழங்கும் திட்டத்தைக் குடாநாட்டில் நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் - அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதற்கிடையில் -

குடாநாட்டில் கடந்த ஆண்டு முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி வங்கிகளில் பொதுமக்களால் வைப்புச்செய்யப்பட்ட நிதி இதுவரை காலமும் வேறு வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. (எ-73)

## சாவகச்சேரி மக்கள் வங்கிக்கிளை விரைவில் கணனி மயப்படுத்தப்படும்

தென்மராட்சி,மார்ச்14

சாவகச்சேரி மக்கள் வங்கியின் நடவடிக்கைகள் விரைவில் கணனி மயப்படுத்தப்படவுள்ளன. இதற்கான அனுமதி மக்கள் வங்கி தலைமையகத்தினால் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜூன் மாதம் 19ஆம் திகதி சாவகச்சேரி மக்கள் வங்கியின் கணனிமயப் பிரிவு மக்கள் வங்கித் தலைவரினால் ஆரம்பித்து வைக்கப்படுமென மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் சி.இளம்பிறைநாதன் தெரிவித்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் 2002 செப்ரெம்பர் மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட சாவகச்சேரி மக்கள் வங்கியின் சிறந்த செயற்பாட்டினால் வங்கியைக் கணனிமயப்படுத்த தலைமைப்பீடம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் - அவர் தெரிவித்தார். (எ-31-117)

# கொழும்பில் தங்குமிட வசதியுடன் யாழ். இளைஞர்களுக்குப் பயிற்சி

## பத்திரிகையாளராவதற்கு ஆர்வமும் ஆசையும் உங்களுக்கு உண்டா?

**சிறப்புக்குரிய இத்தொழிலுக்குத் தேவையான விசேடமான கூர்ச்செவியும் அகன்ற கண்ணும் செய்தியை மணந்து பிடிக்கும் மூக்கும் கற்பூர மூளையும் உங்களுக்கு உண்டென்ற தன்னம்பிக்கை உள்ளதா?**

அவ்வாறாயின் நீங்கள் தாமதிக்க வேண்டியதில்லை.
உங்கள் சுய விவரக் கோவையுடன் உறவினரல்லாத இரண்டு பிரமுகர்களிடம் பெற்ற நற்சான்றிதழ்களையும் விண்ணப்பத்துடன் அனுப்புங்கள்.

வயதெல்லை : 21 முதல் 30 வரை
கல்வித் தகைமை :
★ ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தி.
★ துறைசார் ஆர்வமுள்ள பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்.

☆ ஆண்கள் மட்டுமே மனுச்செய்யலாம். ஆயினும், கொழும்பில் தங்குமிட வசதியுள்ள பெண்களின் விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்படும்.
யாழ். நகரில் நடத்தப்படும் தகுதிகாண் எழுத்துப் பரீட்சையில் சித்திபெறுவோர் மட்டுமே நேர்முகத் தெரிவுக்கு அழைக்கப்படுவர்.

பயிற்சிக் காலம் : ஒரு வருடம்

பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்படுவோருக்கு தங்குமிட, உணவு வசதிகளுடன் மாதாந்த அலவன்ஸாக ரூ.3,500/- வழங்கப்படும். பட்டதாரிகளுக்கான அலவன்ஸ் ரூ.4,500/-

நிர்ணயிக்கப்பட்ட திறமைகளுடன் பயிற்சியைப் பூர்த்திசெய்வோர் மூன்று வருட கால ஒப்பந்தத்துடன் கொழும்பில் இயங்கும் பத்திரிகை நிறுவனத்தில் பணிக்கு அமர்த்தப்படுவர்.
அவ்வேளை சம்பளம் திறமைக்கு ஏற்பப் பேசித் தீர்மானிக்கப்படும்.



**விண்ணப்ப இறுதித் திகதி: 22.03.2004**

**விளம்பர இலக்கம் : 2197,**
**மே/பா உதயன்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

உங்கள் இசை ஆவல்களைப் பூர்த்திசெய்ய எம்மிடம்

புதிய பழைய VIDEO CD'S
புதிய, பழைய, இடைக்கால AUDIO CD'S
அனைத்து வகையான MP3 CD'S
தமிழ், ஆங்கில DVD
கர்நாடக சங்கீத CD'S
இந்து, கிறிஸ்தவ பக்திபாடல் CD'S
SOFT WARE, GAMES CD'S

மற்றும் CD கவர், BLANK CD போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்:

க்களின் CD சங்கமம்

Music World

பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். ☎: 021 222 6554

(C/33616) (41)

# முதலாம் தர ஆசிரியர்களுக்கு கணிதபாட கைந்நூல்கள்!

வலி.தெற்கு,மார்ச்14

அரச பாடசாலைகளில் முதலாம் வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு முதலாம் வகுப்புக்குரிய கணித பாட ஆசிரியர் கைந்நூல்கள் வழங்கப் பட்டுள்ளன.

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக் கல்விப் பிரிவும் ஆரம்ப கணித அலகும் கூட்டுமுயற்சியால் தயாரித்த முதலாம் வகுப்புக்குரிய கணித பாட ஆசிரியர் கைந்நூல் முதற்றடவையாக வெளியிடப்பட் டுள்ளது.

இதுவரை காலமும் முதலாம், இரண்டாம் வகுப்புகளுக்குரிய ஆசிரியர் கைந்நூல்கள் தயாரிக்கப்படுவதில்லை. இவ்வருடமே முதன்முறையாக முதலாம் வருட ஆசிரிய கைந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதேபோல, இரண்டாம் ஆண்டு கணித பாட ஆசிரியர் கைந்நூல் விரைவில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளில் தேசிய கல்வி நிறுவகமும் ஆரம்ப கணித அலகுப் பிரிவும் ஈடுபட்டு வருகின்றன.

புதிய கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கமைய இந்நூல்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

(ஐ-152)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

******



**கலாசார அமைச்சினால் கலைஞானகேசரி விருதுபெற்ற முகமாலை கிராம அலுவலர் உயர்திரு.**

**கந்தையா கனகரத்தினம்**

அவர்கள் சமாதான நீதிவானாகப் பதவி ஏற்றதையிட்டு பெருமகிழ்வடைகிறோம்.

எம்மக்களுடன் நண்பனாய், நல் மந்திரியாய், கலைஞனாய், கலை ஆசிரியனாய், பண்பில் சிறந்த கிராம அலுவலராய்த் திகழ்ந்தீர். பெற்றுள்ள பட்டங்களுடன் மேன்மேலும் பட்டங்கள் பெற்றுப் பல்லாண்டு வாழ மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**புனித வேளாங்கண்ணி மாதா தேவாலய பங்கு மக்கள்,**
**முகமாலை.**

(சி-33627) (26-14-16-24)

## மனமார்ந்த நன்றி



01.03.2004ஆம் திகதியன்று இரண்டு லட்சம் ரூபா மாற்றத்தக்க எனது காசோலையைத் தொலைத்துவிட்டேன். அதனைக் கண்டெடுத்தவுடன் அந்தக் காசோலையை உடனேயே 'உதயன்' பிரதம ஆசிரியரிடம் சமர்ப்பித்த இணுவில் **திரு.V.மகாலிங்கம்** அவர்களின் நேர்மையையும் பெருந்தன்மையையும் பாராட்டுகின்றேன். அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

திரு.மகாலிங்கத்தின் முன்னுதாரணம் ஏனையோருக்கும் ஒரு நல்வழிகாட்டியாக அமையட்டும்.

பிறர் சொத்து விரும்பாத இவர் போன்ற நல்லவர்கள் வாழ்வது வாழ்த்துதலுக்கும் பெருமைக்கும் உரியதாகும்.

*221, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (29513) (24-14-16) - **தர்மலிங்கம் தர்மராசா.**

## இடம்மாற்ற அறிவித்தல்

**இலக்கம் 127, கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த 'நித்திய கல்யாணி' நகை மாளிகை தற்போது ராஜா தியேட்டர் கட்டடத்தொகுதியில் நாளை (15.03.2004) திங்கட்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.**

**உரிமையாளர்,**
**நித்திய கல்யாணி நகைமாளிகை.**

(29583) (39-36-16-14)

## மரண அறிவித்தல்

**திருமதி தவராசா கனேசபாக்கியம்**



கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவராசா கனேசபாக்கியம் நேற்று (13.03.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தப்பு தவராசா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பார்வதியின் அன்பு மகளும் கிருபாலினி (சுவிஸ்), தயாளன், பிரதீபன் ஆகி யோரின் அன்புத் தாயாரும் சுதர்சன் (சுவிஸ்) அவர்களின் மாமியாரும் சு.சாருஸன் (சுவிஸ்) அவர்களின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*புதுவீதி,*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.* (29621)(37-14-16-24)

**தகவல்:**
**த.தயாளன் (மகன்).**

# உள்ளூர் உற்பத்தி பற்றிய எமது மன நிலையில் மாற்றம் தேவை

யாழ்ப்பாண மாவட்டத்தில் காலத்துக்குக் காலம் எத்தனையோ வகையான உற்பத்தி முயற்சிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. பல லட்சக்கணக்கான முதலீடுகளை இட்டு உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் தரமானவையாக இருந்தும்கூட நம் மக்களுடைய் ஆதரவும், ஒத்துழைப்பும் கிடை


கால்நடை தீவன உற்பத்திச் சாதனங்கள்

யாமையாலும், மனமாற்றமின்மையாலும் அவற்றுக்குப் போதிய சந்தை வாய்ப்பை வழங்குவதில்லை. இதனால், அவை நஷ்டமடைந்து செயலிழக்கும் நிலை ஏற்படுகிறது.

எவ்வளவு சிறந்த - தரமான பொருள்களாக இருந்தாலும், உள்ளூர்த் தயாரிப்பு என்றவுடன் சலிப்பே ஏற்படுகிறது. அவற்றை வாங்கி உபயோகிக்காமல், வெளிமாவட்ட உற்பத்திகளை நாடும் பலர் இன்றும் நம்மிடையே காணப்படுகின்றனர். சுகாதாரத்துக்கு ஏற்புடையனவாக அவை இல்லாதுபோனாலும் அவற்றை வாங்கி உபயோகிப்பதைப் பெருமையாகக் கொள்கின்றனர்.

ஆங்கில மொழியில் செய்யப்படும் விளம்பரங்களுக்கும் ஒட்டப்படும் லேபல்களுக்கும், போலிப்பொருள்களுக்கும் வழங்கப்படும் போலிப் பெருமைத்தனம் நம்மை விட்டுவிலக வேண்டும்.

சுத்தமான முறையில், கலப்பில்லாத மூலப்பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படும் பழரசங்கள், பாற்பொருள்கள் போன்ற பொருள்களை வாங்கி உபயோகித்து எமது பிரதேச தொழில்வளம், பொருளாதார வளம் பெருக ஆதரவு கொடுப்பது எமது கடமையாகும்.

திருநெல்வேலியில் உள்ள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கப் பாற்பண்ணையில் இருந்து சுத்தமான பாற்பொருள்கள், கால்நடைத் தீவனங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆடை நீக்கியபால், சுத்தமான நெய், பசும் பாலில் தயாரிக்கப்படும் ஐஸ்கிறீம், ஜோக்கட் என்பனவும் கால்நடைத் தீவனமும் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

ஆடைநீக்கிய பால் நோயாளர்களுக்கு மிகவும் தேவையானது. முன்கூட்டியே கிளைகளில் பதிவுசெய்து வேண்டிய அளவு பாலைப்பெறமுடியும்.

தினமும் கிளைகள் மூலம் மூவாயிரம் லீற்றர் பால் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுப் பொருள்கள் தயாரிக்கப்படுவதாகவும், இவற்றை 8 ஆயிரம் லீற்றராக அதிகரிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் சங்கத்தின் பொதுமுகாமையாளர் எஸ்.யோகராசா தெரிவித்தார்.

சங்கத்தின் தேவைகள் அதிகரித்துச் செல்கின்றன. தொழிற்சாலையை நவீனமயப்படுத்தி இயங்கவைக்க ஒரு கோடி ரூபாவுக்கு மேல் தேவைப்படுகின்றது. இதனைப் பெற்றுக்கொள்வதில் கஷ்டமாக உள்ளது. கடலில் மூழ்கிய 'மாஹோறா' கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட பொருள்களால் 8லட்சத்து94 ஆயிரத்து 941 ரூபாவும், லொறிகள், சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுமாக மொத்தமாக 32 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இவற்றுக்குரிய நஷ்டஈடுகள் இதுவரை கிடைக்கவில்லை.

தொண்டு நிறுவனங்கள் உதவி செய்தால் தொழிற்சாலையை நவீனமயப்படுத்திக் கீழ்மட்ட நிலையில் உள்ள மக்களுக்கு பல நன்மைகளை ஏற்படுத்தமுடியும். தொழில் வாய்ப்புகள், போஷனைப் பொருள்களை வழங்கமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சங்கத்தில் அங்கத்தவர்களாக உள்ள பண்ணையாளர்கள் பலர் பல நன்மைகளைப் பெற்றுவருகின்றனர். அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் போன்ற தொண்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் கடன் திட்டங்களின் கீழ் கால்நடைக்கொள்வனவு, வளர்ப்பு, அபிவிருத்தி என்பவற்றுக்கான கடன்களைப் பெறுகின்றனர். சங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் சேமிப்புத் திட்டத்தின் மூலம் பல பண்ணையாளர்கள் சேமிப்பில் இருந்து கடன்பெறவும், லட்சக்கணக்கான பணத்தை மீளப்பெறவும் முடிகின்றது.

சங்கத்தின் அபிவிருத்தி வேலைகளுக்குக் கூட்டுறவுத் திணைக்களத்தின் விதிப் பிரமாணங்கள் - சட்டங்கள் தடையாக இருப்பதால், வேகமாக அபிவிருத்திப் பணிகளைச் சங்கம் மேற்கொள்ளமுடியாதுள்ளதாகவும் தெரியவருகிறது.


பால் பதனிடும் இயந்திரம், ஐஸ்கிறீம், 'ஜோக்கட்' தயாரிக்கும் இயந்திரம் மற்றும் பாலிலிருந்து வெண்ணெய் பிரிக்கும் இயந்திரம் போன்றவை அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டவையாக உள்ளபோதிலும், கால்நடைத் தீவன உற்பத்தி இயந்திரங்கள் 30 வருட பழைமைவாய்ந்தவை. இவை நவீன மயப்படுத்தப்படவேண்டும்.

வெளிமாவட்ட கால்நடைத் தீவனங்களைவிட இங்கு உற்பத்தியாகும தீவனம் பவுடர் தன்மையாகையால் இலகுவில் கலந்து கால்நடைகளுக்குக் கொடுக்கமுடியும். இதன் போஷணைச் சத்தால் கால்நடைகள் களைப்படையாமல் லாபகரமான பாலை அதிகளவில் தருவதாகப் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏ-9 பாதை திறப்பால் வெளிமாவட்டத் தீவனங்கள் வந்து எமது

**வி.பி.சர்மா**
*வலி.தெற்குச் செய்தியாளர்*
**செய்திக்கட்டுரை**

தீவன விற்பனையைக் குறைத்துள்ளன. ஒரு மாதம் 60 ஆயிரம் கிலோ தீவன உற்பத்தி நடைபெறுகின்றது. கால்நடைத் திணைக்களத்தினர் அடிக்கடி வந்து பாலின் தரத்தை ஆராய்ந்து சரிபார்க்கின்றார்கள். கால்நடை வைத்தியர்களினால், பாற்பொருள் உற்பத்தி, கால்நடை வளர்ப்புத் தொடர்பான பல


உள்ளூரில் உற்பத்தியான சுத்தமான பசு நெய்

ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. எமது நிறுவனத்தைத் தொழில்நுட்ப ரீதியில் நவீனமயப்படுத்தினால், யாழ்ப்பாண மாவட்ட கால்நடைகளுக்குத் தேவையான தரமான தீவனம் முழுவதையும் உற்பத்தி செய்து வழங்க முடியும் எனக் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கப் பணிப்பாளருள் ஒருவரான எஸ்.சிவலோகநாதன் தெரிவிக்கின்றார்.

உள்ளூர் உற்பத்திப் பொருள்களை வாங்கி அவற்றின் வளர்ச்சிக்கு உதவவேண்டும். அதன்மூலம் எமது பிரதேச மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட வழிபிறக்கும்; எமது பொருளாதார வளமும் சிறப்படையும் என்ற சிந்தனைகளும் மனோநிலை மாற்றங்களும் எம்மத்தியில் ஏற்படாத வரையில் உள்ளூர் தொழில் உற்பத்திகள் பெருகமாட்டா; தொழிற்சாலைகள் சீராக இயங்கமாட்டா; எமது பிரதேசத்துப் பொருளாதார வளர்ச்சியும் ஏற்படமாட்டாது.

உள்ளூர் உற்பத்திகளை வாங்கி அவற்றுக்கு ஊக்கமும் ஆதரவும் அளிக்கும் மனோநிலை எமது பிரதேச மக்களுக்கு ஏற்படுமா? சிந்தனைக்குரியதே. ✦

## தவக்காலச் சிந்தனை

### வாழ்வு எப்போதும் இனிப்பதில்லை

இந்த ஆண்டிலும் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன்
அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் சரி (மத்: 13:09)

**பத்தொன்பதாம் நாள்**

'பழம் நழுவிப் பாலில் வீழ்ந்ததுபோல' என்பது எப்போதும் நிகழ்வது அல்ல. வாழ்வு எப்போதும் இனிப்பானதாகவும் சுமுகமானதாகவும் அமைநது விடுவதில்லை. ஆயினும், வாழ்வை நிர்ணயிக்கும் சந்தர்ப்பங்கள் எம்மைச் சந்திக்காமல் இருப்பதுமில்லை. வாழ்வை வளமாக்கும் ஏணிப்படிகள் எமக்குக் கிட்டும் சந்தர்ப்பங்களாகும். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே வளரும் உறவில் மனிதனோ குறுகிய பார்வை உடையவனாக நிகழ்கால இன்பங்களில் திளைத்து வருங்காலத்தைக் குட்டிச்சுவராக்கி விடுகிறான். ஆனால், அக்கறையும் தளராத நம்பிக்கையும் கொண்ட இறைவனோ மீண்டும் மீண்டும் சந்தர்ப்பங்களை வழங்கிக் கொண்டிருக்கும் பொறுமையின் இருப்பிடமாகும். கடந்த காலத்தை மறந்து புதிய புதிய வழிகளைச் சுட்டிக்காட்டி நிறைவாழ்வுக்கு அழைப்பவர் இறைவன். மலர் சொல்லும் நன்றி தேனாகும். வான் சொல்லும் நன்றி மழையாகும். மரம் சொல்லும் நன்றி கனியாகும். நீ சொல்லும் நன்றி என்ன மனிதா?

சுவாமி ஜீவாபோல் அ.ம.தி.

## சங்கானை, அராலிப் பகுதிகளில் வீதிகளை ஆக்கிரமிக்கும் கடைகள்

### பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பிரஸ்தாபிப்பு

வலி.மேற்கு, மார்ச்14

சங்கானை, அராலி ஆகிய இடங்களிலுள்ள பிரதான வீதிகளை வியாபார நிறுவனங்கள் சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமித்துள்ளன என்றும் -

இதனால் வீதி விபத்துக்கள் இடம் பெறுவதோடு, பொதுப்போக்குவரத்தில் பெரும் இடையூறு ஏற்படுவதாகவும் - சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள பொருள்களை அகற்றுவதற்கு வலிகாமம் மேற்குப் பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலி.மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டம் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழனன்று நடைபெற்றது.

அராலி, செட்டியார்மடத்தில் - பிரதான வீதியில் தனியார் ஒருவர் வியாபார நிலையமொன்றைக் கட்டுவதாகவும் -

சங்கானையில் உள்ள வியாபார நிலையங்கள் அனைத்தும் பிரதான வீதியினை ஆக்கிரமித்துத் தமது நிறுவனங்களின் வியாபாரப் பெயர்ப் பலகைகளை நடுவதுடன், வீதியோரமாகப் பொருள்களை வைத்துள்ளதாகவும் கூட்டத்தில் பங்குபற்றிய உறுப்பினர்கள் பலரும் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து, போக்குவரத்துககு இடையூறாகச் செயற்படும் வணிக நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. (எ-175)

## சீனி விலை திடீரென உயர்வு

வலி.தெற்கு,மார்ச்14

விற்பனை நிலையங்களில் சீனியின் விலை திடீரென அதிகரித்துள்ளது. கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் 36 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ சீனி நான்கு ரூபாவால் அதிகரித்து 40 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை, தனியார் வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ சீனி 42 ரூபா தொடக்கம் 46 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. (ஜ-152)

## நூலாசிரியர்களுக்கு வழங்கும் ஆதரவு புதிய நூல்கள் எழுதுவதற்கு உதவும்

### கவிதை நூல் வெளியீட்டு விழாவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர்

குருநகர்,மார்ச்14

நூலாசிரியர்களுக்கு மக்கள் வழங்கும் ஆதரவு, அவர்களை மேன்மேலும் எழுதுவதற்குத் தூண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராசா.

குருநகரைச் சேர்ந்த திருமதி றிச்சேர்ட் அடைக்கலநாயகியின் 'சரம்' கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ் சென்.ஜேம்ஸ மகளிர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் தலைமையுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

குருநகரில் வசிக்கும் இவர், தமது அறுபதாவது வயதில் தமது முதலாவது கவிதை நூலை வெளியிட்டு வைக்கும் செயல் பாராட்டப்படவேண்டியது. யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் நூலகங்கள் இயங்கிவருகின்றன. அங்கு மாணவர்களுக்கேற்ற பல புத்தகங்கள் உள்ளபோதிலும், அவைகளை மாணவர்கள் வாசிப்பதில்லை. புத்தகங்களை வாசிக்கும் மாணவர்கள் கூட அதில் உள்ள படங்களையே பார்க்கிறார்கள். புத்தகங்களை வாசிக்க மாணவர்களைப் பெற்றோர்கள் தூண்டவேண்டும்.

ஆக்கசிருஷ்டி கர்த்தாக்களை மக்கள் ஆதரித்தால்தான் அவர்கள் மேலும் பல புதிய படைப்புக்களை வெளியிடுவார்கள். புத்தகம் எழுதுவதற்கு அதிகபணம் தேவைப்படும். இந்தப் பணவசதி அவர்களிடம் இல்லை. பொருள் படைத்தவர்கள் அவர்களுக்கு அள்ளிவழங்கவேண்டும். எழுத்தாளர்களின் படைப்புக்களை மக்கள் விலைகொடுத்து வாங்கி அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டும் - என்றார்.

யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் தமது உரையில்:-

இந்நூலில் 60 இற்கும் மேற்பட்ட பாடல்கள் உள்ளன. இந்தப் பாடல்கள் இவரது பல்வேறு காலகட்டத்தில் நிகழ்ந்த சம்பவங்களின் தொகுப்பாக உள்ளன. உள்ளத்தில் உள்ள உணர்ச்சிகளை இவர் தமது கவிதை நூலில் வெளிக்கொணர்ந்துள்ளார். உணர்ச்சிப் பிரவாகங்களை உள்ளவாறு சொல்வதே கவிதையாகும். சொல்லப்படுகின்ற விடயம் உயர்ந்ததாக இருக்கவேண்டும். கவிதைக்குள் கதை இருக்கவேண்டும். கவிதையை வாசிப்போர் உள்ளத்தில் நல்ல கருத்தை விதைக்காவிட்டால் அது கவிதையாக இருக்கமுடியாது -என்றார்.

குருநகர் பங்குத்தந்தை வண. எஸ்.எச்.சகாநாயகம் அடிகள் ஆசியுரை நிகழ்த்தினார். யாழ். சென். ஜோன்ஸ் மகளிர் வித்தியாலய அதிபர் லூ.மகேஸ்வரன் சிறப்புரை நிகழ்த்தினார். பாஷையூர் பங்குத்தந்தை வண.பிதா.எம். யேசுரட்ணம் அடிகளார் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். (எ-51)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்குப் பெற்றோர்களால் கொள்வனவு செய்து அன்பளிப்புச் செய்யப்பட்ட வீரசங்கிலியன் விளையாட்டு மைதானப் பெயர்ப் பலகை அண்மையில் கல்லூரியின் மைதான அமைப்புக்குழுத் தலைவர் ந.சண்முகதாஸினால் திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டது. இது தொடர்பான நிகழ்வில் மைதான அமைப்புக் குழு உறுப்பினர்கள், பீடாதிபதி, கல்வியாளர்கள், மாணவர்கள் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படம். (எ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வையகம் 1921 – 09 – 24



தெய்வீகம் 2003 – 02 – 24

அமரர்

## சின்னத்தம்பி சடாட்சரம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

**திதி: நவமி 14.03.2004**


அன்பினைச் சொரிந்து அறிவமுதூட்டிய எங்கள் அப்பா!
உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
என்று, எங்கள் கண்கள் கலங்காமல் காத்த எங்கள்
கண்கண்ட தெய்வமே! இன்று எம் கண்களில் நீர் வழிந்தே
உங்களைத் தேடி ஓடுதே!
நேசமுடன் எம்மை வளர்த்தவரே, நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து
ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகள் உருண்டோடினும்
உங்கள் நினைவலைகள் ஓயாமல்
எங்கள் நெஞ்சக்கடலில் ஒலித்திருக்கும்

தங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை
வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
(C/33981)(34-11-19)

# யாழ். மக்களே! உங்களுக்கோர் அரிய வாய்ப்பு!




## உடனே விரையுங்கள்!

**hager**

+ பிரான்ஸ் உற்பத்திகள்
+ 5 வருட உத்தரவாதம்

**DAVEY**

+ ஆஸ்திரேலிய உற்பத்திகள்
+ 2 வருட உத்தரவாதம்





Taps and Acceories.

+ மலேசியா உற்பத்திகள்
+ பதிலீட்டு உத்தரவாதம்
ஆயுள் முழுவதும்

dki

**Distributor**

Jaffna Electricals,
6, stanley Road,
Jaffna.
(C/33321) (41-14)

021-222 2353
021-222 5766
fax : 021-222 2552

Importer
General sales Co.Ltd
No 7, Station Road, Col-3
T.P 2574511

உங்களுக்கு சிறப்பான தகைமை ஏதும் உண்டா ?

ஆம்! அவளுக்கு உண்டு. இரகசியமான புன்னகையின் கோணங்கள் முதல் சுறுசுறுப்பான அவளுடைய விரல் நுனிகள் வரை. அந்த தகைமை தன்னிடம் உண்டு என்று அவளுக்குத் தெரியும். அதுதான் CIMA தகைமை. அவளைச் சுற்றி எப்பொழுதும் சனக்கூட்டம் இருப்பதற்கான காரணம் இதுவே. எங்கே அவள் சென்றாலும் பலரின் விசேட கவனத்தைப் பெறுகின்றாள். பாராட்டும் கண்கள் அவளைப் பின்தொடருகின்றன. அவள் ஒரு சாதாரணமான பெண்ணல்ல; ஏனெனில் CIMA ஒரு அதி விசேட தகைமையாகும்.

CIMA சகல அம்சங்களையும் கொண்ட கல்வித் தகைமையாகும். அது உங்களை முழுமையான தொழில்சார் வல்லுனராக்குகின்றது. எனவே நீங்கள் தெரிவு செய்த சூழலுடன் இலகுவில் கலந்து விடுகின்றீர்கள். அது ஒரு பெருமை தரும் விடயம் மட்டுமல்ல, நடைமுறைச் சாத்தியமானதும் கூட. இந்த பலதுறைசார் தகைமை உங்களை உண்மையான உலகிற்கு தயார்படுத்துவதுடன் உங்கள் தொழிற் பாதையில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை எளிதில் கையாளக்கூடிய தன்மையை உங்களுக்கு வழங்குகின்றது. CIMA தகைமையை உண்மையில் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும். எனவே ஒளிமயமான எதிர்காலத்தில் அடியெடுத்து வைக்கத் தயாராகுங்கள்.



**CIMA** உங்களை ஒப்பற்றவராக்கும்

தகைமை உள்ளோருக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு !

CIMA இலங்கைப் பிரிவு.
356, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 5.
தொலைபேசி : 2503880 பக்ஸ் : 2503881
இணையம் : www.cimaglobal.com

## வெடிபொருள்கள் அகற்றிய பகுதிகள் கையளிப்பு

தென்மராட்சி,மார்ச்14

வரணி கரம்பைக் குறிச்சிக் கிராம அலுவலர் பிரிவில் ஹலோ ட்ரஸ்ட் மிதிவெடி அகற்றும் பிரிவினரால் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட பகுதிகள் தென்மராட்சிப் பிரதேசச் செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

வரணி மகாவித்தியாலயத்திற்கு முன்பாகச் செல்லும் ஒழுங்கையை ஒட்டிய இப்பகுதிகளில் பொதுமக்கள மீள்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படையினர் நிலைகொண்டிருந்த வேளையில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு மண் அணைக்கு அப்பால் உள்ள பகுதிகளே வெடிப்பொருள்கள் அகற்றப்பட்ட பின்னர் கையளிக்கப்பட்டுள்ளன.

(ஒ-117)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்14

யாழ். கல்வி வலயத்தின் முறைசாரக் கல்விச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.சிவம் தலைமையில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக ஐ.நா. சிறுவர் நிதியத்தின் யாழ். மாவட்ட வதிவிடப் பிரதிநிதி ஜூடித் புறூனோ, கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கை.கவியன்பன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஒ-10)


**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள கை ரெலிபோன் (பலவகையில்) விற்பனைக்குண்டு.
தொடர்பு:
ஜெகன் வீடியோ சென்ரர்
*105, சட்டநாதர் வீதி,*
*திருநெல்வேலி.*
(29558) T.P.: 0777042716.

**இந்தியாவில் உயர்கல்வி பெற இப்போதே தயாராகுங்கள்!**

க.பொ.த. உயர்தரத்தின் பின்னர் இணைந்து கொள்ளுங்கள்!

"பிருந்தாவன் கல்லூரி"
(முன்னைய நாஷனல் பெஸ்ட் கிறேற் கொலிஜ்)
பெங்களூர் பல்கலைக்கழகம், இந்தியா

பட்டப்படிப்புக்கான கற்கை நெறிகள்
B.B.M., B.Sc., B.C.A., B.Com.+ Computer

பட்டப்பின் படிப்புக்கான கற்கைநெறிகள்
M.B.A, M.Sc., M.C.A.

இம்மாதம் 21ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் காலை 10 மணிக்கு கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. கற்கைநெறிகளுக்கான அனுமதி அதே இடத்தில்: மார்ச் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் காலை 11 மணிமுதல் மாலை 5 மணிவரை.

✲ ஸ்ரீ லங்காவைச் சேர்ந்த 261 மாணவர்களுடனும், 41 வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடனும் இணைந்து கல்வி கற்கும் வாய்ப்பு.
✲ கடந்த பத்தாண்டு காலத்தில் இக்கல்லூரியில் பயின்ற ஸ்ரீலங்காவைச் சேர்ந்த 250 மாணவர்கள் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்றுள்ளனர்.
✲ பதிவுக்கட்டணம் செலுத்தாது இடஒதுக்கீட்டுவசதி மற்றும் புலமைப் பரிசில் வாய்ப்பு, கட்டணச் சலுகை, தவணைக்கட்டணச் சலுகை தொடர்பாக கருத்தரங்கில் விவரங்கள் வெளியிடப்படும்.
✲ 2004 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பெறுபேற்றை எதிர்பார்க்கும் வேளையிலும் இடஒதுக்கீட்டுக்கு விண்ணப்பிக்கமுடியும்.
✲ இடஒதுக்கீட்டுக்கான கட்டணம் 400 அமெரிக்க டொலர்கள்.
✲ இணையத்தளம்
✲ www.nfgcollege.com.
✲ மின் அஞ்சல்
✲ nfgc@bgl.vsnl.net.in.

கம்பெனி செக்கிரட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
இல: 285 c-1/1, ஸ்ரான்லி திலகரத்ன மாவத்தை.
நுகேகொட:தொலைபேசி இல:011-2854438.
(34-17-19) (C33938)

**முன்பள்ளி பயிலுநர் ஆசிரியர் தேவை**

எமது நிறுவனத்திற்கு முன்பள்ளி ஆசிரியராகப் பணிபுரிவதற்கு பயிலுநர் ஆசிரியர்களாகத் தகுதியும் ஆர்வமும் உடைய பெண்கள் தேவை.
ஆகக்குறைந்த தகைமை: நடனம், சங்கீதம், கைவினைத்திறன் ஆகியவற்றுள் ஒன்றிலாவது திறமையிருத்தல் வேண்டும்.
விண்ணப்ப முடிவு திகதி: 31.03.2004.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
DIRECTOR,
TINYTOTS' CORNER,
KANDY ROAD, CHAVAKACHCHERI.
(29461)(34-12)

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHO THERAPY)**
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்......!
16.03.2004 முதல் 22.03.2004 வரை
இளைஞர்களே!
★ சக்தி குறைவு ★ ஞாபக மறதி ★ பயம்
★ நடுக்கம் ★ நித்திரைக்குறைவு
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்கப்படும்.
என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்!
ஆண்மைச் சகதி குறைவுதான் உங்கள் கவலையா?
மனோதத்துவ வைத்தியத் தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.
தொடர்புகளுக்கு:
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(சி-33994) (34-11-17)

**பணிநிலை வேண்டுகை**

ஆயப்பகுதியின் புளியங்குளப் பகுதிக்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

✲ ஆய இளநிலை அதிகாரி (ஆண்)
தகைமை:
ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின்/ தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றின் உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழை உடையவராக இருத்தல்.

✲ விடுதிக் காப்பாளர் (பெண்)
தகைமைகள்:
01) 35-50 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல்.
02) க.பொ.த (உ.த.) சித்தியடைந்திருத்தல்.
03) உடல் ஆரோக்கியமும், திடகாத்திரமும் உடையவராக இருத்தல்.

தகைமையுடையவர்கள்
2004.03.17 புதன்கிழமை
காலை 10 மணிக்கு
நடுவப்பணியகம்,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.
- எனும் முகவரிக்கு சான்றிதழ்களுடன் வருகைதரவும்.
(C/33611) (34-12-21)

**வெளிவந்துவிட்டது**

தரம் 5 புலமைப்பரிசில் 2004 பரீட்சைக்கான
மொழிவளம் - இ.க.சிவஞானசுந்தரம் M.A.
கட்டுரைப்பேழை - இ.க.சிவஞானசுந்தரம் M.A.
தமிழ் (புலமைக்கானது) - இ.க.சிவஞானசுந்தரம் M.A.
(34-11-19) (29520)

**இதோ!**

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!
100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228
யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567
(சத்திரச் சந்திக்கு அருகில்)
(சி-33908) (34-11-17)

நீங்கள்,
நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா? இதோ உடன் நிவாரணி

**"மதுமேகரணி"**
**"MADHUMEAHAHARANEE"**

இந்த மருந்தின் பலாபலனை குறுகியகாலத்தில் அறிந்துகொள்ளலாம்.
இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பு
யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும். பெற்றுக்கொள்ளலாம்.
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள
சிவா நறுமணப்பூங்கா
288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம.
SRI LANKA AYURVEDIC-CORPORATION
PO BOX 20 NAWINNA
MAHARAGAMA.
(குறிப்பு: சத்திரச்சந்திக்கு அருகில்)
(34-11-19) (சி-33909)

**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**
**14.03.2004**

HAPPY BIRTHDAY



இளையராஜா - விஜயதாரணி
தம்பதிகளின் செல்வப்புதல்வி
**கீர்த்தனா**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (14-03-2004) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் உள்ள தனது வீட்டில் கொண்டாடுகின்றார். கீர்த்தனாவை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, மாமா, சித்தி, தாத்தாமார், பாட்டிமார், சித்தப்பாமார்கள் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும்பெற்று இயேசுவின் ஆசியுடன பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

'இராஜ வீதி"
சிறுப்பிட்டி மேற்கு. நீர்வேலி
தகவல் :
அம்மம்மா.
(29439) (41-11-17-34)



உலகப் புகழ்
பெற்ற L.G ABANS
நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன் இலவச விநியோக
சேவையில் பெற்றிட





LG
Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
21 - 01 - 1928



மறைவு
13 - 03 - 2003

### திருமதி செல்லர் சின்னம்மா

வண்ண வண்ண கனவுகளுடன்
திண்ணையில் நிலாச் சோறூட்டி
பண்ணையில் உலா வந்து
பாசமிகு பத்து வீரர்களையும்
நேசமுடன் ஓர் பிள்ளையையும்
சீருடன் பெற்று ஊர்போற்ற
வளர்த்திட்ட அம்மாவே மறவோம்
உம் நினைவை!

(21-19-14)

இன்று (14-03-2004) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இடம்பெறுகிறது. ஆறுதல் கூறித் தேறுதலளித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

நாகதம்பிரான் வீதி,
ஊரெழு மேற்கு, சுன்னாகம். (29616)

## நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகளும் நன்றி நவிலலும்

மலர்வு
20 - 03 - 1938



உதிர்வு
14 - 02 - 2004

நல்லூர் சந்தை அருளம்பலம் வீதியைப் பிறப்பிடமாகவும் சட்டநாதர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

### அருளம்பலம் கனகசுந்தரம்

*(இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்வியதிகாரி, மாவட்ட கல்விக் கந்தோர் – வவுனியா; முன்னாள் அதிபர், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, கோப்பாய் மகாவித்தியாலயம், சோமஸ்கந்தக்கல்லூரி – புத்தூர்)*

எமது இல்லத் தலைவர் 14-02-2004இல் ஆஸ்திரேலியாவில் (PERTH) சிவபதமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற திருநெல்வேலி இளைப்பாறிய விதானையார் அருளம்பலம் - நாகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும் கோப்பாய், ஏறாவூர், மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் பணியாற்றி இளைப்பாறிய டாக்டர் பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் பிரியதர்சினியின் பாசமிகு தந்தையுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.02.2004இல் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றன.

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி சமர்ப்பித்தும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தும் எங்கள் துயரத்தில் பங்குகொண்டு ஆறுதலும் தேறுதலும் அளித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றி கலந்து தெரிவித்துக்கொள்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
அன்பு மனைவி -
டாக்டர் பரமேஸ்வரி,
அன்பு மகள் -
பிரியதர்சினி.

59B, RANKINWAY,
BOORAGOON - 6154,
WESTERN AUSTRALIA,
AUSTRALIA. (29600) (26-21-14-19)

## நன்றி நவில்கின்றோம்



அமரர்

### செல்லப்பா குமாரசாமி

(இளைப்பாறிய M.L.T.)

அவர்கள் 24.02.2004 இல் அமரத்துவமடைந்துவிட்டார். இவர் நோயுற்றிருந்தவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வேளை தன்னலமற்ற அளப்பரிய சேவையாற்றிய டாக்டர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- திருமதி கு.செல்வராணி
(மனைவி - இராணி).

*இளவாலை வடக்கு,*
*இளவாலை.* (29614)(34-21-14-19)

## பளை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு சொந்த இடத்தில்

தென்மராட்சி,மார்ச்14

பளை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு விரைவில் ஆஸ்பத்திரி வளவில் இயங்கவுள்ளது.

உலக தரிசன நிறுவனம் பத்து லட்சம் ரூபா செலவில் ஆஸ்பத்திரியின் சேதமடைந்த கட்டடமொன்றினைப் புனரமைத்து வருகிறது. புனரமைப்பு வேலைகள் முடிவடையும் தறுவாயிலில் உள்ளதால், ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு விரைவில் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியின் அனைத்துக் கட்டடங்களும் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்ததால் தற்போது தனியார் வீடொன்றில் வெளிநோயாளர் பிரிவு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(எ-117)

## பளைப் பிரதேசத்தில் குடிதண்ணீர் விநியோகம் விரைவில் ஆரம்பம்

தென்மராட்சி,மார்ச் 14

வடக்கு - கிழக்கு துரித புனரமைப்புத் திட்ட நிறுவனத்தின் குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தின் கீழ், பளைப் பிரதேசத்தில் 26லட்சம் ரூபா குடிதண்ணீர் விநியோகத்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புலோப்பளைப் பகுதியிலிருந்து குழாய் மூலம் புலோப்பளை கிழக்கு, புலேப்பளை மேற்கு, அல்லிப்பளை, பளை நகரம், பளை ஆஸ்பத்திரி ஆகிய இடங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளதாக பிரதேச சபைச செயலாளர் இ.து.சிவராசா தெரிவித்தார். (எ-117)

## நீர்வளம் பற்றிய கருத்தரங்கு

வலி.மேற்கு,மார்ச்14

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தின் நீர்வளம் பற்றிய ஆய்வு தொடர்பான கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சங்கானைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை முதன்மை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.இராசேஸ்வரன் நீர்வளம் பற்றிய ஆய்வு தொடர்பான கருத்துக்களை வழங்கவுள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் கேட்டுள்ளார்.

(எ-175)

## பாலம் பலத்த சேதம்

கொழும்புத்துறை,மார்ச்14

குருநகர், கடற்கரைவீதி மவுண்கார்மல் வீதிச் சந்தியில் உள்ள பாலம் நீண்டகாலமாகப் பலத்த சேதமடைந்த நிலையில் உள்ளது.

இதனால், இந்தப்பகுதியூடாகப் பயணம்செய்யும் பாதசாரிகள், வாகன சாரதிகள் பல்வேறு சிரமங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-30)

## சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு கொள்கலன் அன்பளிப்பு

வலி.மேற்கு,மார்ச்14

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு பிளாஸ்ரிக்கிலான இரண்டு தண்ணீர் கொள்கலன்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

சங்கானை தபால் அதிபர் கே.யோகராசா இதனை அன்பளிப்புச் செய்துள்ளார். (எ-175)

## கல்வயல் பகுதியில் வெடிச் சத்தத்தினால் பெரும் பரபரப்பு

தென்மராட்சி,மார்ச்14

சாவகச்சேரி கல்வயல் பகுதியில கடந்த செவ்வாயன்று மாலை பாரிய வெடிச்சத்தம் கேட்டதையடுத்து சாவகச்சேரிப் பகுதியில் பெரும் பரபரப்புக் காணப்பட்டது.

கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவிலை அண்டிய குடியிருப்புப் பகுதிகளில் படையினரின் மிதிவெடி அகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்ட வெடிபொருள்கள் செயலிழக்கச் செய்யப்பட்டபோது ஏற்பட்ட வெடிச்சத்தம் எனப் பின்னர் தெரியவந்ததும் நிலைமை வழமைக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## தசாக சாந்தி தின அஞ்சலி



*அளவெட்டி அருள்மிகு*
*கும்பிளாவளைப் பிள்ளையார் ஆலயத்தின்*
*பிரதம சிவாச்சாரியாராக இருந்த*
அமரர் சிவப்பிரம்மஸ்ரீ

### இ.சோமசுந்தரேஸ்வரக்குருக்கள

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன், அன்னாரின் தசாக சாந்தி தினத்தில் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கும்பிளாவளைப் பிள்ளையாரை வணங்குகின்றோம.


சாந்தி! சாந்தி! சாந்தி!

தலைவர், இயக்குநர் சபையினர், பணியாளர்கள்,
அளவெட்டி மல்லாகம்
ப.நோ.கூ.சங்கம் (வ-து)

(சி-33615) (26-14-19-21)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
28 - 10 - 1946



உதிர்வு
14 - 03 - 2000

### அமரா தம்பிமுத்து மாசிலாமணி

மாசிலாமணியான எங்கள் அருமை அப்பாவே!
உங்கள் மணிமொழி ஓய்ந்து
ஆண்டுகள் நான்கு ஆனதுவோ?

(29613)

*உங்கள் பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.

திருக்குடும்ப கோயிலடி,
மல்வம், உடுவில். (26-14-19-21)

## 3ஆவது ஆண்டு நினைவு நாள்

தாயின் மடியில்
08 - 05 - 1938



ஆண்டவன் மடியில்
14 - 03 - 2001

### திருமதி வல்லிபுரம் இராசமணி

*விண்ணகத்தில் இறைவனுடன் அமைதியாய் நீர்*
*மண்ணகத்தில் உம்பிரிவால் நித்தம் கலங்குகின்றோம் நாம்*
*அனைவரையும் அரவணைக்கும் நல்லுள்ளம் உமக்கு*
*காலம் உம் காயங்களை ஆற்றிவரும் என்றிருந்தோம்*
*மூன்றாண்டுகள் கடந்த பின்பும் ஆறவில்லை எம் துயரம்*
*மறு ஜனனத்தில் மீண்டும் நீர் வருவீர் என்று*
*மீளாத்துயரில் நாம் உமை நினைவு கூருகின்றோம்.*

(21-19-14)

இன்று (14-03-2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவர் - க.வல்லிபுரம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

*சாந்தை*
*பண்டத்தரிப்பு.* (29616)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்துரை நல்லமுத்து

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை நல்லமுத்து 10-03-2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் தவேந்திரன் (U.K.- நீர்ப்பாசனத் திணைக்கள முன்னாள் மண்பரிசோதகர்), காலஞ்சென்ற குலேந்திரன் (நீர்ப்பாசனத் திணைக்களம்), தவமலர், ஜெகதீஸ்வரி (நீர்ப்பாசனத் திணைக்கள முன்னாள் ஊழியர்) ஆகியோரின் தாயாரும் பொ.கமலநாதன் (பல நோ.கூ.சங்கம், சுன்னாகம்), சந்திராதேவி (U.K.) ஆகியோரின் மாமியாரும் பரந்தாமன் (11 ஆம் ஆண்டு மாணவன், கொக்குவில் இந்துக்கல்லூரி), கஜீபன் (U.K.), ஸ்ரீபன் (U.K.) ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (14.03.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு எருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.கமலநாதன் (மருமகன்).

*இந்துக்கல்லூரி மேற்கு ஒழுங்கை,*
*உரும்பிராய்.* (29601)(34)

# தற்கொலைக் குண்டு போலத் தேர்தல் மக்களைத் தாக்கியிருக்கிறது – பிரதமர்



கொழும்பு,மார்ச்14

அமைதியாக வாழ்ந்த மக்கள் மீது தேர்தல் என்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தியிருக்கின்றது மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி. அதற்கு எதிர்வரும் 2ஆம் திகதி மக்கள் நல்லதொரு பாடத்தைப் புகட்டவேண்டும்.

-இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

கடந்த வெள்ளிக்கிழமை கொட்டாஞ்சேனையில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இப்படித் தெரிவித்திருந்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டு நாட்டின் நலன்கருதி ஏற்படுத்தப்பட்டதல்ல. அந்தக்கூட்டு தற்கொலைக் குண்டுதாரிகளைப் போன்று மக்களை அழித்து நாட்டைச் சீரழித்து சின்னாபின்னமாக்குவதற்காக உருவாக்கப்பட்டது. எனவே, மக்களின் எதிர்காலத்தை அழிக்க உருவாக்கப்பட்ட கூட்டமைப்பைத் தோல்வியடையச் செய்யவேண்டும். ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான நிலையான - ஸ்திரமான - ஆட்சியை அமைக்க மக்கள் ஆணை வழங்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அடிப்படையான கோட்பாடுகளுக்கே சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வெறுமனே வார்த்தை ஜாலங்களால் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். இது மீண்டும் ஒரு யுத்தத்தைக் கொண்டுவருவதற்கான திட்டமாகவே உள்ளது.

- இவ்வாறு பிரதமர் அங்கு தெரிவித்திருந்தார். (ஐ)

# எமது சொந்த மண்ணை மீட்கவே கூட்டமைப்பு களத்தில் நிற்கிறது

## அதன் முதன்மை வேட்பாளர் கூறுகிறார்

சுழிபுரம்,மார்ச்14

எங்கள் சொந்த மண்ணை நாமே ஆளவேண்டும். எமது உரிமையை நாம் பெற்றேயாக வேண்டும். இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட எமது பகுதிகள் மீட்கப்படவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சொந்த மண்ணை மீட்கவே இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர். தமிழ் பேசும் மக்கள் வரும் பொதுத் தேர்தலில் ஒற்றுமையாக வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை வெற்றியடையச் செய்ய வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்க் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் மாவை சோ. சேனாதிராஜா.

பண்ணாகம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் கடந்த வியாழனன்று நடைபெற்ற தேர்தல் கலந்துரையாடலில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். (ஐ-28)




## தெருக்கூத்து மூலம் தேர்தல் பிரசாரம்

வலி.தென்மேற்கு,மார்ச்14

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து வீதி நாடகங்கள் (தெருக்கூத்து) மூலம் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வலி.தென்மேற்குப் பகுதியின் சில முக்கிய சந்திகளிலும், வேறு இடங்களிலும் இவ்வாரம் நடத்தப்பட்ட இந்த வீதி நாடகத்தில் வீடு சின்னம் ஒன்று மத்தியில் வைக்கப்பட்டு அதனைச் சுற்றி யுவதிகள் சிலர் இத்தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஏன் ஆதரவு வழங்கவேண்டும்? என்ற தொனிப்பொருளில் தேர்தல் பிரசாரக் கலைநிகழ்வுகளை பக்க வாத்தியங்கள் சகிதம் மேற்கொண்டனர்.

வடலியடைப்பு அரசடி சனசமூக நிலைய முன்றிலில் கடந்த வியாழக்கிழமையன்று மினிபஸ் ஒன்றில் திடீரென வந்திறங்கிய இந்த வீதி நாடகக் குழுவினர் தங்கள் கலை நிகழ்வுடன் கூடிய பிரசாரத்தை நடத்தியபோது பெருந் திரளான மக்கள் சுற்றி நின்று பார்வையிட்டனர்.

சண்டிலிப்பாய், மானிப்பாய், சுதுமலை, பண்டத்தரிப்பு, சுழிபுரம் ஆகிய இடங்கள் உட்பட மற்றும் பல இடங்களிலும் இந்தத் தெரு நாடகம் நடத்தப்பட்டது. (எ-135)

# கட்சி வேற்றுமைகள், பேதங்கள் இருந்தாலும் முழுத் தமிழர்களினதும் அபிலாஷை ஒன்றே!

## மேல்மாகாண பிரசாரக் கூட்டத்தில் குமரகுருபரன்

கொழும்பு,மார்ச்14

கட்சிகள், அமைப்புக்களுக்கு இடையில் பிரச்சினைகள் இருந்தாலும் ஒட்டுமொத்த தமிழர்கள் என்று பார்க்கும்போது அவர்களது அபிலாஷைகள் ஒன்றுதான். அது வெல்லப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியப் பணிக்குழுவின் பொதுச் செயலாளர் க.குமரகுருபரன்.

மேல்மாகாண மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் மனோ கணேசனுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட தேர்தல் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டி 16ஆம் ஒழுங்கையில் கடந்த செவ்வாயன்று இந்தக் கூட்டம் நடைபெற்றது. தில்லைக் கூத்தன் நடராஜா கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

குமரகுருபரன் அங்கு மேலும் கூறியதாவது:-

தலைநகர் தமிழர் தம் நாடாளுமன்ற பிரதிநிதியாக தமிழ்த்தேசிய உணர்விற்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஆதரவு கொடுக்க வல்லவர்களே எமக்குத் தேவை. ஆகவேதான், கடந்த காலங்களில் தமிழ் மக்களின் அவலங்களிற்காக, தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகங்களுக்காக, குரல் கொடுத்தவரும் மேல்மாகாண மக்கள் முன்னணி வாயிலாகத் தனித்துவமான தமிழ்த் தேசியக் குரலுக்கு ஆதரவளித்தவருமான மனோ கணேசனின் வெற்றிக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொழும்பில் போட்டியிடவில்லை. ஆனால், வட - கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாரிய வெற்றி எமது அபிலாஷைகளை வலியுறுத்தும்.

தலைநகர்வாழ் தமிழ் மக்கள் தனித்துவத்தைப் பேணிக்கொண்டு காலப்போக்கில் தமிழ்த் தலைமையை ஏற்படுத்துவதன் மூலம்தான் தலைநகரில் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். அந்த வகையில், மேல் மாகாண சபையிலும் கொழும்பு மாநகர சபையிலும் தனித்து நின்று வெற்றி பெற்றுத் தமிழ் மக்களைத் தனித்துவம் காக்கும் வகையில் மாற்றும் பணியில் மேல்மாகாண மக்கள் முன்னணி படிப்படியாக ஈடுபட்டு வருகையில் இதற்கு மாறாக சிங்களத் தேசியக் கட்சியின் உணர்வை தமிழ் மக்களிற்கு ஊட்ட முயலக்கூடாது. தமிழ்க் கட்சிகளிற்குள், இயக்கங்களிற்குள் சிறுசிறு சலசலப்புகள், கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம். ஆனால், ஒட்டுமொத்தமான தமிழ்த் தேசியப் பிரச்சினையில் தமிழன் எங்கு வாழ்ந்தாலும் எமது அபிலாஷைகள் வெல்லப்படுவதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அந்தவகையில், சிங்கள பேரினவாதக்கட்சிக்கு உரிமை கோருபவர்களாக தமிழர்கள் இருக்க முடியாது. - என்றார். (ஐ)

# சர்வதேச அரசியல் அங்கீகாரத்தை இத்தேர்தல் மூலம் உறுதிசெய்வோம்!

## முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர்

முல்லைத்தீவு,மார்ச்14

"உலக அரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் நியாயமான உரிமைக்காகப் போராடி வரும் ஒரு விடுதலை இயக்கமென அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அந்த அங்கீகாரத்துடனேயே நாங்கள் உங்கள் முன்வந்து நிற்கிறோம். வரலாற்று முக்கியம் வாய்ந்த இந்தத் தேர்தல் மூலம் எமக்கான அரசியல் அங்கீகாரத்தை மக்களிடம் இருந்து பெற்று உலக நாடுகளுக்குத் தெரிவித்துக்கொள்வதற்கு இரவைப்பகலாக்கித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் முல்லைமாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் குவேனி.

கடந்த 3 ஆம் திகதி மாங்குளம் மகா வித்தியாலயத்தில் முல்லை மாவட்ட எழுச்சிப்பேரவை செயலாளர் எஸ்.ஜெயபாலன் தலைமையில் நடந்த எழுச்சிப் பேரவையின் வேட்பாளர் அறிமுகவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலக அரங்கில் உள்ள நாடுகளால் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் தேர்தல் மூலமான அரசியல் அங்கீகாரத்தை பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இந்தத் தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகும்.

வன்னி மாவட்டத்திலுள்ள எமது மக்கள் நீண்டகாலமாகத் தேர்தலை எதிர்கொள்ளவில்லை. அதனால், அவர்கள் வாக்களிப்பதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வீடுவீடாகச் சென்று தெளிவுபடுத்தவேண்டும். இந்தத் தேர்தலில் இரவுபகலாகப் பாடுபட்டு எமது தேசியத்தை வலுப்படுத்தவேண்டும். நகரப்புற மக்களின் நிலை வேறானது. ஒதுக்குப்புற கிராம மக்களின் நிலை வித்தியாசமானது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து அரசிற்கு தலைமைதாங்கிய சகல கட்சித் தலைவர்களாலும் தமிழ்மக்கள் ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

சாத்வீகமான போராட்டங்கள் நசுக்கப்பட்டதன் காரணமாகவே தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தார். இன்று உலக அங்கீகாரம்பெற்ற விடுதலை இயக்கமாக இருக்கிறோம். உலகநாடுகள் இந்தத் தேர்தலில் நாம்பெறும் அரசியல் அங்கீகாரத்தை அவதானித்துக் கொண்டு இருக்கின்றன. இந்த வரலாற்றுத் தேர்தலில் எழுச்சிப்பேரவை பிரிதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு இருப்பவர்களும் எமது முழுப்பங்களிப்பை தவறாது செய்யவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

இந்த எழுச்சிக்கூட்ட அறிமுக நிகழ்வில் முல்லை மாவட்ட நிதிப் பொறுப்பாளர் எம்.ஆதவன், முல்லை மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் முகுந்தன், அம்பாகமம் பாடசாலை அதிபர் நாகேந்திரராசா, கிராம அலுவலர் கு.சச்சிதானந்தமூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர். (ஐ-88)

# வலி.வடக்கில் பிரசாரம் மெல்லச் சூடு பிடிக்கிறது

தெல்லிப்பழை,மார்ச்14

வலி.வடக்கில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் படிப்படியாகச் சூடு பிடித்து வருகின்றன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, சுயேச்சைக்குழு - 1 என்பன தமது பரப்புரைகளில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றன.

கூட்டமைப்பு உறுப்பினர்கள் தற்போது வலி. வடக்கிலுள்ள கிராமங்கள் தோறும் சனசமூகநிலையங்களில் மாலைநேர ஒன்று கூடல்களை ஏற்படுத்தி பொதுமக்களைச் சந்தித்து வருகின்றனர்.

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி தனது மல்லாகம், சுன்னாகம் அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள ஒலிபெருக்கிகள் மூலம் பரப்புரைகளைச் செய்துவருகின்றது. சுயேச்சைக் குழுவினர் வீடுகளுக்கும் பாடசாலைகள், அரச திணைக்களங்கள் என்பவற்றிற்கும் நேரடியாகச் சென்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து வருகின்றனர். அதேவேளை, சில வேட்பாளர்களை விமர்சிக்கின்ற அநாமதேய துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (ஐ-150)



# ஆயுதப் போராட்டத்துக்குப் பக்கத்துணையாக நின்று நாடாளுமன்றிலும் குரல்கொடுக்க வாக்களியுங்கள்!

## தேசியப் பட்டியல் வேட்பாளர் ஈழவேந்தன் வேண்டுகோள்

புலிகளின் ஆயுதப் போராட்டத்துக்குப் பக்கத்துணையாக இலங்கை நாடாளுமன்றத்திலும் குரல் ஒலிக்க எமது கூட்டமைப்பு வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்யுங்கள்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் வேட்பாளர் மா.க.ஈழவேந்தன்.

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற தமிழ்க்கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போதே ஈழவேந்தன் இந்தவேண்டுகோளை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

குருநகர் மக்கள் எனக்குப் புதியவர்களல்லர். தமிழன் வாழாத நாடு இல்லை. ஆனால், தமிழனுக்கு என்று ஒரு சுதந்திர நாடு இல்லை. அறவழிப்போராட்டம் சரிவராத நிலையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். தமிழரின் விடிவிற்காக 16 வயதில் போராட்டத்தை ஆரம்பித்த பிரபாகரனின் தமிழ் உணர்ச்சி அவரது 49 ஆவது வயதிலும் குறையவில்லை. பிரபாகரன் காலத்தின் பெயர்; அது ஒரு தனி மனிதனது பெயரல்ல. உலக வரலாற்றில் இப்படி ஒரு தலைவன் இருந்ததில்லை. வரலாற்றைப் படைக்கும் பெருமை அவனுக்கு உண்டு.

எமது போராட்ட வரலாற்றில் 70 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இறந்துள்ளார்கள்; பலர் அங்கவீனர்களாகியுள்ளார்கள். 17 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழீழ விடுதலைப் போராளிகள் மாவீரர்களாகியுள்ளார்கள். தமிழனின் பெருமளவு சொத்துக்கள் அழிந்துள்ளன.

தமிழினமே விழிப்போடு இரு. ஏப்ரல் 2 ஆம் திகதி வாக்குச்சாவடிக்கு காலை 10 மணிக்கு முன்பே சென்று வாக்களியுங்கள். துரோகிகளுக்கு வாக்களிக்கவேண்டாம் - என்றார்.

அங்கு உரையாற்றிய கூட்டமைப்பின் தலைமை வேட்பாளர் மாவை சேனாதிராஜா தெரிவிக்கையில்:-

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தேர்தலை நாம் சந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 2001ஆம் ஆண்டு தேர்தலில் மக்கள் தந்த ஆணையின்படி 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்மிடம் இருந்தார்கள். எமது நாட்டில் நடப்பது பயங்கரவாத செயற்பாடு என்று ஜனாதிபதி சந்திரிகா கூறிவாக்குக் கேட்டார். ஆனால், நாம் தமிழனது போராட்டம் ஒரு தேசியப் போராட்டம் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் மட்டுமே பேசவேண்டும் என்றும் கூறிக்கொண்டு வாக்குக் கேட்டபோது மக்களாகிய நீங்கள் மாபெரும் ஆணையைத் தந்தீர்கள்.

பிரதமர் ரணிலும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பேசித் தீர்வுகாண வேண்டும் என்ற கொள்கையைத் தேர்தலில் வைத்தவர். அதற்கு சிங்கள மக்கள் ஆணை வழங்கினார்கள். ரணில் இந்த நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக புலிகளுடன் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்தார். பயங்கரவாதிகள் என்று அழைத்த சர்வதேசமே கிளிநொச்சிக்கு வந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியது. 1977இல் தமிழீழத்துக்கு ஆதரவு தந்தீர்கள். ஜே.ஆர்.ஜெயவர்த்தன கலவரத்தை உருவாக்கினார். அந்தநிலை இன்று இல்லை. யுத்த நிறுத்த ஒப்பந்தம் தமிழ்மக்களது சுதந்திரப் போராட்டத்துக்குக் கிடைத்த அங்கீகாரம்.

20 ஆண்டுகள் நடைபெற்ற போரினால் 9 லட்சம் குழந்தைகள் முழு வளர்ச்சியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். யாழ். குடாநாட்டில் 97ஆயிரம் வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. 30 வீதமான நிலப்பரப்பு இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளடங்கியுள்ளது.

இப்போது சர்வதேசம் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவ முன்வந்தது. விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக அலகைப் பேச்சில் முன்வைத்தார்கள். சர்வதேசம் அதனை ஏற்றுக்கொண்டது.

தேர்தலை நடத்தவேண்டாம், புலிகளுடன் பேசித்தீருங்கள் என்று உலகநாடுகள் சந்திரிகாவிடம் கூறியும் அவர் திரும்ப ஆட்சியை ஏற்படுத்தும் நோக்குடன் ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்து ஆட்சியைக் கலைத்து தேர்தலை நடத்துகின்றார். பேரினவாத ஆட்சியை ஏற்படுத்த பௌத்த மத ஒற்றையாட்சியை - இராணுவ ஆட்சியை - உருவாக்க வெளி நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தங்களை அரசு செய்கிறது.

விடுதலைப் புலிகளை அங்கீகரித்து பிரதமர் ரணில் போர் நிறுத்தம் செய்ய தமிழர் படையை நாம் பலமிழக்கச் செய்யலாமா? தியாகத்தால் - அர்ப்பணிப்பால் உருவான எமது விடுதலைப் புலிகள் எமது தமிழ் மக்களின் முதுகெலும்பாக உள்ளார்கள். தமிழ்மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தை அங்கீகரித்துள்ளார்கள் என்பதை இந்தத் தேர்தலில் வெளிக்காட்டவேண்டும் - என்றார்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புதிய சிறிய டிஜிற்றல் வீடியோ கமரா விற்பனைக்குண்டு. A.புகழ், துன்னாலை. T.P. 077 - 577629, K.ஸ்ரீசம்பிதன், ஊரிக்காடு, V.V.T. (29624)

7 மாதம் நிரம்பிய சுத்தமான **Dobermann Pincher** பெண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபால சிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29595)

**Yamaha Mate - 50 (Ycls Model) NPGCxxxx** இலக்க (மிகவும் நல்ல நிலையிலுள்ள) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு:59/1, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.(29597)

நல்ல நிலையிலுள்ள மோட்டறோலா தொலைபேசி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: காங்கேசன் T.P.: 060213289. (29608)

சொந்த தனியார் பாவிப்பும், மிகவும் நல்ல நிலையிலும் உள்ள யமஹா (**Yamaha**) 50மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: துரைவிமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். T.P. 222 5696 (29590)

**Prima Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (**Electronic** நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத திரைச் சந்தையடி, நல்லூர்.(29593)

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து வேண்டிய நிறையில் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது. 1Kg 200/- றாஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. No.222 3527. (29577)

சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தில் 7½ பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 16, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். T.P. 0777 773311. (29623)

இல.75, கச்சேரி நல்லூர் றோட்டில் ஆசீர்வாதப்பர் கோயிலுக்கு முன்பாக ஒரு பரப்பு காணியுடன் கூடிய மாடிவீடு கடையுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.ரதன், T.P. 077 6028401. (29598)

மலர்மகள் வீதி, அரியாலையில் 2¾ பரப்புக்காணி பயன்தரு மரங்களுடனும் நன்னீர்க் கிணற்றுடனும் வீட்டுடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 92, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (29519)

சாவகச்சேரி கற்குழிலேன் **Off Post Office Road** 9 பரப்பு 13குழி வளவு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: ரவி, தளையசிங்கம், 56/1A, பலகல றோட், ஹெந்தல, வத்தளை, T.P.2933348, **Office** 2341197.(சி-33613)

எழுதுமட்டுவாள் பகுதியில் 60 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு உள்ளது. தொடர்புகளுக்கு 0777 678324 (சி-33932)

இல36/2, றெயில்வே லேன், இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தில் 5 அறைகள், இரண்டு ஹோல், குசினி, குளியலறைகளுடன் 1¾ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைகது உண்டு. தொடர்பு: M.R.முத்துபாலசூரியர், 36/2, றெயில்வே லேன், இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம்.(29637)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்துக்கும் முகமாலைக்கும் இடையில் தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: இல.5, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (29606)

### மெசின் மைண்டர் தேவை

கொழும்பில் உள்ள அச்சகமொன்றில் Hamada RX/775 அச்சுஇயந்திரத்தை இயக்கக் கூடிய மெசின் மைண்டர் தேவை. தங்குமிட வசதி, சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

தொடர்புகளுக்கு:S.தயாபரன்
☎ 0776176865 (யாழ்ப்பாணம்)
011 2504370,2361329 (கொழும்பு).

(21-19-16-34) (29632)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கணபதி கதிரவேலு என்பவரின் தேசிய அடையாள அட்டை, ஜொப் காட், விசேட அடையாள அட்டை என்பன திருநெல்வேலிச்சந்தியில் 12.03.2004 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 191, ஆடியபாதம் வீதியிலுள்ள தியாகராஜா கிளினிக்கில் ஒப்படைத்துதவும். (29626)

வேல்முருகன் நகுலேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (782780972V), விசேட அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை (**Bag**) 05.03.2004 அன்று அளவெட்டிக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வை.வேல்முருகன் நாவற்குழி, கைதடி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (29602)

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைச் சேர்ந்த சி.சிவஞானம் என்பவருடைய மூக்குக்கண்ணாடி, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை (**Bag**) ஒன்று நல்லூர் ஆலய வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நல்லூர் உபதபாற்கந்தோரில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (29630)

12.03.2004 மாலை A-9 வீதியில் முகமாலைக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் 'சீக்கோ (5) கோல்ட்' கைக கடிகாரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஐ.பாலகங்காதரன், மு/கல்விளான் அ.த.க பாடசாலை துணுக்காய் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (29635)

## சோதிடம்

உங்கள் கல்வி, தொழில், விவாகம புத்திரர், நோய் ஆகியவை பற்றிய வினாக்களுக்கு உரிய விடையை உடனே பெறலாம் ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம் மூலமாகப் பதில் அளிக்கப்படும். விவரங்களுக்கு: டாக்டர்: த.சிவானந்தன் (பிரபல சோதிடர்) 264, பலாலி வீதி, கந்தர்மடம். (29606)

## வாடகைக்கு

இல.630/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடைய வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: சண்முகம் மோகனதாஸ், 630/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (29629)

### தேவை

**சுன்னாகம் தனியார் பெற்றோல் செற்றில் வேலைக்கு ஆள்தேவை. தகுந்த வேதனமும் பண்ணாகத்தில் தங்குமிட வசதியும் வழங்கப்படும். 40 வயதுக்கு மேற்பட்ட குடும்பஸ்தர் விரும்பத்தக்கது.**

தொடர்பு: **திரு.ச.கனகரசன்,** பண்ணாகம்.
(தபாற்கந்தோரில் விசாரிக்கவும்)

(29507)(34-16-19)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், திருவாதிரை நட்சத்திரம், ஏழுச்செவ்வாய், 27 வயதுடைய, சொந்த வர்த்தகம் செய்யும் மணமகனுக்கு அழகிய, படித்த, நற்குணமுடைய மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2198 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (29615)

மட்டக்களப்பைச் சேர்ந்த, 1961இல் பிறந்த, **M.A.** படித்து **Ph.D.** படிக்க வெளிநாடு செல்லவிருக்கும் மாவட்டதிற்குப் பொறுப்பான அரச **Staff Grade** உத்தியோகம் பார்க்கும், குடிப்பழக்கமற்ற, இந்து மணமகனுக்கு 35 வயதிற்குட்பட்ட அழகிய மணமகளைக் கனடாவில் இருக்கும் சகோதரி தேடுகிறார். முழு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும் விளம்பர இல. 2188 மே.பா உதயன், யாழ்ப்பாணம். (29279)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 40 வயதுடைய, **M.Sc.** பிரதான பொறியியல் நிபுணரான மகனுக்குத் தகுந்த **Professional** மணமகளை உள்/வெளிநாட்டில் எதிர்பார்க்கின்றனர். சாதகக் குறிப்பு முழு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். விள.இல.2191, C/o உதயன்.(29407)

## சிங்கள வகுப்பு

மேற்படி சிங்கள மொழிப் பயிற்சிகள் கோப்பாய் இளைஞர் கழகப் பணிமனையில் நடைபெறும். சனி, ஞாயிறு காலை 10மணி முதல் கட்டணம் ரூபா 100/=. இன்றே பதிவுசெய்யுங்கள் (பெற்றோல் செற் முன்பாக, கோப்பாய்). வழிகாட்டல் ஆசிரியர், மல்வான. (29179)

## இலகு திருமண சேவை

1974, ரோகினி, செவ்வாயற்ற பாவம் 53, **NGO** கணக்காளர் உத்தியோகத்தருக்கு அழகிய, உத்தியோக மணப்பெண் நகைத் தொழில் குடும்பத்தைச் சேர்ந்தவரிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்பு: துரை விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (29589)


## யப்பான் சைக்கிள்



புதிய கையிருப்பு

01. கியர், ஓட்டோமற்றிக் லைட், கப் பிறேக் போன்ற விசேட அம்சங்களுடன் பல மொடல்களில் யப்பான் சைக்கிள்.
02. கழுவிப்பூட்டவோ அடிக்கடி பழுதுபார்க்க வேண்டிய அவசியமோ இல்லை.
03. போலியான பளபளப்புகளை நம்பி ஏமாறாமல் குறைந்த விலையில் கிடைக்கக் கூடியதும் சுலபமான ஓட்டத்திற்கும், நீண்டகாலம் செலவின்றி பாவிக்கக்கூடியதுமான ஒரு யப்பான் சைக்கிளை வாங்குவதற்கு வாருங்கள்.

**சித்திவிநாயகர் யப்பான் ப(B)சார்**

631 A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் அருகில்)

(29627)(34)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 26 - 06 - 1924 | 13 - 02 - 2004 |

### அமரர் வேலன் முருகன்

*அன்போடும் பண்போடும் வாழ்ந்து மறைந்த உங்களை எங்களால் மறக்க முடியவில்லை.*
*ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (14.03.2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறு கின்றது. ஆகவே, எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொள்வதோடு, நண்பகல் நிகழ்கின்ற மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கைதடி மேற்கு,*
*கைதடி.*

-குடும்பத்தினர்.

(29633)(21-19-16)

## இதய பூர்வ அஞ்சலி


7 ஆம் ஆண்டு



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 09 - 09 - 1926 | 14 - 03 - 1997 |

**திருமதி நேசமணி பெஞ்சமின்**

51 ஆம்ஆண்டு



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10 - 11 - 1947 | 28 - 07 - 1953 |

**செல்வி எலிசபெத் பெஞ்சமின்**

இரக்கத்தின் தேவனே இவர்களுக்கு நிலை வாழ்வைக் கொடுத்தருளும் ஆமென்

நாளை (15.03.2004) திங்கள் காலை 6.30 மணிக்கு யாழ். புனித மரியாள் பேராலயத்திலும் நீர்வேலி தெற்கு புனித அந்தோனியார் ஆலயத்திலும் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*அந்தோனியார் கோவில் வளவு,*
*நீர்வேலி தெற்கு.*

பிரிவால் துயருறும்:
அ.இ.பெஞ்சமின்
(கணவர்,தந்தை)

(29638)(37-21-16-19)


## இவ்வாரம் ஆரம்பம்

**புதிய பாலர் பாடசாலை**
**பிரிட்டிஸ் பிஸினஸ் கல்லூரி**

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க எதிர்வரும் சித்திரை/வைகாசி மாதத்தில் புதிய பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.



இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

| வளந்தோருக்கான ஆங்கில பாட நெறிகள் | சிறுவர்களுக்கான ஆங்கில பாட நெறிகள் |
|---|---|
| 3 MONTHS Diploma in English | Foundation |
| 6 MONTHS Certificate in English | Lower Intermediate Intermediate |
| Advanced Diploma in English | Upper Intermediate |

6 MONTHS COURSES

British BUSINESS SCHOOL
*Where Students Come First*

**BRITISH BUSINESS SCHOOL**

யாழ்ப்பாணம்: இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

வடமராட்சி: பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி.

T.P: 021-222 5796



நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள பெண்கள் பண்பாட்டு மையத்தில் நேற்று நடைபெற்ற 'சங்கமம்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்.
(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்).

# பெண்ணால் குடும்பத்தை மட்டுமல்ல சமூகத்தையும் உயர்த்திட முடியும்

## பெண்கள் பண்பாட்டு மைய ஆரம்ப நிகழ்வில் தமிழினி

யாழ்ப்பாணம்,மார்ச்14

ஆளுமையுள்ள ஒரு பெண்ணினால் அவளது குடும்பத்தை மட்டுமல்ல அவள் சார்ந்த சமூகத்தையே உயர் நிலைக்குக் கொண்டுவர முடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி.

நேற்று நல்லூர் கோவில் வீதியில் பெண்கள் பண்பாட்டு மையம்' என்ற அமைப்பின் அங்குராப்பண வைபவம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி மையத்தின் இணைப்பாளர் கிருஷ்ணவேணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் போராளிகளும் பொதுமக்கள் உட்பட ஏராளமான பெண்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் தமிழினி மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழத்திலுள்ள பெண்களின் ஆழ் மனதின் உணர்வுகளைத் தட்டி எழுப்பி அவர்களை சமூகத்தில் எப்படி உயர்த்தவேண்டும் என்று எமது தேசியத் தலைவர் விரும்பினாரோ அந்தப் பணியை இந்தப் பெண்கள் பண்பாட்டு மையம் செய்துகொண்டு வருகிறது.

பெண்களால் எதனையும் சாதிக்க முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில் சமூகத்துக்குப் பெறுமதியான வேலைகளைச் செய்து வந்தவர்கள் எமது தமிழீழப் பெண்கள். ஒரு குடும்பத்தில் தாய் ஆளுமையுடையவளாக இருந்தால் அவளால் அந்தக் குடும்பத்தில் மட்டுமன்றி அவள் சார்ந்த சமூகமே முன்னேற்றமடையும். ஆளுமையுள்ள பெண்ணினால் சமூகத்தில் பலமாற்றங்களை ஏற்படுத்த முடியும். அதற்காக முதலில் பெண்கள் அனைவரும் தமக்குள் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

எமது சமுதாயத்தில் பெண்கள் வளர்த்தெடுக்கப்படுகின்ற விதமே வித்தியாசமானது. அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு சமூகத்தின் ஒரு மூலைக்குள் ஒதுக்கப்பட்டுத்தான் எமது பெண்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அந்தப் பெண்களை அவர்களின் மன உலக இருட்டிலிருந்து வெளிக்கொணர வேண்டியது பெண்களின் விடுதலையில் அக்கறை கொண்டுள்ள அனைவரதும் கடமையாகும்.

எவருக்கும் பயப்படாது, தமது கருத்துக்களை துணிச்சலுடன் வெளியில் சொல்லக்கூடிய நிலைமைக்கு தமிழீழப் பெண்கள் அனைவரும் மாற்றமடைய வேண்டும்.

எமது விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் அதில் பெண்களின் பங்களிப்பு என்பது மிகவும் காத்திரமானது. சமூகத்திலே அடக்கப்பட்டு சாதாரண பெண்களைப் போல இருந்துதான் நாங்கள் போராளிகளாக இணைந்து கொண்டோம். அவ்வாறு இணைந்தபோது எமது தலைவர் எமக்கு முன்னேறுவதற்குரிய சந்தர்ப்பங்களை அளித்தார் அந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நாங்கள் முன்னேறினோம்.

பெண்கள் வெறுமனே கல்வியிலும் பொருளாதாரத்திலும் மட்டுமே முன்னேறினால் போதாது. அவர்களின் மனதில் மாற்றம் ஏற்பட்டு அவர்கள் மனதளவில் முன்னேற வேண்டும்- என்று தெரிவித்தார்.

தமிழ்க் கூட்டமைப்பின் பெண் வேட்பாளரான திருமதி பத்மினி சிதம்பரநாதன், கலாநிதி கே.சிதம்பரநாதன் ஆகி யோரும் உரையாற்றினார்கள். (ஜ-4)

### கணனிகள் அன்பளிப்பு

மானிப்பாய்,மார்ச்14

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அதன் ஸ்தாபகர் ய.சங்கரப்பிள்ளை நினைவாக அன்னாரது பேரனும் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவருமான டி.எம்.சுவாமிநாதனால் இருபது கணனிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (எ-90)

### பூச்சியியலாளர் குழு நெடுந்தீவு விஜயம்

நெடுந்தீவு,மார்ச்14

நெடுந்தீவுப் பிரதேசத்தில் நீண்ட காலமாகக் காணப்படும் ஒருவகை நிலப் பூச்சியின் தாக்கம், அதன் தன்மை என்பன பற்றிக் கண்டறிவதற்காக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த பூச்சியலாளர் குழுவொன்று கடந்த வாரம் அங்கு விஜயம் செய்தது.

இவர்கள் அப்பிரதேசத்திலுள்ள நிலப்பூச்சியின்தாக்கம் அதிகமாகவுள்ள வீடுகளுக்குச் சென்று அந்த பூச்சிகள் இருக்கும் இடங்களைப் பார்வையிட்டதுடன், மேலதிக ஆய்வு நடவடிக்கைகளுக்காக இந்தப் பூச்சி வகைகளைப பிடித்துச்சென்றுள்ளனர். (எ-ரி)

## திஸ்ஸதேவேந்திரா ஆணைக்குழுவின் சிபார்சு:

# 3 லட்சம் ஊழியர் வேலையிழப்பதை மூடிமறைக்க முயல்கிறார் ஜனாதிபதி

## உல்லாசப் பயணத்துறை அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச்14

அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்குவதாகக் கூறும் ஜனாதிபதி சந்திரிகா, திஸ்ஸதேவேந்திரா ஆணைக்குழுவின் சிபார்சுக்கமைய மூன்று லட்சம் ஊழியர்கள் வேலையிழக்கப்போவதை மூடிமறைக்கிறார் என்று அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கொழும்பு கேம்பிறிச் ரெறசில் உள்ள ஐ.தே.கட்சியின் ஊடகப்பிரிவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் சம்பள விவகாரம் தொடர்பாக திஸ்ஸ தேவேந்திரா ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களை ஜனாதிபதி நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

சம்பளம் வழங்குவது தொடர்பான வாக்குறுதிகளை வழங்குவதில் ஜனாதிபதி மிகுந்த ஆர்வங்காட்டுகிறார். தேர்தல் காலத்தில் வாக்குறுதி வழங்குவதில் பழைய ஏமாற்று வித்தையையே அவர் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார்.

1996ஆம் ஆண்டுமுதல் அரச ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பை வழங்கமுடியாத அளவுக்கு வங்குரோத்து நிலையை அடைந்திருந்தது அவரது அரசு - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-10)

## பாதுகாப்பு வலயத்தில் உள்ள அலுவலகங்களுக்கு

# தெல்லிப்பழைச் சந்தியூடாகச் சென்றுவர ஊழியருக்கு அனுமதி

தெல்லிப்பழை,மார்ச்14

வலி.வடக்கு, உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் உள்ள தமது அலுவலகங்களுக்கு தெல்லிப்பழைச் சநதியூடாகச் சென்றுவர விண்ணப்பித்த அரச கூட்டுறவு ஊழியருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழைப் பகுதியிலுள்ள பிரதேச செயலகம், வைத்தியசாலை, ப.நோ.கூ. சங்கம் என்பவற்றில் பணியாற்றும் இளவாலை, சண்டிலிப்பாய், அளவெட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஊழியர்கள் பலர், தெல்லிப்பழைச் சந்தி வழியான போக்குவரத்துத் தடை செய்யப்பட்டிருந்ததால் இதுவரை காலமும் சுன்னாகம், மல்லாகம் சந்தி வழியாக நீண்டதூரம் பயணம் செய்தே தமது பணிகளை மேற்கொண்டு வந்தனர்.

அவ்வாறான ஊழியர்கள் 39 பேர் தம்மை தெல்லிப்பழைச் சந்தியூடாகப் பயணஞ்செய்ய அனுமதிக்கக்கோரி பலாலி இராணுவ கட்டளைத் தலைமையகத்துக்கு விண்ணப்பித்திருந்தனர்.

அவர்களுக்கே தற்போது இவ் வீதி வழியே பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதிக்கடிதம் பலாலி தலைமையகத்தால் வலி. வடக்கு பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (எ-150)

# பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு ரூ. 30 லட்சம் செலவில் புதிய மாடிக்கட்டடம்

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டடம் அமைப்பதற்கான அத்திவாரக்கல் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடப்படும்.

இந்தச் செயலகத்துக்கான மாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு 30 லட்சம் ரூபா மத்திய அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

செயலகத்தை நிர்மாணிப்பதற்கென வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவுக்கு அருகில் பொதுமக்களால் வழங்கப்பட்ட 12 லட்சம் ரூபா செலவில் காணி ஒன்று முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. (எ-173)

# மதுபான நிலையம் முற்றுகை

தெல்லிப்பழை,மார்ச்14

வட்டுக்கோட்டைப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் - நீண்டகாலமாக அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப் படாத நிலையில் -இயங்கிவந்த மதுபான விற்பனை நிலையம் ஒன்றை பொலீஸார் முற்றுகையிட்டு அங்கிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான மதுப் போத்தல்களைக் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த வாரம் வட்டுக்கோட்டைப் பொலீஸார் மேற்கொண்ட நடவடிக்கையின்போது இந்த சட்டவிரோத மதுபான விற்பனை நிலையம் இணங்கானப்பட்டது.

அத்துடன், நீண்டகாலமாக அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படாத நிலையில் இந்த விற்பனைநிலையம் இயங்கி வந்தமையும் விசாரனையின்போது தெரியவந்தது. இங்கிருந்து 631 போத்தல் வெளிநாட்டு உயர் ரக மதுபானங்களையும் பொலீஸார் கைப்பற்றினர்.

மேற்படி நிலையத்தின் உரிமையாளர் கடந்த வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டபோது வழக்கை விசாரித்த மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி தேவி இளங்கோவன் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், மதுபானம் விற்று அதன் பெறுமதியை அரசுக்குரிய இறையாகச் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

### தேர்தல் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,மார்ச்14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு காரை நகர், தோப்புக்காடு கிராம முன்னேற்ற அபிவிருத்திச்சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.(எ-10)

★ ★ ★

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு காரை நகர், களபூமி தெருவில் பிள்ளையார் ஆலய முன்றில் நடைபெறவுள்ளது. (எ-10)



யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மீண்டும் இயங்கத் தொடங்கிய பின்னர் முதலாவது விளையாட்டுப்போட்டி நேற்றுக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. அங்கு எடுக்கப்பட்ட படங்கள் இவை.
(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்).

# 150 ஆவது ஆண்டு விழாவையொட்டி ஸ்ரீ சாரதாதேவி 4நாள்கள் ரத பவனி

வடமராட்சி,மார்ச்14

அகிலாண்ட நாயகி அருள்மிகு தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியின் 150 ஆவது ஆண்டு விழாவையொட்டி தமிழ் மக்களின் துயர்துடைக்க ரதத்தில ஆரோகணித்து யாழ். குடாநாட்டில் நான்கு நாளகள் பவனியாக வரவுள்ளார்.

தூய அன்னையின் ரதப்வனி எதிர் வரும் 17ஆம் திகதி பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்ஸிரமத திலிருந்து புறப்பட்டு தம்பசிட்டி வீதி வழியாக வட. இந்து மகளிர் கல்லூரியை அடைந்து அங்கிருந்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, செல்வச்சந்நிதி ஆவரங்கால் மகாஜனாக் கல்லூரி ஆகியவற்றுக்குச் சென்று தெல்லிப்பழை துர்க்காதேவி கோயிலை அடையும்.

மறுநாள் 18ஆம் திகதி வியாழக் கிழமை அங்கிருந்து புறப்பட்டு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியை அடைந்து அங்கிருந்து நல்லை ஆதீனத்தைச் சென்றடையும், அதற்கு அடுத்தநாள் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை நல்லை ஆதனத்திலிருந்து புறப்பட்டு வேம்படி மகளிர் கல்லூரி சென்று அங்கிருந்து கோப்பாய் அரசின் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை சென்றடையும், எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை அங்கிருந்து புறப்பட்டு சாவகச்சேரி ஊடாக மீண்டும் பருத்தித் துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாசசிரமத்தை வந்தடைவதுடன பவனி நிறைவுறும்.

இப்பவனி நிகழ்வில் தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் மங்கையர் மலர் சஞ்சிகையின் ஆசிரியர் திருமதி மஞ்சுளா ரமேஷ் கொழும்பு ஸ்ரீ இராமகிரஷ்ண சாரதா சேவாச்சிரமத்தை சேர்ந்த சுவாமி ஆத்ம கணானந்தாஜி, சுவாமி ராஜேஸ்வரணானந்தர் ஆகியோா கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள்.

பவனி தரித்து, தங்கிச்செல்லும் இடங்களில் இவர்கள் சொற்பொழிவுகளையும் நிகழ்த்துவார்கள்.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் இந்த ரதபவனி நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளது. (ம-173)

## கலந்துரையாடல்கள்

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வசிபபோருக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தீவகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு இடம் பெயர்ந்து வெளிமாவட்டங்களிலும் யாழ். நகரை அண்டிய பகுதிகளிலும் வாழும் அனைவரையும தவறாது கலந்துகொள்ளுமாறு தீவகக் கோட்ட எழுச்சிப் பேரவை கேட்டுள்ளது. (ம-5-86)

★ ★ ★

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கலந்துகொள்ளவுள்ளதால் தவறாது அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-7)

## இன்றைய நிகழ்வுகள

யாழ்ப்பாணம்,மார்ச்14

மானிப்பாய் மருதடி விநாயகர் அற நெறிப் பாடசாலையில் இன்று ஞாயிற்றுக கிழமை காலை 9 மணியளவில் சமயச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. கை.சுவாமிநாதன் 'அமரநாதம்' எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார். (எ-6-152)

★ ★ ★

காரைநகர்,மார்ச்14

காரைநகர், வாரிவளவு நல்லியக்க சபையினால் காரைநகர் பிரதேச முன் பள்ளி மாணவர்களிடையில் மாதாந்தம் நடத்தப்படும் கல்வி ஊக்கு விப்புப் போட்டித்தொடரில் இம்மாதத்திற்கான போட்டிகள் இன்று ஞாயிறறுக் கிழமை காலை 9.00 மணிக்கு நல்லியக்க சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-73)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்14

யாழ்பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத்தில் இயங்கும் பாலர் பாடசாலைச் சிறார்களின் பேச்சுத்திறன் காணும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். சனமார்க்க வித்தியசாலை அதிபர் தலைமையில் மேற்படி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை **திருமதி யோகராஜா தேவகௌரி**
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி செல்லத்துரை நாகம்மா

அவர்கள் இயற்கையெய்தியதையிட்டு நாம் மிகவும் துயரம் அடைகின்றோம். அவரது இழப்பால் துயரமடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அமரரின் ஆத்மாசாந்திபெறப் பிரார்த்திப்பதோடு, கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

இராமநாதன் கல்லூரி, சுன்னாகம். (29634) (24-16-18) - அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.



## நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள் சோகத்தில் வந்து ஆற்றிய சொந்தங்களுக்கு



விஸ்வகுலத் தோன்றல்
அமரர்
**சொக்கலிங்கம் மகாலிங்கம்**
அவர்கள்

20.02.2004 இல் எம்மை ஆழாத்துயர வெள்ளத்தில் மிதக்கவிட்டு மீளாத்துயில் கொண்ட எம் குடும்ப விளக்கின் சுடர் அணைந்ததறிந்து நேரில் வந்தும் தந்தி , தபால், தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் வழங்கிய அனைவருக்கும் -

மலர் வளையங்கள் சாத்தியும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும் இறுதி நிகழ்வில் நேரில் கலந்துகொண்டும் எமது துயரத்தைத் தம் தோள் மேல் ஏற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், ஊரவர் அனைவருக்கும் எம் அன்பில் ஊறிய நன்றிகள்.

லண்டனில் துயருற்றிருக்கும் மகனினதும் மகளினதும் சகோதரனதும் இல்லங்களுக்குச் சென்று துயரத்தைப் பங்கிட்டுக்கொண்டு ஆற்றிய உறவினர்களுக்கும் மற்றும்சகல வெளிநாட்டிலிருந்து தொடர்பு கொண்ட நண்பர்களுக்கும் அன்புடன் நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

இன்று (14.3.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளும் அத்தனை பேருக்கும் எமது அன்பு நன்றிகள்.

- அன்புடன்- மனைவி,
திருமதி இராஜலட்சுமி மகாலிங்கம்
குடும்பத்தினர்,
மருமக்கள்:
சி.யோகரஜனி, தெ.மணிவண்ணன்,
சகோதரன்:
சொ.குமாரலிங்கம் குடும்பத்தினர்
பிள்ளைகள்: ம.சிவசங்கர், ம.அனுஷியா.

*"பொன்னம்பலவாசா"
அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.*
(29657)(38-16-17-18)



## வீடும், காணியும் விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு மிக அண்மையில் உடுவில் - மானிப்பாய் வீதியில் அமைந் ள்ள வீடு மூன்று பெரிய படுக்கை அறைகள், சமையலறை, கிணறும் 4½ பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. அத்துடன், டச்சு வீதியில் கிணற்றுடன் 5 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை தொடர்புகொள்ளும நேரம்: காலை 10.00-12.00 மாலை 3.00-6.00வரை.

தொடர்பு: திருமதி R.P.செல்லையா (எலிபன்ற்வில்லா) Elephant Villa
(சி33631) டச்சு வீதி. உடுவில். (37)



## கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
அவர்களின்
# தமிழர் ஜப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல்
## நூல் அறிமுகவிழா



காலம்: 14.03.2004 காலை 9.30 மணி (ப.நே.)
இடம்: நெல்லை முருகன் திருமண மண்டபம்
தலைவர்: திரு.ஆ.சிவநாதன் (ஆசிரியர், நெல்லியடி ம.ம.வி.)

*விழா நிகழ்வில் கலந்துசிறப்பிப்போர்:*
பொ.கதிரமலை, பொ.அரவிந்தன், ஆறு.திருமுருகன், ஸ்ரீபிரசாந்தன், த.கலாமணி, வை.சாந்தலிங்கம், சுப்ரகௌரிபால குருக்கள், மா.நடராஜசுந்தரம், சி.சிவலிங்கராசா, க.சிதம்பரப்பிள்ளை, தியாக சோமஸ்கந்தராசாக் குருக்கள், க.நவரத்தினம், மு.நடராசா, மனோன்மணி சண்முகதாஸ்.

(சி-33632) (24-16-18)



## திருத்துநர் (மெக்கானிக்) தேவை

டீசல் வாகனங்கள் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருத்தக் கூடிய 5 வருடத்துக்கு குறையாத அனுபவமுள்ள தருத்துநர் (மெக்கானிக்) தேவை.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
யூரோவில், 866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(29658)(16-17-18)



## கண்ணீர் அஞ்சலி



திருமதி
### தவராசா கணேசபாக்கியம்

அவர்கள் 13.03.2004 அன்று சிவபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரின் குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு.திருமதி கதிர்காமத் தம்பியும்
பாலகிருஷ்ணன் குடும்பம்.

*"தவவாசா"
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.*
(C/33629)(34-16-18-24)


## மரண அறிவித்தல்கள்

### பரமு முத்துச்சாமி



(ஓய்வுபெற்ற றெயில்வே இலாகா ஊழியர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் இல.38, திருமகள் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பரமு முத்துச்சாமி அவர்கள் நேற்று (13.03.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு - ஆச்சிக்குட்டியின் அன்பு மகனும் சுந்தரம்மாவின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M.அமிர்தலிங்கம்
(துரை - கனடா)

*இல.38, திருமகள் வீதி,
அரியாலை.*
(29650)(12-17-18)

### திருமதி செல்லத்துரை நாகம்மா



டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம் மத்தியைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை நாகம்மா 12.03.2004 வெள்ளிக்கிழமை இரவு 11.00 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் செல்லத்துரை (ஆங்கில ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் கந்தன் வயிரவன்-பார்வதி அவர்களின் அன்புப் புதல்வியும் தேவநாயகி, தேவகுணாளன் (குணாளன் - லங்கா சிமெந்து லிமிட்டெட்), தேவலோகேஸ்வரன் (பபி - லங்கா சிமெந்து லிமிட்டெட், கடிகாரம் திருத்துநர்), தேவநங்கை, தேவறாயினி, தேவகௌரி (ஆசிரியர், இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசலிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், நிலஅளவைத் திணைக்களம்), நவரத்தினம் J.P. (தபாற்கந்தோர் உத்தியோகத்தர்), புவனேந்திரன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், விமானப்படை), யோகராஜா (உத்தியோகத்தர், S.V.M நிறுவனம்), சிவஞானசவுந்தரவல்லி, விஜயகுலராணி ஆகியோரின் அருமை மாமியாரும் கன்னியாகுமாரி (விஞ்ஞானபீடம், கல்வியியற்கல்லூரி, கோப்பாய்), ஜானகிராம், தேவரூபன், மோகனராம் (யூனியன் கல்லூரி மாணவர்கள்), நவசாந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி மாணவன்), ஜெயப்பிரஷாண், சஞ்சித் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்கள்), ருக்ஷானி (பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர்கல்லூரி மாணவி), விஷ்ணு ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (14.03.2004) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00மணியளவில் தகனக் கிரியைக்காகச் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.தேவகுணாளன்
(மகன்).

*புனித அந்தோனியார் வீதி,
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.*
(29663)(16-17-1840)

### ஆறுமுகம் முருகேசம்பிள்ளை

(துப்பாசியார் மகன்)

சக்கலாவோடை, காரைநகரைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் முருகேசம்பிள்ளை 11.03.2004 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் ஞானதேவியின் அன்புக் கணவரும் சிவகுமார்(கண்ணன்), திருவருட்சோதி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.இலட்சுமிதேவி
(சகோதரி).

புதுறோட்,
காரைநகர்.
(29653)(-16-18-17)

### திருமதி சிவபாக்கியம் ஆறுமுகம்

அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் உடுவிலைப் புகுந்த இடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் ஆறுமுகம் (முத்துக்குமாரு) அவர்கள் 12-03-2004 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற டாக்டர் ஆறுமுகம் (முத்துக்குமாரு) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பு - கமலாம்பிகை தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் சிறீஸ்கந்தராஜா, தங்கராணி, இரட்ணராஜா, விக்கினராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் லோனி, காலஞ்சென்ற வைத்தீஸ்வரன், பத்மினி புஷ்பராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது மைத்துனி இல்லத்தில் நாளை (15-03-2004) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் மாலை 4 மணிக்கு தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அவரது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தங்கராணி வைத்தீஸ்வரன்
(மகள்).

**105/12, 5ஆம் குறுக்குத்தெரு,
அல்விஸ் ரவுண் வத்தளை,
T.P.: 011 - 294 8234** (29647)(21-16-18-24)

## அறிவுறுத்தல் கூட்டம்

தரம் 11 மாணவர்களின் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கணிப்பீட்டிற்குப் பொறுப்பான ஆசிரியர்கள் தமது பாடசாலைகளின் தரம் 11 மாணவர்களின எண்ணிக்கை விவரத்துடன் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அன்றையதினம் காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணக் கோட்டத்தையும், பகல் 12 மணிக்கு நல்லூர் கோட்டத்தையும், பிற்பகல் 2 மணிக்கு கோபபாய் கோட்டத்தையும் சேர்ந்த ஆசிரியர்களையும் வருகை தருமாறு பிரதிக கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் கேட்டுள்ளார். (ம-6)

## இலட்சார்ச்சனை

மீசாலை மேற்கு, இலந்தைத்திடல ஸ்ரீ கங்காணியார் கந்தசுவாமி ஆலய ஷஷ்டமதின இலட்சார்ச்சனை இன்று தொடக்கம் தொடர்ந்து ஏழு தினங்கள நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி அமாவாசைத் தினத்தன்று ஸ்கந்த ஹோமத்துடன் இலட்சார்ச்சனை பூர்த்தியடையும். (எ-117)


**ஒப்படைத்துதவவும்**

யாழ்.மாவட்ட சமுதாய முன்னேற்ற நிலையம் நடத்த இருந்த அதிஷ்டலாபச் சீட்டுக்களின் ஒரு தொகுதி டிக்கெற்றுககள் கோப்பாயில் தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் எழில் - 077 6073399 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (29666)(12)





# மூன்று பிரதேசங்களுக்கான சமுர்த்தி மகாசங்கம் சங்கானையில்

வலி.மேற்கு,மார்ச்14

காரைநகர், சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய மூன்று பிரதேச மக்களுக்குமான சமுர்த்தி மகாசங்கம் சங்கனைப் பிரதேச செயலகத்தில் இயங்கவுள்ளது. இதற்கான நடவடிககையினை இலங்கை சமுர்த்தி அதிகாரசபை வங்கி நிதி நடவடிக்கைப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.எஸ்.ஏ.குணரத்ன மேற்கொண்டுள்ளார்.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் இயங்கிவந்த சமுர்த்தி மகாசங்கம சங்கானைப் பிரதேச செயலகத்திற்கு உடனடியாக மாற்றப்படவுள்ளதாகவும் தெரிகின்றது.

காரைநகர், சண்டிலிப்பாய், சங்கானைப் பிரதேச மக்களுக்கு சங்கானைப் பிரதேச செயலகமே மையமாக இருப்பதனால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டது. (ம-175)

## அரசியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்14

சமாதான அரசியல் தொடர்பான கருத்தரங்கு ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மாணவர் ஒன்றியத் தலைவர் பயகீரதன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் கூட்டமைப்பு வேடபாளர் ந.ரவிராஜ் மற்றும் அரசியல் பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-6)







## விபத்தில் காயமடைந்தவர் நேற்று மரணம்!

யாழ்ப்பாணம்,மார்ச்14

கோப்பாய் - மானிப்பாய் வீதியில் கோப்பாய் கிருஷ்ணன் கோயிலுக்கண்மையாக கடந்த புதனன்று இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர் நேற்று மரணமானார்.

மோட்டார் சைக்கிளுக்கும், சையிக்கிளுக்குமிடையில் இடம்பெற்ற இந்த விபத்தில் அவ்விடத்தைச் சேர்ந்தவரும், சைக்கிளில் சென்றவருமான கனகர் நல்லையா (வயது-74) என்ற வயோதிபரே காயடைந்து சிகிச்சை பெற்றுவந்தார். நேற்று அவர் மரணமானார்.

தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக் குட்படுத்தப்பட்டு இரு நாள்களின் பின் நேற்று அங்கு உயிரிழந்தார்.

மரண விசாரணையை மேற்கொண்டபதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு, சடலத்தைப் பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டதுடன், விபத்துக்குள்ளான மோட்டார் சையிக்கிளை ஓட்டிவந்த நபரை நாளை திங்கட்கிழமை யாழ். நீதிமன்றத்தில் ஆஜராக்குமாறு பணித்தார்.

மரணவிசாரணையின்போது இறந்தவரின் மகனும் மருமகளும் சாட்சியமளித்தனர். (ம-15)




# நாடு முழுவதும் மருத்துவர் போராட்டம் மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது.

## நோயாளர்கள் சிரமம்

யாழ்.போதனா வைத்தியசாலை உட்பட நாடுமுழுவதும் உள்ள வைத்திய சாலைகளில் நேற்றும் மூன்றாவது நாளாகத் தொடர்ந்த வைத்தியர்களின் வேலை நிறுத்தம் இன்றும் தொடருமென வைத்திய வட்டாரங்களிலிருந்து அறியவந்துள்ளது.

வேலை நிறுத்தம் காரணமாக நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுகாதார அமைச்சு, நிதி அமைச்சு ஆகியன தற்போது நடைபெறும் காபந்து அரசினால் இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாண முடியாது எனவும வரப்போகும் அரசே இந்த நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும எனத் தெரிவித்ததை அடுத்தே வேலை நிறுத்தம் தொடர்வதாக வைத்திய வட்டாரத்திலிருந்து அறியப்படுகிறது.

வைத்திய விடுதிகள், அவசர சிகிச்சைப் பிரிவுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயங்கியபோதும் வெளி நோயாளர்கள் பிரிவும் கிளினிக் பிரிவுகளும இயங்காத நிலையில் வெறிச்சோடிக் காணப்பட்டன. (ம-15)

# பிரதேசப் பாகு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வேட்பாளரான சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

வடக்கு - கிழக்கு மாகாணம் ஒரு தாயகம் என்பதை ஆதரிப்பவர்களுடன்தான் நாம் பேசுவோம். தமது சொந்த நலனுக்காகப் பிரதேசவாதத்தைத் தூண்டுவது கடந்த காலத்தில முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட மாபெரும் அநீதி. இதனைச் செய்ய முற்படுபவர்கள் மாவீரர்களின் தியாகத்தைக் கொச்சைப்படுத்துகின்றார்கள்.

மக்கள் மத்தியில் எந்தவித பிரதேசவாதமும் கிடையாது. எதிர்காலத்தில் நடைபெறும் எந்தவொரு பேச்சுக்களாக இருந்தாலும் சரி அது வடக்கு - கிழக்கு மாகாணம் இணைந்த வகையில்தான் நடைபெறும் - என்றார்.

கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரான மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில்:-

எமது விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான சில தீய இனவாத சக்திகளும், ஊடகங்களும் கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைப் பயன்படுத்தி 'புலிகள்தான் ஏகப்பிரதிநிதிகள்' என்ற விடயத்தை உடைக்க முற்படுகிறார்கள். இதனை விடுதலைப் புலிகள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள் என நாம் நம்புகின்றோம்.

வடக்கு - கிழக்கு பிரிக்க முடியாத இணைந்த தாயகம் என்பதில் கூட்டமைப்பும் தெளிவான நிலையில் உள்ளது - என்றார்.

வேட்பாளரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியதாவது:-

கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் கிழக்கு மாகாண முன்னாள் தளபதி கருணாவின் சம்மதத்துடன் தான் தயாரிக்கப்பட்டது. கருணா அதனை நிராகரிக்க முடியாது. சில இனவாத ஊடகங்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பொய்யான செய்திகளை வெளியிடுகின்றன.

கிழக்கு மாகாணத் தமிழ் மக்களும், கூட்டமைப்பின் வேட்பாளர்களும் தேசியத் தலைமையின் கீழ் உறுதியுடன் செயற்படத் தயாராக உள்ளனர் - என்றார்.

வேட்பாளார் எஸ்.கஜேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

வடக்கு - கிழக்கை யாரும் பிரிகக முடியாது. இது தொடர்பாக மக்கள் அச்சம்கொள்ளத் தேவையில்லை. கருணா என்ற தனிமனிதனின் செயற்பாடு தேசியத்தைப் பாதிக்காது. எனவே, மக்கள் அனைவரும் நிதானமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் - என்றார்.

நேற்றைய கலந்துரையாடலில் வேட்பாளர்களான சீ.வி.கே.சிவஞானம், என்.ரவிராஜ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-8-86)


# ஈழத்துத் திரையுலகின் புதிய சகாப்தம்

## ஸ்கிறிப் நெற்றின் திரைப்பட விழாவில்

இன்று(14.03.2004) கைலாசபதி கலையரங்கில் மாலை 3.30 மணிக்கு ஈழத்துக் கலைஞர்களின் இயக்கத்தில் ஈழமண்ணில் தயாரிக்கப்பட்ட ஈழமண்ணின் பதிவுகளைச் சித்தரிக்கும் திரை விம்பங்கள் திரையிடப்படுகின்றன.



### போருக்குப் பின்....

இராணுவத்தால் கைதாகிக் காணாமற்போன தந்தையைப் பற்றிய கேள்வியை எழுப்பும் சிறுவனின் உணர்வுகளைப் பேசும் குறும் படம்.

(நேரம் : 15 நிமிடங்கள்)

திரைக்கதை : யமுனாராணி
இயக்கம் : ஜெயரஞ்சினி ஞானதாஸ்
ஒளிப்பதிவு : டயஸ்
படத்தொகுப்பு : த.சிவநேசன்
தயாரிப்பு : தவா, கிருஷ்ணகுமார்
இசை : தர்சன், முரளி
கலை இயக்கம் : ஜெயராஜ்

### தடை

பொருளாதாரத் தடையின் நேரடி விளைவான மருந்துப் பொருள்களின் தட்டுப்பாடு எவ்வாறு ஒரு வறுமைக்கோட்டிலுள்ள குடும்பத்தைப் பாதிக்கிறது? என்பதை உணர்வு ரீதியாக காட்சிப்படுத்துகிறது. வறுமைக் கோட்டிலுள்ள ஒரு குடும்பத்தில் பாம்புக் கடிக்குள்ளாகும் சிறுவன் மருந்தின்மையால் இறந்துபோக திரும்பவும் அடுத்தநாள் வாழ்க்கை தொடங்குவதுதான் கதையின் கரு. இது ஒரு பயணத்தின் துகள் மட்டுமே

(நேரம் : 13 நிமிடங்கள்)

திரைக்கதை, இயக்கம், ஒளிப்பதிவு,
படத்தொகுப்பு : அல்பேட் பவுலஸ்
தயாரிப்பு : தவா
இசை : முரளி
கலை இயக்கம் : மயூரன்

### மூக்குப் பேணி

பண்பாட்டு அடையாளங்கள் விலைபோகாமல் பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய குறும்படம்

(நேரம் : 08 நிமிடங்கள்)

திரைக்கதை, இயக்கம் : ச.ராகவன்
ஒளிப்பதிவு : டயஸ்
படத்தொகுப்பு : த.சிவநேசன்
தயாரிப்பு : ஜெயரஞ்சினி ஞானதாஸ்
இசை : முரளி
கலை இயக்கம் : ஜெயராஜ்

### செருப்பு

மிதிவெடி அபாயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் எடுக்கப்பட்டிருக்கும் படம். புதுச் செருப்புப் பற்றிய கனவுடன் வாழும் சிறுமி செருப்புக் கிடைக்கும் தறுவாயில் மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்துவிடுகிறாள். அவளின் ஏக்கத்துடன் படம் முடிகிறது.

(நேரம் : 15 நிமிடங்கள்)

திரைக்கதை, இயக்கம் : கௌதமன்
ஒளிப்பதிவு : அல்பேட்பவுலஸ்
படத்தொகுப்பு : த.சிவநேசன்
தயாரிப்பு : ராஜ்குமார்
இசை : முரளி
கலை இயக்கம் : கௌதமன்

### அழுத்தம்

போர்ச் சூழலுக்கு இயைபாக்கம் அடைவதிலான நேர் விளைவுகளைப் பற்றிய காட்சிப்படுத்தலைத் தருகின்ற குறும் படம்.

(நேரம் : 15 நிமிடங்கள்)

திரைக்கதை, இயக்கம் : கா.ஞானதாஸ்
ஒளிப்பதிவு : டயஸ்
படத்தொகுப்பு : த.சிவநேசன்
தயாரிப்பு : ஞானசேகரன்
இசை : முரளி
கலை இயக்கம் : ஜெயராஜ்

இவற்றுடன் எம்மண்ணின் பாதிப்புக்களை சித்தரிக்கும் வகையில் தென்னிலங்கைக் கலைஞர்களின் தயாரிப்பில் உருவான மேலும் இரண்டு குறுந் திரைப்படங்களும் திரையிடப்படும்.

Reel Peace Short films Made in Partnership with

programme for creative content UNESCO Hivos BRITISH COUNCIL Commonwealth Media Development Fund

For SCRIPTNET CHARITY REEL PEACE PROJECT

சுவீஸ் பிரஷன்ஸ் வீடியோ
நவாலி கிழக்கு, நவாலி.

மூர்த்தி கலர் லாப்
பிரதான வீதி, மானிப்பாய்.

அபினஜா மல்ரி எலக்ரோனிக்ஸ்
யாழ். வீதி, மானிப்பாய்.

டேவிட் பிரிஸ் மோட்டார் கொம்பனியின் வடபகுதி ஏகவிநியோகஸ்தர்
ஆரணி ஓட்டோஸ் ஸ்பெயார்ஸ்
242,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 3711

டிஜிற்றல் மீடியா நெற்வேக்
ரெம்பிள் றோட், நல்லூர்.

நெல்லியடி - கட்டைவேலி
ப.நோ.கூ.ச., நெல்லியடி.

(29665) (22-12-17)

# குறிப்பிட்ட சமூகத்தை மட்டும் உள்ளடக்கிய தாயகக் கோட்பாட்டினை ஏற்க முடியாது

## தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்14

நாட்டில் குறிப்பிட்ட ஒரு சமூகத்தை மட்டும் உள்ளடக்கிய தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதில்லை என்று சு.கட்சி - ஜே.வி.பி. ஆகியன இணைந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அநதக் கூட்டமைப்பு விடுத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் இப்படிக் கூறப்பட்டுள்ளது.

அந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்து புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான மக்கள் ஆணை.

★ பிரிவினையையும், தாயகக் கோட்பாட்டையும் ஏற்பதில்லை.

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படும். ஏனைய தரப்புக்களுடனும் பேச்சுக்கள் நடத்தப்படும். நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையிலேயே இந்தப்பேச்சுக்கள் இடம் பெறும். பேச்சுக்கள் பகிரங்கமாகவே நடத்தப்படும்.

★ இலங்கையர் அனைவரதும் தாயகம் இலங்கை என்பதை ஏற்றுக் கொள்ளுதல்.

★ ஜனநாயகம், பல்லினத் தன்மை, மனித உரிமைகள், மனிதனின் பாதுகாப்பு மற்றும் கௌரவம் என்பவற்றை அங்கீகரித்தல்.

★ தற்போதைய அரசமைப்பு உத்தரவாதம் அளிப்பது போல் பௌத்த மதததிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் அதேவேளை ஏனைய மதங்களைப் பின்பற்றுபவர்களின் உரிமைகளும் உறுதிப்படுத்தப்படும்.

★ சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகளாக இருக்கும்; ஆங்கிலம் தேசிய மொழியாக இருக்கும். மேற் கூறப்பட்டவற்றின் அடிப்படையிலேயே அரசமைப்பு அமையும்.

★ சிவில், அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார உரிமைகளுகது மேலதிகமாக உரிமைகளுக்கான சட்டவரைபு ஒன்றும் சேர்த்துக் கொள்ளப்படும். இந்த உரிமைகள் மீறப்படும்போது அல்லது மறுக்கப்படும்போது அவற்றிற்கு ஏதுவான சரியான தீர்வுகள் வழங்கப்படவேண்டும்.

★ பெண்கள், குழந்தைகள், வலது குறைந்தோர் மற்றும் சமூகத்தில் அனுகூலம் இல்லாத பிரிவினருக்குமான உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான சட்டங்கள் இயற்றப்படும்.

★ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெளிநாட்டுக் கொள்கைகள் இலங்கையின் இறைமையையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் வகையில் இயற்றப்படும்.

★ நாட்டினதும் மக்களினதும் கௌரவமும் சுயமரியாதையும் பேணப்படும். அனைத்து நாடுகளுடனும் சர்வதேச அமைப்புகளுடனும் உறவுகளை வளர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். (ம-3-து)

# புலிகளின் உட்பூசலை ஊக்குவிக்க முற்படாதீர்

## முன்னாள் அமைச்சர் மிலிந்த தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்14

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள் ஏற்பட்டுள்ள உட்பூசலை ஊக்குவிகக எவரும் முற்படக் கூடாது என முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒரு பகுதியினருக்கு ஆதரவாகச் செயற்பட்டால் அது மற்றைய தரப்பினரை ஆவேசத்திற்கு உள்ளாக்கி பல சிக்கல்களை ஏற்படுத்துவதற்கு அடிப்படையாக அமையும் என்றும் -

விடுலைப் புலிகள் இயக்கத்திற்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினையில் தலையிடுவது உகந்த விடயமல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-6)

# பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவது பௌத்தத்தை அழிவுக்கு இட்டுச்செல்லும்

## மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகள் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்14

பிக்குகள் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது பௌத்தத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும் என மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று சனிகிழமை நடைபெற்ற பிக்குமார் சம்மேளனத்தின் மாநாட்டிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக மூன்று பௌத்த பீடங்களையும் சேர்ந்த பிக்குமார் சுதந்திர சதுக்கத்தில் இருந்து பண்டாரநாயக்க சாவதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

பௌத்த பிக்குகளின் சதித் திட்டத்தை தோற்கடிப்போம் எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றம் செல்வது அவர்களின் கடமை அல்ல என்றும் -

அவர்கள் கிராமங்கள் தோறும் சென்று மக்களுக்கு நிலைமையைத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுத்தால் நாட்டில் ஏற்படும் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியும் என்றும் மகாநாயக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

மாநாட்டில் மல்வத்த, அஸ்கிரிய பட மகாநாயக்கர்களதும் இராமானிய பட மகாநாயக்கர்களின் கூட்டறிக்கையும் வாசிக்கப்பட்டன. (ம-6)

### ஆங்கிலக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்14

"சாம்ஸ்ரெக்" நடத்திவரும் இலவச ஆங்கில வகுப்புக் கருத்தரங்கு இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் ஏனையோருக்காக நடத்தப்பட்டு வரும் இக்கரு்த்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் 11.30 மணிவரையும்- பிற்பகல் 3 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நாளை திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 4.30 மணிவரையும் யாழ். மத்திய கல்லூரியிலும் நடத்தப்படவுள்ளது.

குடாநாட்டில் உள்ள பல பாடசாலைகளிலும் இக்கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. ஆங்கில அறிவினை மக்களிடையில் மேம்படுத்தும் வகையில் நடத்தப்படும் இக்கருத்தரங்கில் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம். கருத்தரங்கில் கலந்துகொண்டதற்கான சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.(ம-6)

### ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,மார்ச்14

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் என்றும் -

இது தொடர்பான விவரங்களைக் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பெறலாம் என்றும் - கலாசாலையின் அதிபர் தெரிவித்தார். (ம-3)

## வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவில்

# இரு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஒரு விவசாய சம்மேளனம் அமைப்பு

வலி.மேற்கு,மார்ச்14

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஒரு விவசாய சம்மேளனம் அமைக்கப்படுகின்றது. இதற்கான நடவடிக்கைகளை தொல்புரம் கமநல சேவைகள் நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் சு.சோதிநாதன் மேற்கொண்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு, வடக்கு, தெற்கு மேற்கு, தென்மேற்கு சங்கரத்தை ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஒரு விவசாய சம்மேளனமே முன்னர் இயங்கிவந்தது.

விவசாயிகளின் கோரிக்கையை அடுத்து வட்டு. கிழக்கு - வடக்கு ஆகிய இரண்டு கிராம அலுவலர் பிரிவுக்கு ஒரு விவசாய சம்மேளனமும் -

வட்டு. தெற்கு - மேற்கு ஆகிய இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளுககும் ஒரு விவசாய சம்மேளனமும், வட்டு. மேற்கு - சங்கரத்தை ஆகிய இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஒரு விவசாய சம்மேளனமும மிக விரைவில் ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது. (ம-175)

### இளைஞர் காயம்!

வலி.வடக்கு,மார்ச்14

சுன்னாகம் பஸ் நிலையத்தின் அருகில் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுமாலை 7 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில் சுன்னாகம் றொட்டியாலடி என்னும் இடத்தைச் சேர்ந்த க.காந்தரூபன் (வயது -25) என்பவரே படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை அரசினர் வைத்தி சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-ரி-86)

**தேவை**

தொலைபேசி இயக்குநர்கள் தேவை.
ஆர்வம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்

பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்
பஸ் நிலையம்.
பருத்தித்துறை. (29649)

### தேர்தல் கூட்டங்கள்

வலி.வடக்கு,மார்ச்14

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும வேட்பாளர்களுக்கான பிரசாரக் கூட்டம் நாளை திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு திருநெல்வேலி பாற்பண்ணையடியில் இடம்பெறவுள்ளது. (ம-86)

★ ★ ★

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு அரியாலை காந்தி சனசமூக நிலையத்திலும் இடம் பெறவுள்ளது. (ம-86)

### கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் வாக்களிப்பதற்கான வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு விடுதலைப் புலிகள் தமது சோதனைச் சாவடிகளை பின்நகர்த்தவும் தயாராக உள்ளனர். இந்நிலையில், வாக்களிப்பு நிலையங்களை எங்கு அமைப்பது என்பது தொடர்பாக நாம் தேர்தல் ஆணையாளருடன் பேசவுள்ளோம் - என்று யாழ்.மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (ம-8-86)

### பொலீஸாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இருவரில் ஒருவர் தலையில் பலத்த காயத்துக்குள்ளானதால் அவர் பொலநறுவ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று மட்டும் மூன்று தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றன எனப் பொலீஸார் கூறினர். (ம-3-6)

# தமிழக அகதி முகாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண்களில் இரு பெண்கள் பிரஸ்தாப கோஷ்டியால் மீண்டும் பிடிக்கப்பட்டனர். ஏனைய 2 பெண்கள் மட்டும் அரசியல்துறையினரிடம் தஞ்சம் அடைந்தனர். பிரஸ்தாபப் பெண்களைப் பிடிக்க முயன்ற நபர் ஒருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். பின்னர் அவர் அரசியல் துறையினர் மூலம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கையளிக்கப்பட்டார்.

பிரஸ்தாபப் பெண்கள் அரசியல் துறையினரால் பராமரிக்கப்படுகின்றனர் என்றும் ஏனைய பெண்களை மட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

ஏற்கனவே இவ்வாறு வத்தளைப் பகுதியில் இருந்து தப்பித்து மன்னார் ஆயரிடம் சென்ற பெண்களில் சிலர் உறவினர்களுடன் சேர்க்கப் பட்டிருப்பதாகவும் ஏனையவர்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. உண்மையில் தமிழ்ப் பெண்களை ஏன் இவ்வாறு அழைத்துவந்து சித்திரவதை செய்தனர் என்பது கேள்விக் குறியாக உள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தமிழர்கள் என்று பாதிக்கப் பட்ட பெண்கள் தெரிவிக்கின்றனர். (ம-3-164)

CATWAS COM Computer Acadamy, No.26, Somasundaram Avenue,

**Courses**

Diploma in Desk Top Publishing
Diploma in Graphics Desining
Diploma in Hardware Engineering
Diploma in Wep page Designing
Diploma in Video Mixing
Microsoft Office XP
Microsoft Visual Basic 6.0
Children Program

**Certificate Courses**

Adobe Pag Maker 7.0
Adobe Photo Shope 7.0
Adobe Premier 6.5
Corel Draw 11.0
HTML
FLASH

25.03.2004 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

இல. 48இல் கோவில் வீதியில் இயங்கி வந்த நிறுவனமானது 15.03.2004 இல் இருந்து கீழ் உள்ள முகவரியில் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்.

இலவசம்...
★கணனி பயிற்சி தொடர்பான ஆங்கில வகுப்புக்கள்
★பாடநெறி முடிவில் ஒரு மாதகால தொழில் பயிற்சி வழங்கப்படும்

CATWAS.COM

Computer Academy
No.26, Somasundaram Avanue
Chundukuli,
Jaffna.
T.P.: 021 - 2223805.

(29655X)(37-12-17-30)

E-MAIL: Catwas.com@iamplanka-lk

Chundukuli, Jaffna CATWAS.COM

Computer Acadamy, No.26, Somasundaram Avenue, Chundukuli, Jaffna.




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்



# ஜப்பானின் அமெரிக்க விசுவாசம்

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில். 1980 - 1990 வரையான காலப்பகுதியில் டில்லி மிகச் சுறுசுறுப்பாக இயங்கியது. இந்திய பாதுகாப்புத்துறை. இந்திய வெளியுறவுத்துறை. இந்திய ஊடகத்துறை (அரச. தனியார் ஊடகத்துறைகள்) மிக அதீதமாகச் செயற்பட்ட காலம் அது. தென்னாசியாவின் பிராந்திய வல்லரசு என்ற வகையில் அது செயற்பட்டது. விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் (இவர் போர்க்கள. அரசியல்தள அனுபவமிக்க புலிகளின் சிரேஷ்ட போராளி) அவர்கள் கூறியதுபோல. ஒரு பெரியண்ணன் (Big Brother) என்ற வகையில் தனது பிராந்திய அரசியல். பாதுகாப்பு. பொருளாதார நலன்களின் பேணுகைக்காக மூல உபாயங்களை வகுத்துச் செயற்பட்ட ஒரு தீவிரகாலம் அது. ஈழத்தமிழர் - இந்திய ஆளும்வர்க்க உறவு. உறிஞ்சிச் சிதைக்கும் 'குருவிச்சைத்தனமான' இராஜதந்திரமாகவோ. மூடிப்பரவி 'அலுப்புத் தரும்' 'பாதீனியத்தனமாகவோ' அமையாமல் 'ஒன்றுக்கொன்று துணையாகும் தன்மையாக' அமைய வேண்டும் என்பதில் இந்திய இராஜதந்திரம் தனது நிலைப்பாடுகளை மாற்றவேண்டிய தேவைபற்றியும் விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

**- டன்ஸ்ரன் ஓாயிஸ் -**

அந்த வகையில். அன்று தீவிர தலையீடு - நேரடித் தலையீடு (இலங்கை - இந்திய ஒப்பந்தம் உட்பட) காட்டிய இந்தியாவின் நிலை இன்று ஒரு உறங்குநிலை சகாப்தமாக. இலங்கைப் போர் - இலங்கையின் சமாதானம் தொடர்பாக இருந்து வரு கிறது. இக்காலகட்டத்தில் இலங்கை இனப் பிரச்சினையில் கூடுதல் அக்கறை காட்டிவருகின்ற ஆசிய நாடாக ஜப்பான் உள்ளது. இந்த அக்கறை அரசியல். பொருளாதாரம். அதனூடாக சமாதானம் என்றவகையில் அமைந்திருந்தாலும். எம்மீது அக்கறைப்படும் ஜப்பானின் பாதுகாப்புத்துறையின் மூலஉபாயநிலை எந்தப்போக்குக் கொண்டதாக இருந்தது என இக்கட்டுரை மேலோட்டமாகத் தொட்டுச் செல்லுகின்றது.

## நப்பாசையும் ஆதிக்க விஸ்தரிப்பும்

ஜப்பானின் வரலாற்றையெடுத்துக் கொண்டால் கடும் நப்பாசையும் ஆதிக்க விஸ்தரிப்பு அபிலாசைகளும் கொண்டிருந்த நாடாக யாரும் இனங்காணுவர். ஆனால். இரண்டாம் உலகப்போரின் முடிவில் அமெரிக்கா பிரயோகித்த முதல் பரீட்சிப்பான அணுகுண்டு வீச்சுக்கள். ஹிரோசிமா. நாகசாகி ஆகிய ஜப்பானிய நகரங்களைச் சாம்பலாக்கி லட்சக்கணக்கான அப்பாவி ஜப்பானியர்களைக் 'கரிக்கட்டைகளாக' எஞ்சவிட்டதுடன். ஜப்பானின் 'அடங்காப் பிடாரித்தனம்' முடிவுக்கு வந்தது. மிகக்கொடூரமான அடியாக. உலகமானிடமே உணர்ந்து கொண்ட அமெரிக்காவின் அத்தாக்குதலையடுத்து ஜப்பான் அமெரிக்காவிடம் விசுவாசமாகவே சரணாகதியடைந்தது.

## தொடரும் சில்லெடுப்பு

ஒரு விஸ்தரிப்பு வாதத்தை மறுவிஸ்தரிப்புவாதம் விழுங்கிய வரலாறாக தொடங்கிய அக்கதை நீண்டு செல்லும் ஒரு சில்லெடுப்பாகத் தொடர்வதும் எதிரித்தனம் எது? நட்புறவு என்றால் என்ன? என்பவையெல்லாம் வல்லான் வகுத்த வாய்க்கால்களாக உள்ளமையும் பூகோள இயற்கையின் உயிரியல் நியதியாகவும் அரசியல் நியதியாகவும் - பாவ. புண்ணியங்களுக்கும் ஈவு இரக்கங்களுக்கும் அப்பாற்பட்ட இராஜதந்திர உபாய உருவாக்கங்களாகவும் இருந்து வருகின்றமை 'கடலைக்கொட்டை விற்பவனுக்கே' விளங்கும் விடயங்கள்தான் சேர்பியா. ஆப்கான். ஈராக்..... என சில்லெடுப்பு நீள்கிறது.

## அணுகுண்டு அடித்தவனை அணைத்தது ஜப்பான்

அமெரிக்கா இரண்டாம் உலகப்போரை முடிவுக்கு கொண்டுவந்த விதம். ஜப்பானை அதிர்ச்சிக்குள்ளாக்கி. விரட்டி மிரட்டி பணியவைக்கும் வகையில். அமைந் ததுடன். உலகின் 48நாடுகளுடன் ஜப்பான் சமாதான உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட வழிவகுத்தது. 1951ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி சான்பிரான்ஸிஸ்கோ நகரில். ஜப்பான் சமாதான உடன்படிக்கை (Treaty of Peace) கைச்சாத்திடப்பட்டது.அதே ஆண்டு ஒக்ரோபர் 26ஆம் திகதி. டயற் (Diet) என்று அழைக்கப்படும் ஜப்பானிய ஆளும் பிரதிநிதிகள் மன்றமான நாடாளுமன்றம் 307வாக்குகளால் (எதிராக விழுந்தவாக்குகள் -47. வாக்களிப்புக்குச் சமுகமளிக்காத பிரதிநிதிகள்-112) சமாதான உடன்பாட்டை அங்கீகரித்தது. அதே நாள் (1951.10.26) அமெரிக்கத் துருப்புக்கள் ஜப்பானில் நிலைகொள்வதற்கான. மற்றுமொரு உடன்படிக்கையை ஜப்பானிய அரசாங்கம் அமெரிக்காவுடன் செய்து கொள்வதற்கான. ஒப்பந்தவாசகம் மீதான வாக்களிப்பு நாடாளுமன்றில் நடைபெற்றது. வாக்களிப்பில் 106 பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை. 71 பிரதிநிதிகள் எதிர்த்து வாக்களித்தனர். 289பிரதிநிதிகள் ஆதரித்து வாக்களித்ததனால் அமெரிக்க - ஜப்பானிய பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன். அது இன்றுவரை அமெரிக்கப்படை பட்டாளங்கள். ஜப்பானின் பாதுகாப்புக் கருதி ஜப்பானில் நிலை கொள்ள ஏதுவாகியது. ஜப்பான் தனது சொந்தப் படைகளின் பாதுகாப்பை வளர்த்து. நிறுவி உறுதிப்படுத்திக்கொள்ளும் வரையில் அதாவது ஜப்பான் விரும்பும் வரையில் அமெரிக்கப் படைகள் ஜப்பானில் நிலைக்கும் என்றே அப்பாதுகாப்பு ஒப்பந்தம் கூறுகிறது. இந்த ஒப்பந்தம் 1952ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி அமுலுக்கு வந்தவேளைதான்.இரண்டாம் உலகப் போரில் யாரிடம் ஜப்பான் தனது பாதுகாப்பையும் இறைமையையும் இழந்ததோ அவர்களின் மூலமாகவே அது தனது பாதுகாப்பையும் இறைமையையும் மீட்டு அனுபவிக்கத் தொடங்கியது. தன்னிலும் வல்லரசான அமெரிக்காவின் 'ஆக்கிரமிப்புத் தத்துவத்தை' தனக்குப் பிரயோகிக்கப்பட்ட 'அடித்து அடக்கும் தத்துவத்தை' மிகமிக நுணுக்கமான இராஜதந்திரத்துடன் பயன்படுத்தி. தனது அபிவிருத்திப் பாதையில் மிக வீறுநடை போட்டு வெற்றிபெற்ற முதலாவது உலகநாடு ஜப்பானாகத்தான் இருக்கமுடியும். இன்று அபிவிருத்தி. தொழில்நுட்பம். (சிவில் தொழில்நுட்பம் மட்டுமல்ல இராணுவவியல் தொழில்நுட்பமும்) பண்பாடு ஆகியவற்றில் முன்னேறி ஒரு உலக வல்லரசாகும் கனவோடு ஜப்பான் தீர்மானிங்களையெடுத்துவிட்டது என்றே சொல்லலாம். வாங்கிய அடியை நினைத்து நினைத்து ஜப்பான் வளர்ந்து விட்டது. அடித்தவனை நட்பாக்கி வளர்ந்த ஜப்பானை இன்றைய உலகப் பொருளாதார ஒழுங்கில் - தாளாண்மைவாத - திறந்த சந்தை யமைப்பில் அணைத்து ஒரு இறுக்கமான கூட்டாளித் தனத்தை அமெரிக்கா காப்பாற்றி வருகிறது.

## 'மனம்வைத்து' காத்தது அமெரிக்கா

1952 ஏப்ரலில் அமுலுக்கு வந்த அமெரிக்கா - ஜப்பான் பாதுகாப்பு உடன்படிக்கை (The Japan - USA Security Treaty). ஆயுதப்படைகளையும். இராணுவத் தளங்களையும் ஜப்பானில் பேணுவதற்கு உரித்தளித்தது. இதனையடுத்து. அமெரிக்காவிடமிருந்து பாதுகாப்பு. இராணுவத் தளபாட உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் பாதுகாப்பு. இராணுவ நடவடிக்கைகளில் என்றும் அமெரிக்காவுக்கு ஜப்பான் உதவியும் ஒத்துழைப்பும் நல்குவதற்காகவுமென பரஸ்பர பாதுகாப்பு உதவு இணக்கப்பாடு (The Japan - USA Mutual defence assistance pact of sept.1954) ஏற்படுத்தப்பட்டது. அதன்கீழ் ஜப்பானியப் படைகளுக்கான பயிற்சிகள் மற்றும் முழுமையான இராணுவத் தளபாடங்களையும் அமெரிக்கா வழங் கியது; வழங்குகின்றது; வழங்கும். மேலும் 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி அமெரிக்காவுக்கும். ஜப்பானுக்குமிடையில் மேலுமொரு மிகமுக்கிய உடன்படிக்கை கைச்சாத்தானது. பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்புக்கான உடன்படிக்கை (The Treaty of Mutual Co-operation and Security) என்பதே அதுவாகும். இந்த உடன்படிக்கை வாசகங்கள். இருநாடுகளுக்குமிடையில் ஒன்று சார்ந்து மற்றயது முடிவுகள் எடுக்கும் விடயத்தில் சமநிலையான. சமத்துவமான வாய்ப்புக்களை ஏற்படுத்தியது.

## ஜப்பானின் சுயபாதுகாப்புக்கான தரைப்படை

1950 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அமெரிக்க இராணுவ ஜெனரல் மக்ஆர்தூர் (Gen.Macarthur). ஜப்பானுக்காக எழுபத்தையாயிரம் பேர் கொண்ட தேசிய றிசேர்வ் பொலீஸ் படையை (National Police Reserve) அமைத்தார். பின்னர் அது பெயர் மாற்றப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டது. தரைக்கான சுயபாதுகாப்புப் படை (Ground Self-Defence Force) என்று பெயரிடப்பட்ட அந்தப் படையில் 1961 ஒக்ரோபர் மாதத்தில் நன்கு பயிற்றப்பட்ட ஒரு லட்சத்து எழுபத்தோராயிரத்து ஐந்நூறு (171.500) சீருடையணிந்த வீரர்களும். பதின்மூவாயிரத்து நாலூற்றி ஐந்து (13.405) சிவிலியன்களும் மேலும் பதில் ஆளணியாக பதினேழாயிரம் பேரும் இருந்தனர். ஜப்பானியப்படைகள் ஐந்துபெரும் அணிகளில் ஆறு பிரிவுகளாக நான்கு ஒருங்கிணைந்த பிரிகேட்டுக்களாக உதவு அணிகளாக. இராணுவப் பொலீஸ் படையாக இராணுவ மருத்துவப் பிரிவாக இராணுவ பயிற்சிக் கல்லூரிகளாக அன்று ஜப்பானியத் தரைப்படை அணிகள் பாரிய கனரக ஆயுத தளபாடங்களையும் திறமையாக பொறியியற்பிரிவுகளையும் கொண்டியங்கும் வகையில் அமெரிக்கா 'மனம் வைத்து'ப் பங்களித்தது.

## சுய கடற்காப்புப்படை

அன்று ஜப்பானின் கடற்படையணிக்கு (Maritime Self - Defence Force). பதினான்கு புதிய நாசகாரிக் கப்பல்களையும் ஐந்து புதிய நீர்மூழ்கிக் கப்பல்களையும் ஜப்பானே தனது உயரிய தொழில்நுட்பம் மூலம் கட்டியமைத்தது.

## உறங்கும் பூதம் சீனாவும் மிரட்டும் வடகொரியாவும்

அதைவிட நான்கு நாசகாரிக் கப்பல்களையும் ஒரு நீர்மூழ்கிக் கப்பலையும் இரு நாசகாரிக் கப்பல் களுக்கான பாதுகாப்புக் கப்பல்கள் உட்பட பல நவீனரக கடற்படை ஆயுத தளபாடங்களையும் சாதனங்களையும் அமெரிக்கா வழங்கியிருந்தது. 1962 ஆம் ஆண்டு ஜப்பானியக் கடற்படையில் மொத்தமாக அதிகாரிகளும் சிப்பந்திகள். சிப்பாய்களுமாக முப்பத்தேழாயிரம் பேர் (37.000) இருந்தனர். ஜப்பானியக் கடற்படையிடம் குறிப்பிடத்தக்களவு பாரிய கடற்படைக்கப்பல்கள். உபகரணங்கள் என்பன அமெரிக்காவால் வழங்கப்பட்டு. கடற்படைக்கான போதிய பயிற்சிகள் வழங்கப்பட்டு. அது பன்மடங்கு இன்று பலப்பட்டதாக உள்ளது. ஜப்பான் தனது கடற்பிராந்தியத்தில் பெரிதும் தங்கியுள்ளநாடு. கடலின் இறைமையைப் பாதுகாத்தலே ஜப்பானின் தேசியப் பாதுகாப்பின் உயிர் எனலாம். அயல்நாடுகளான உறங்கும் பூதம் என வர்ணிக்கப்படும் சீனா. அணுவாயுத வல்லமையை எட்டியுள்ள(? ) வடகொரியா என்பன ஜப்பானின் பாதுகாப்பு அக்கறையில் தாக்கம் ஏற்படுத்தவல்ல பிரதான காரணிகளாகும். அமெரிக்காவின் 'ஆழ்ந்து அகன்ற நுண்ணிய' திட்டமிடலுடன் தனது இராணுவப் பாதுகாப்புத்துறையை வளர்த்த - வளர்த்துக் கொண்டிருக்கும் - வளர்க்கும் ஜப்பான் அமெரிக்காவுக்கான அச்சுறுத்தல்கள் எதையும் தனக்கான அச்சுறுத்தல்களாகவே அன்று தொடக்கம் இன்றுவரை பார்க்கிறது.

(IV ஆம் பக்கம் பார்க்க)

# காஷ்மீரின் கண்ணீர்

போர்ப் பிசாசு காஷ்மீர் மக்களை எலும்புவரை தின்று விட்டிருக்கின்றது. 1949இல் ஐ.நா. மத்தியஸ்தர்கள் காஷ்மீரை எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் மூலம் இரண்டாகப் பிரித்தார்கள் அந்த எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு உரூசா (Uroosa) என்ற ஒரு கிராமத்தையும் இரண்டாக அறுத்தது. காஷ்மீர் யுத்தத்தினால் பயங்கரமாக மாறிய அழகிய கிராமங்களுள் உரூசாவும் ஒன்றாகும் நீர்க்கதிக்குள்ளான ஆயிரக்கணக்கான காஷ்மீர் மக்களில் மொகமட் சர்வஷ்கான் என்பவர், கடந்த. ஆண்டு நவம்பரில் இந்தியாவும் பாகிஸ்தானும் இணங்கிக் கொண்ட போர்நிறுத்தத்தினால் மகிழ்சியாகக் காணப்பட்டார். அன்று 1949இல் சிறுவனாக இருந்தபோது அவரது கிராமம் பாகிஸ்தானுக்கு பாதியும் இந்தியாவுக்கு பாதியும் என அறுக்கப்பட்டது. எல்லைக் கோட்டின் வழி உடனேயே இரு நாட்டுத் துருப்புக்களும் பல்லாயிரக்கணக்கில் நிலைகொண்டன. சர்வஷ்கான், இந்தியப்பகுதிக்குள் தனிக்கவிடப்பட்டார். அன்றிலிருந்து ஆக ஒரேயொரு கிலோ மீற்றர் தூரத்தில் வாழ்ந்த தனது இரத்த உறவுகள் – அண்ணன், தம்பி, மாமன், மச்சான், அக்காள், தங்கை, மச்சான், மச்சாள்மார்... – அனைவரையும் ஒரே கணத்தில் எல்லைக் கோட்டினால் பறிகொடுத்த சர்வஷ்கான் இன்னமும் வாழ்கிறார். முகம் மறந்த உறவுகளின் முகம் தெரியாத உறவாக, போர்ப்புயலுக்குள் சிக்கித் துவண்ட 'கிழமாக' எஞ்சியிருக்கிறார். 1989இல் காஷ்மீரில் இந்திய அரசாங்கப் படைகளுக்கு எதிராக, பிரிவினை கோரி ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் போரின் பீரங்கி முழக்கங்கள், துப்பாக்கி வெடியோசைகள் இராணுவ சுற்றிவளைப்புக்கள், கைதுகள், சித்திரவதைகள் என்று எல்லாவற்றையும் தாங்கி, தாண்டிய நிலையில் அவர் கூறுகின்றார் "நான் நினைக்கிறேன் நாங்கள் அதிர்ஷ்டசாலிகளாக இருக்கிறோம்" கடந்த 14 ஆண்டுகளுக்கும் மேலாக மலைப்பள்ளமொன்றை குடைந்து உருவான சுரங்கப்பாதையூடாக அமைக்கப்பட்ட மலையின் கீழான சிறுகுகை வீடொன்றுள் போர்வெடியோசைகளைத் தாங்கி நின்று பிடித்த சர்வஷ்கான் "எங்கள் பயிர்கள் அழிந்தன, எங்கள் ஆடுகளும் மந்தைகளும் பட்டினிகிடந்தன. இந்த மலைக்குகை வீட்டைவிட்டு பயத்தினால் நாங்கள் வெளியே செல்வதில்லை. அதனால் எவரும் சாகவில்லை. அடுத்த கிராமத்தில் ஒரு சிறுமி கொல்லப்பட்டாள், ஐந்து வீடுகள் அழிந்தன. இந்தியப் படைகள் மேற்கொள்ளும் துப்பாக்கி வெடிப்புகளும் பீரங்கி வெடியோசைகளும் உறைந்து போய்க்கிடக்கும் காஷ்மீர் பள்ளத்தாக்கை கிழித்துக் கொண்டு மொகமட் சர்வஷ்கானின் தலையை 'உரஞ்சிய'படி செல்லும்போது, ஒரு கிலோ மீற்றர் தொலைவில் வசித்துவரும் தனது இரத்த உறவுகள் பற்றி அவர் ஏங்கித் தவிப்பார். காலப்போக்கில் தன்னைப்போல் அவர்களும் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு மலைக் குகைகளை குடைந்து வைத்திருப்பார்கள் என்று நம்புவதன் மூலம் மனதை வைரப்படுத்திக் கொள்வார். தான் எட்டு வயதாக இருந்தபோது உரூசா (Uroosa) கிராமத்தை பிரித்த எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு (Line of control) சர்வஷ்கானை 'போர்ச் சன்னதப் பயங்கரத்துள் வாழ்ந்தாகவேண்டிய தனியனாக' அலைக்கழித்தது. கடந்த நவம்பரில் ஏற்றுக் கொள்ளப்பட்ட போர்நிறுத்தத்தையடுத்து பிரிந்த இரத்த உறவுகளுடன் சேரும் கனவோடு சர்வஷ்கான் காத்திருந்தார்.

ஆனால், அவரது இரத்த உறவுகள் பாகிஸ்தான் கட்டுப்பாட்டு காஷ்மீர் பகுதிக்குள் – அதாவது உரூசா கிராமத்தின் பாகிஸ்தான் பகுதிக்குள் – சாவுகளையும் இழப்புக்களையும் சந்தித்து துயரத் தீயில் வெந்து போயுள்ளனர். சர்வஷ்கான், தனது உறவுகளை இனங்காண செய்தியாளர்கள் உதவினர். ருவல்பின்டி என்ற இடத்தில் உள்ள தங்கள் புதிய வீட்டில் அவரது உறவுகள் வாழ்ந்தன. சர்வஷ்கானின் சகோதரனின் மகன் மொகமட் ஜவ்வர் கான் "போரினால் நாம் சிதறி ஓடி ஓடி வாழ்ந்த ஒரு கட்டத்தில் இதயவலியால் அப்பா செத்துப்போனார்" என்று கூறினான். கடந்த ஆண்டு இந்திய பீரங்கிகளும் எறிகணைகளும் தமது அயலெல்லாம் வீழ்ந்து வீடு வாசல்கள் உடைந்து நொறுங்கியதுடன் தனது இன்னொரு ஒன்றுவிட்ட சகோதரனும் கொல்லப்பட்டதை விவரித்தான் 'ஐ.நாவின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகில் அப்பாவைப் புதைத்தோம். அவரது நாட்டில் இருந்து வரும் தென்றல் அவரது கல்லறையாயினும் தழுவிச் செல்கின்றது. சாவில் தானும் அப்பா சமாதானத்தை அனுபவிப்பார் என்று நம்புகின்றேன" என்றார் சர்வஷ்கானின் பெறாமகன் மொகமட் ஜவ்வர்...

**- புவியரங்கன்**

காஷ்மீர் பள்ளத்தாக்கில் இதைப் போல ஆயிரமாயிரம் கண்ணீர்க் கதைகள் உள்ளன. உறவுகளை இழந்த அநாதைகள், விதவைகள் ஆகியோர் உடைமைகள், வீடுவாசல்களை இழந்து அகதிகளானோர், சுற்றிவளைப்புக்கள், கைதுகள், பாலியல்வல்லுறவுகள், சித்திரைவதைகள், காணாமற்போதல் எனத் தொடர்ந்த மனித உரிமை மீறல்கள்...

காஷ்மீர்,காஷ்மீரிகளுக்கே உரியது என்ற காஷ்மீர் மக்களின் உரிமை வேட்கை பேச்சுக்களில் எவ்வளவு தூரம் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் என்ற பலமான சந்தேகம் நிலவுகின்றது.

## தோல்வி மேல் தோல்வியடைந்த பேச்சுக்கள்

இந்திய – பாகிஸ்தான் பேச்சுக்களின் கடந்தகால வரலாற்றைப் பார்த்தால், எல்லாம் தோல்வியடைந்த இராஜதந்திர முயற்சிகளாகவே உள்ளன. எப்பொழுதெல்லாம் காஷ்மீர் பிரச்சினை பேச்சுக்கெடுக்கப்படுகின்றதோ அப்போதெல்லாம் பேச்சுக்கள் தோல்வியுறுவதே கடந்தகால அனுபவம். காஷ்மீர் ஒரு சுயநிர்ணயமிக்க தனிநாடாக வேண்டும் என்று வாதாடும் தீவிரவாதிகள் ஒரு புறம், காஷ்மீர் பாகிஸ்தானுக்கே சொந்தம் என்று வாதாடும் பாகிஸ்தானிய தீவிரவாதிகள் இன்னொரு புறமும் காஷ்மீர் இந்தியாவுக்கு உரித்தான பகுதி என வலியுறுத்தும் இந்திய அமைப்புக்களின் தீவிர கரிசனை மறுபுறமாக வெவ்வேறு ஆர்வங்களும் இலக்குகளும் கொண்ட தீவிரவாத அமைப்புக்கள், குழுக்கள் என்று காஷ்மீரின் நிலைமை சிக்கெடுக்க முடியாத சிக்கலாக உள்ளது.

அண்மையில் ஜம்மு–காஷ்மீரில் நடந்த மாநில சட்டசபைத் தேர்தலில், இந்து தேசிய வாதக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சிக்கு கிடைத்த வெற்றிகளை அடுத்து, ஜம்மு –காஷ்மீரில் அரசியலில் உணர்ச்சி பொங்குகிறது. போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை முயற்சிகளை, ஒரு தேவையற்ற விட்டுக்கொடுப்பு என்று வாஜ்பாய்மீது குற்றம் சுமத்தும் அவரது கட்சிக்காரர்களே காஷ்மீரில் உள்ளனர். பாகிஸ்தானிலும் முஷாரவ் ஆதரவாளர்களான மேட்டுக்குடி மிதவாதிகள், இந்திய பாகிஸ்தானிய சமாதான முன்னெடுப்புக்களை ஆதரித்தாலும் ஆனால், பாகிஸ்தானிய இராணுவத்துக்குள் உள்ள இடைநிலை, கனிஷ்ட நிலை இராணுவ அதிகாரிகளும், இஸ்லாமியத் தீவிரவாதிகளும் இந்தியாவுடன் காஷ்மீரின் உரித்துப் பற்றி பாகிஸ்தான் பேச்சு நடத்துவதை எதிர்க்கின்றனர். "நீங்கள் ஒரு விடயத்தை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். அதாவது கடந்த இரண்டு அல்லது மூன்று பாகிஸ்தானிய சந்ததியினருக்கு காஷ்மீர் பாகிஸ்தானுக்குச் சொந்தமான நிலம் என்று கற்பிக்கப்படுகிறது" என்று கவலை தெரிவித்தார் இஸ்லாமியத்தில் பணியாற்றும் மேற்கு நாட்டு இராஜதந்திரி "கஷ்டங்களைத் தாண்டுவது இயலாதகாரியமாக இருக்குமோ...." என சந்தேகம் தெரிவித்தார். எனினும் 'இஸ்லாமியப் பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் போருக்கு விரும்பியோ விரும்பாமலோ பாகிஸ்தான் உறுதுணை நிற்கவேண்டிய கட்டாயத்தை அமெரிக்கா அதற்கு ஏற்படுத்தியுள்ளமை இந்தியாவுக்குச் சாதகமாக அமையலாம். ஆனால், காஷ்மீர் விவகாரத்துக்கு ஒரு நிரந்தரத்தீர்வு ஏற்பட்டுவிட்டால் இலங்கை போன்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தீவிரமாகத் தலையிட்டு இந்தியா பிராந்திய ஆதிக்கத்தை விஸ்தரிக்க ஏதுவாகலாம்.

✪

# இப்படியும் ஒரு பிறந்தநாள் பரிசு

"பிறந்தநாள் இன்று பிறந்தநாள நாம் பிள்ளைகள போலே தொல்லைகள் எல்லாம் மறந்தநாள்", "ஹப்பி பேர்த்டே ரு யு" (HAPPY BIRTHDAY TO YOU). இதை எங்கேயோ கேட்டது போல் இருக்கிறதெல்லவா? அதுதான்! நீங்கள் நினைப்பது சரி!! இலங்கை வானொலியில் பிறந்த நாள் கொண்டாடப்படும் சிறுவர்களுக்கு வாழ்த்துச்சொல்லுவதற்கு அரை மணித்தியாலம் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சிக்கு அறிமுக முன் இசையாக இந்தப் பாடலை ஒலிபரப்புவது வழக்கம்.

என்ன யோசனை? உங்களது பிறந்த நாளை எதிர்பார்த்து நாள்களை எண்ணுவது புரிகிறது. ஒவ்வொரு வயதுக்கும் வெகுவிமரிசையாகப் பிறந்தநாளை சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை கொண்டாடி வருகிறார்கள். முதலாவது, 2 ஆவது, 3ஆவது பிறந்ததினத்தை சிறு பிராயத்திலும், 21ஆவது பிறந்ததினத்தை இளைய பருவத்திலும் உற்றார், உறவினர்கள், நண்பர்களைக் கூட்டிப் பெற்றோர், உடன்பிறப்புக்களுடன் சேர்ந்து அந்த நாளை இன்சுவை விருந்துடன் இனிமையாகக் கழிக்கிறார்கள். இதைவிட வீடியோ படம்பிடிப்பு, பத்திரிகை, வானொலி விளம்பரங்கள், வேறு பெரும்பாலும் இது சிறுவர்களுக்கும், யுவதிகளுக்குமே பொருந்தும்.

ஆனால், இளைஞர்களது பிறந்தநாள் கொண்டாட்டம் வேறுவிதமாக அமைந்து விடுகிறது. அவர்கள் தமது இல்லத்தில் அதைக் கொண்டாடுவதில்லை. உணவு, மதுபானங்கள் பெறக்கூடிய விடுதிகளிலும், மதுபானக் கடைகளிலுமே, நண்பர்களுடன் சேர்ந்து கூத்தும் கும்மாளமுமாக பிறந்த இனிய நாளை மதிகலங்கி தலைகீழாகக் கொண்டாடுகிறார்கள். இது அவர்களுக்கு இன்பகரமாய் அமைந்து விடுகிறது.

"நாம் ஒவ்வொரு வயதை கடக்கும் போதும் முதுமை எமைநோக்கி மரணத்துடன் வந்து கொண்டிருக்கிறது". இந்த உண்மை யாருக்கும் தெரிவதில்லை. வயதின் அதிகரிப்பதென்பது ஒவ்வொரு மனிதனுக்கும் கவலைக்குரிய விடயம். இதை நாம் இன்பத்துடன் கொண்டாடத்தான் வேண்டுமா? வயது கூடிக்கொண்டு போவதை நீங்கள் விருப்புடன் ஏற்பீர்களா? என்ன செய்வது விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இது காலச் (பூமி) சுழற்சியின் விளைவு. பிறப்பென்பது உண்மையென்றால் இறப்பென்பது பேருண்மை தானே!.

இனி பிறந்த நாள் பரிசுக்கு வருவோம். பிறந்த நாள் என்றால் விழாநாயகன்/நாயகிக்கோ அல்லது தமக்கு இஷ்டப்பட்டவர்களுக்கோ பரிசுகளை வழங்குவது வழக்கம். எப்படியான பரிசுகளை வழங்குவது? எப்படியான பரிசுப்பொருள்களை வழங்குகிறார்கள்? பொம்மைகள், உடுபுடைவைகள், அலங்காரப் பொருள்கள் மற்றும் பிற. ஆனால், நான் கண்ட பரிசுப்பொருளை உங்களுக்கு கூற விழைவது வேறுவிதமானவை. குடாநாட்டின் ஓர் ஊரில் பிறந்த நாள் வைபவம் நடைபெற்றது. அந்த விழாவிற்கு நான் அழைக்கப்படாத விருந்தாளியாக, தவறுதலாக எனது நண்பனுடன் செல்ல நேரிட்டது. உங்கள் கவனத்தை சிதறவிடாது இப்பந்தியை தொடர்ந்து படியுங்கள் உங்களுக்கும் இந்த பிறந்தநாள் வீட்டிற்கு சென்றது போல ஓர் உணர்வு உங்கள் மனதுக்குள் தோன்றலாம்.

> இந்தக் கட்டுரை சில கற்பனைகளோடு கலந்த உண்மைச் சம்பவம். பாத்திரங்களின் பெயர்களும் அவர்களது ஊரின் பெயரும் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

வீட்டு வாசலில் "மன்மதராசா.... மன்மத ராசா....." பாடல் எங்களைத் துள்ளித் துள்ளி வரவேற்றது. உள்ளே விழாவுக்கான மண்டபம் அலங்காரப் பூக்களாலும், மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. HAPPY BIRTHDAY என்ற ஆங்கில வாசகம் பெரிய எழுத்தில் ஒட்டப்பட்டிருந்தது. இத்தனைக்கும் எனது விழிகள் பிறந்த நாளுக்குரிய சிறுவன்/சிறுமியைத் தேடிக் கொண்டிருந்தது. வீடியோக்காரர்கள் ஹொலிவூட் சினிமா படப்பிடிப்பாளர்கள் போன்று அங்குமிங்குமாக கமராக்களுடன் நடந்துதிரிந்து தமக்கு 'எடுப்பேற்றியபடி' கமராவின் கண்களுக்குள்ளும், தமது விழிகளுக்குள்ளும் 'ரைட்ரீசேட்டுக்' களையும், 'டொல்பின் ஸ்கேட்'டுக்களையும் அடிக்கடி பதிவுசெய்து கொண்டிருந்தனர். எங்களை யாரும் கவனிப்பாரில்லை. தாகம் நாக்கை சுட்டுக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் பிறந்த நாளுக்குரியவர் காட்சி தந்தார். அனைவரது பார்வையும் அவர் மீது குவிந்தது. எனது எதிர்பார்ப்பு அந்தக் கணத்திலே சிதைந்துவிட்டது.

நாங்கள் சென்றது 60வயதைக் கடந்த முதிய பெண் ஒருவருடைய பிறந்தநாள் நிகழ்வுக்கு. அவர் முதல் தடவையாக கொண்டாடும் பிறந்த நாள் இதுவென்று அருகிலிருந்த பெண்கள் கூட்டம் அப்போது தான் மெல்லக் குசுகுசுக்கத் தொடங்கியது.

விழாநாயகி மெழுகுதிரிகளை வாயால் ஊதி அணைத்து 'கிற்றார்' வடிவிலிருந்த கேக்கை அதற்குரிய கத்தியால் வெட்டினார். அப்போது "பிறந்தநாள்....... இன்று பிறந்தநாள்...." என்ற பாடல் ஒலிக்க அனைவரது கைதட்டல்களும் அவரை உற்சாகப்படுத்தி வாழ்த்துக் கூறின. பின்பு ஒவ்வொருத்தராக எழுந்து சென்று வீடியோவுக்கு முகம் கொடுத்தபடி பரிசுப் பொருள்களை வழங்கிக் கௌரவப்படுத்தினார்கள்.

ஒரு கட்டத்தில் அவரது பிள்ளைகள் தாயாருக்கு முத்தமிட்டு தங்கவளையல்கள், மோதிரங்கள், சங்கிலிகளை அணிவித்து மகிழ்வித்தார்கள். இனித் தான் உங்கள் கவனம் அதிகமாக வேண்டும்.

வெளிநாட்டில் இருந்து வந்த அவரது மகனொருவன் தாயாரை நோக்கி எழுந்து செல்கிறான். அவனிடம் எந்தவிதமான பரிசுப்பொருள்களையும் காணவில்லை. தாயருகில் சென்றவன் தனது கட்டையான ரெனிம் காற்சட்டையின் பின்புறப் பொக்கற்றில் இருந்து காசுப்பையை (பேர்ஸ்) எடுக்கிறான். அதற்குள் இருந்த ரூபா நோட்டுக் கட்டுக்களில் இருந்து ஆயிரம் ரூபா பெறுமதியுடைய மூன்று தாள்களை வேறுபடுத்தி கைக்குள் பற்றுகிறான்.

**- சுதேசிகன்**

தாயார் தனது இரு கைகளையும் காசைநோக்கி நீட்டுகிறார் அப்போது அவனது தாயாரின் மனநிலையைப் போன்று தான் அங்கிருந்த எல்லோரது மனநிலையும் இருந்தது.

நாம் நினைத்தோம் மூவாயிரம்(3000/=) ரூபாவையும் தாயின் கைகளிலே கொடுப்பானென்று. அவன் காசைக் கொடுக்கவில்லை; எங்களைப் போல வீடியோக்காரரும் ஏமாந்து போனார்கள்.

மாறாக அந்தக் கணத்தில் அதிசயம், ஆச்சரியம், விசமத்தனம், பணத்திமிர் அரங்கேறியது.

என்ன முழிக்கிறீர்கள்? என்ன நடந்தது தெரியுமா? ஆயிரம் ரூபா பெறுமதியுடைய மூன்று தாள்களையும் சிறுசிறு துண்டுகளாகக் கிழித்து தாயின் தலைமேல் பூக்களை கொட்டியது போல கொட்டினான் மகன். சிலர் அழுதார்கள் சிலர் சிரித்தார்கள் சிலர் அழவுமில்லை சிரிக்கவுமில்லை. அந்த சிறு துண்டுகளை ஒட்டவைப்பதிலேயே மனதுக்குள் முனைந்து கொண்டிருந்தார்கள்.

இன்று வறுமை நிலையிலுள்ள எத்தனையோ பிள்ளைகள், யுத்தத்தால் தாய், தந்தையரை இழந்து தவிக்கின்ற அநாதைப் பிள்ளைகள் உள்ளனர். அநேகமானோர் அடிப்படைக் கல்வி கூட கற்கமுடியாமலும், உண்ணும் உணவுக்காகவும் வானத்தை வெறித்துப் பார்த்தபடி ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக பிஞ்சு உள்ளங்கள் தங்களையே வருத்திக் கொண்டிருக்கிறார்கள். யுத்தவடுக்கள் அவர்களது முகத்தில் இருந்து இன்னும் காயவில்லை. மறுபக்கத்தில் பசிவயிற்றுடன் பாட்டுப்பாடி சில்லறைப்பணத்திற்காக கடைத் தெருக்களிலும், பஸ் நிலையங்களிலும், ஆலயங்களிலும் பிச்சையோடு ஏந்தி அலைந்து திரிகிறார்கள். இதில் பெண்கள் என்றால் நிலைவேறு.

நல்லவழி பார்த்து நடக்க வேண்டியவர்களை சூழ்நிலை பாதையை மாற்றியதால் வழியிலே இடறி விழுந்து விடுகிறார்கள்.

பராமரிக்கப்படவேண்டிய நிலையில் முதியவர்களில் எத்தனையோ பேர், தள்ளாடித் தள்ளாடி நடக்கவே தைரியமில்லாத நிலையில் பெற்ற பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் வீதியோரங்களிலும், கடைத்திண்ணைகளிலும், ஆலயவாசல்களையும் உறைவிடமாக்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சிலர் வாகனங்கள் மோதி பரிதாபகரமாக இறந்து விடுகின்றனர். இது வெளிப்படை உண்மை. நல்லூரான் ஆலய வாசலிலும், யாழ்.நகரப் பிரதேசமும் இதற்கு சாட்சி!.

பணம் கொண்டவர்களே இது உங்கள் கண்களுக்குத் தெரியவேண்டும். வெளிநாட்டுச் சூழல் உங்களை மாற்றியிருக்கலாம் யுத்தப் புயலடித்த எங்கள் தேசத்தில் இவர்களது மனங்கள் புண்பட்டபடியே இப்பொழுதும் இருக்கின்றன. மீட்பார் இல்லாமல் இவர்கள் கலங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆலயங்களும், மாடமாளிகைகளும், வீதிகளும் புத்தெழுச்சி பெறுதலை விட இப்படியாக பணத்தை கிழித்துப் போடுவதை விட இவர்களது மனங்கள் மறுமலர்ச்சி பெறவேண்டும். உங்களது இரு கரங்களும் அநாதைக் குழந்தைகள் மற்றும் வறுமை நிலையிலுள்ளோரை நோக்கி நீளட்டும். அவர்கள் உங்களை பாசத்துடன் நேசிப்பார்கள். இறை புண்ணியமும் உங்களை வந்து சேரும்

குடாநாட்டில் பணத்திற்கு இப்போது இதுதான் மதிப்பு.

✻

# ② தேர்தல் சீஸன்

காசி ஆனந்தன் போகுமிடமெல்லாம் உணர்ச்சிப் பாடல்கள் பாடுவார். காசி ஆனந்தனின் பாடல்களைக் கேட்பதற்காகவே கூட்டணியினரின் கூட்டங்களில் சனக் கூட்டம் அலைமோதும். எங்கெல்லாம் காசி ஆனந்தன் செல்கிறாரோ அங்கெல்லாம் மக்கள் கூட்டம் திரளும் காசி ஆனந்தனின் பாடல்களைக் கேட்பதற்காக. "ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆள நினைப்பதில் என்ன பிழை" என்று காசி ஆனந்தன் பாடுவார். நாங்களும் எமக்குள் நாங்கள் ஆண்ட பரம்பரை சிங்களவன் எங்களை அடிமையாக்கி விட்டான் என்று பேசிக்கொள்வோம். மங்கையர்க்கரசியும் சிலவேளை கூட்டங்களில் பாடுவார். காசி ஆனநதனை இடதுசாரிகள் 'காத்தமுத்து சிவானந்தன' எப்படிக் காசி ஆனந்தன் ஆனார் என்று கிண்டல் செய்வார்கள்.

1975ஆம் ஆண்டு காங்கேசன்துறைத் தொகுதியில் இடைத்தேர்தலொன்று நடைபெற்றது. 1972ஆம் ஆண்டு இலங்கை குடியரசானபோது சிறுபான்மையினருக்கு இருந்த கொஞ்ச நஞ்ச உரிமையும் இல்லாமல் போனது. தனிச்சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது கடுமையாக எதிர்த்த இடதுசாரிகள்தான் 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பை உருவாக்கினர். கொல்வின் ஆர்.டி.சில்வாவினால்தான் 1972ஆம் ஆண்டு அரசமைப்பு உருவாக்கப்பட்டது.

1972ஆம் ஆண்டின் இலங்கைக் குடியரசின் அரசமைப்பைத்தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையெனக்கூறி இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆறு அம்சக் கோரிக்கையை முன்வைத்து தந்தை செல்வா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தார். திரு.சுந்தரலிங்கமும் இணைந்தே இந்த ஆறு அம்சக் கோரிக்கையைத் தயாரித்தார்.

நீண்ட காலமாகத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து வந்த சிறிமாவோ அரசாங்கம் 1975ஆம் ஆண்டு தேர்தலை நடத்தியது. இத்தேர்தலில் வ.பொன்னம்பலம், செல்வாவை எதிர்த்துப் போட்டியிட்டார். சிறிமாவோ அரசாங்கம் தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து செல்வாவுக்கு எதிரான பிரசாரத்திலீடுபட்டது.

பிரபல இடதுசாரித் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார, காலஞ்சென்ற பீற்றர் கெனமன், சரத்முத்தெட்டுவேகம ஆகியோருடன் அநுராவும் வந்து வி.பிக்காகப் பிரசாரம் செய்தார்.

காங்கேசன்துறைத் தொகுதி விவசாயிகளிடையே சிறிமாவுக்கும் கணிசமான ஆதரவு காணப்பட்டது. காரணம் அப்போதைய அரசாங்கம் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக அந்நிய நாட்டு இறக்குமதியைத் தடை செய்திருந்தது. இதனால் ஏழ்மை நிலையிலிருந்த பல விவசாயிகள் பணக்காரர்களானார்கள். குடிசைகளாயிருந்த விவசாயிகளின் வீடுகள் கல் வீடுகளாக மாறின. காங்கேசன்துறைத் தொகுதி விவசாயிகளின் பிரதான உற்பத்திப் பொருள்களான வெங்காயம், மிளகாய் பயிரிட்டோர் பெரும் இலாபமடைந்தனர். அத்துடன் உலர் உணவுப் பொருள்களான அரிசி, மா, சீனி என்பனவும் பங்கீட்டுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவே வழங்கப்பட்டன. பாணுக்குப் பொதுமக்கள் கியூவில் நின்றதும் இந்தக் காலப் பகுதியில்தான். நாங்கள் அதிகாலை நாலரை மணிக்கே போய் சங்கக்கடை வாசலில் பங்கீட்டு அட்டையுடன் கியூவிலிருந்து விடுவோம். ஐந்தரை ஆறு மணிக்கு பாண் லொறி வந்ததும் பங்கீட்டு அட்டையில் உள்ள குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப பாண் விநியோகிக்கப்படும். சில வேளைகளில் எடுத்து வரப்படும் பாணின் அளவு குறைவாயிருந்தால் வழங்கப்படும் பாணின அளவும் குறையும்.

இதன்காரணமாக அப்போது பணக்காரர் எனக் கருதப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் கூட வளவினுள் மர வள்ளிக்கிழங்கு நடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். சிலர் வீட்டிலிருந்த பூந்தோட்டத்தை அகற்றி விட்டு அந்த இடத்தில் மரவள்ளி பயிரிட்டனர். எமது வளவினுள்ளும் கூலிக்கு ஆள் பிடித்து மரவள்ளி நடும் முயற்சியில் அம்மா ஈடுபட்டார்.

இதனால் அரசாங்க உத்தியோகத்தர்கள் சிறிமாவோ அரசாங்கத்தின் மீது வெறுப்புக்கொண்டிருந்த அதேவேளை விவசாயிகளில் கணிசமானோர் சிறிமாவை ஆதரித்தனர். இந்தக் காலப் பகுதியில்தான் மக்கள் சர்க்கரை, பனங்கட்டி என்பவற்றுடன் தேநீர் அருந்தத் தொடங்கியதுடன் கையில் சிறிதளவு சீனியை எடுத்து அதை நாக்கால் நக்கியவாறு தேநீர் அருந்தவும் தொடங்கினர். அந்தக் காலத்து மேடை நாடகங்களிலும் இது நகைச்சுவையாகக் காண்பிக்கப்பட்டது. கைரேகை சாஸ்திரம் பார்க்கும் ஒருவரிடம் ஒருவர் சாஸ்திரம் பார்ப்பதற்காகக் கையை நீட்டிய போது சோதிடர் பூதக் கண்ணாடியின் உதவியுடன் கையைப் பிடித்துப் பார்த்த போதும் ரேகைகள் தெரியவில்லை என்று சொல்ல, அதற்கு சோதிடம் பார்க்க வந்தவர் "சீனியை நக்கி நக்கி ரேகைகள் அழிந்துவிட்டன போலிருக்கிறது சாத்திரியார்" என பதிலளிப்பது போல் காட்சிகள் காண்பிக்கப்பட்டன. தரமான துணிகள் கூட பங்கீட்டு அட்டைக்கு குலுக்கல் மூலமே விற்பனை செய்யப்பட்டன.

தேர்தல் பிரசாரத்திலும் இது எதிரொலித்தது. எனக்குத் தெரிந்த பல விவசாயிகளும் விவசாயிகளின் மனைவிமாரும் "நாங்கள் அம்மாவுக்குத்தான் போடுறது" எனக் கூறியதை நேரில் கேட்டிருக்கிறேன். யாழ்ப்பாணத்தில் சிறந்த விவசாயிகள் சிலருக்கு விவசாய மன்னர் பட்டமும் சிறிமாவால் வழங்கப்பட்டன.

**ந.பரமேஸ்வரன்**

எமது வீட்டிற்கு அடுத்தது பார்குமார குலசிங்கத்தின் வீடு. பார்குமாரகுலசிங்கம், தந்தை செல்வாவின் மைத்துனர். இவரது வீட்டுக்கு அடுத்த வெற்றுக்காணியில் வி.பியின் ஆதரவுக்கூட்டம் நடைபெற்றது. திரு.பீட்டர் கெனமனும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். கூட்டம் நடைபெற்ற காணிக்கு எதிரேதான் சுந்தரலிங்கத்தின் வீடு அமைந்திருந்தது. திரு.சுந்தரலிங்கமும் அப்போது வீட்டிலிருந்தார். சுந்தரலிங்கமும் ஒரு மூலையில் வந்து நின்று கெனமனின் உரையைக்கேட்டுக் கொண்டிருந்தார். பீற்றர் கெனமன் சுந்தரலிங்கத்தின் மாணவன். சுந்தரலிங்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகயிருந்தபோது நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பற்றி சுந்தரலிங்கம் ஏற்கனவே கூறியிருந்தார். கெனமன், புகுமுக மாணவிகளை மோசமாக 'ராகிங்' செய்ததாக மாணவிகள் தனக்கு முறையிட்ட போதுதான் மாணவிகள் வரும் வேளையில் மாடிப் படிகளின் கீழ் ஒளிந்திருந்ததாகவும் கெனமன் வழமைபோல் மாணவிகளைக் கிண்டல் செய்தபோது தான் திடீரென வெளிப்பட்டு கெனமனை சப்பாத்துக்காலால் உதைத்து விட கெனமன் தன்னைக்கண்ட அதிர்ச்சியில் 'சேர்' என்றவாறு மாடிப்படிகளில் உருண்டு விழுந்ததாகவும் சுந்தரலிங்கம் ஏற்கனவே கூறியிருந்தார்.

கெனமன் உரையாற்றும் போது செல்வநாயகமும் சுந்தரலிங்கமும் தமிழர்களுக்கு ஒன்றும் செய்யவில்லையெனவும் தமிழர்களை ஏமாற்றி வருவதாகவும் தமது அரசாங்கத்தின் பதவிக்காலத்தில்தான் தமிழ் விவசாயிகள் யாவரும் பணக்காரர்களானதாகவும் குறிப்பிட்டார். கூட்டம் முடிந்து கெனமன் வாகனத்தில் ஏறப்போகையில் சுந்தரலிங்கம் முன்னே சென்றார். கெனமன் நெஞ்சுக்கு நேரே இரு கைகளையும் பிசைந்தவாறும் சேர் என்றார். சுந்தரலிங்கம் கெனமனின் முதுகில் தட்டி நான் உன்னுடைய உரை முழுவதையும் கேட்டேன். நன்றாக இருந்தது என்றார். கெனமனும் எப்படி எனது உரை என்று கேட்டார்.

கீரிமலைக் கடற்கரையில் நடைபெற்ற செல்வா ஆதரவுக் கூட்டமொன்றில் கூட்டண' முக்கியஸ்தர்களான கதிரவேற்பிள்ளை, ஆலாலசுந்தரம் உட்படப் பலர் உரையாற்றினர். ஆலால சுந்தரம் உரையாற்றும் போது ரஷ்யாவில் மழைபெய்தால் இஞ்சை குடை பிடிக்கிறவர் தான் வி.பொன்னம்பலம் என்று சொல்ல, நாங்களும் விழுந்து விழுந்து சிரித்தோம். கதிரவேற்பிள்ளை உரையாற்றும் போது, எங்கடை ஆக்கள் குறைஞ்ச சாதிக்காரரை கிணத்திலை தண்ணி அள்ள விடமாட்டினம். ஆனா ஆரேன் கிணத்துக்கை விழுந்தா உடனை "எடே கந்தா பூதா ஓடியாடா" எண்டு அவங்களைத்தான் கூப்பிடுவினம் என யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பைப் பற்றிக் கிண்டலடிக்க, நாங்களும் அதை வீட்டில் போய் அம்மாவுக்கும் சொல்லி நகைத்தோம்.

அந்தக் காலத்தில் கம்யூனிஸ்டுகள் என்றால் ஏதோ தீண்டத்தகாதவர்கள் போன்ற ஓர் அபிப்பிராயத்தை கூட்டணியினர் உருவாக்கி வைத்திருந்தனர். உவையள் 'கொமினிஸ்ற்' என்று சொல்லும் நிலைமையும் யாழ்ப்பாணத்தில் காணப்பட்டது. வி.பியின் உரையைக் கேட்கும் போது அவர் சொல்வது எல்லாம் சரியாகத் தோன்றும். பின்னர் கூட்டணியினரின் உரையைக கேட்டால் அவர்கள் சொல்வதும் சரியாகத் தோன்றும். *(தொடரும்)*

## அந்தக்கால நினைவுகள்....



புதிய அரசமைப்பை எதிர்த்து எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தபின் காங்கேசன்துறைத் தொகுதிக்கு வந்தபோது தெல்லிப்பழையில் மக்களின் வரவேற்பு (1972)

## முற்றுப்புள்ளி....

வாழ்க்கை வளப்பானதா?
இல்லை வளாந்தரமானதா?
விடை தேடும் நிலையில்....
வீணை மீட்க ஆசைகொண்டு....
விரல்களின்றி விசனப்படுகிறேன்
வசந்தகாலம் வற்றிவிட்டதால்
உதிர்வுகள் ஏனோ ஏராளம்
கனவுகள் என்னுள் தாராளம்
கரைவுகள் அதைவிட ஏராளம்
வாழ்க்கைப்பாடுகள் முகாரியில்
இசைப்பதால் முற்றுப்புள்ளியே
முடிவென்றாகிறது....

- எஸ்.கவிதரன்.

## மறுப்பின் அர்த்தம்

உன் புன்னகையில் சிதறி
பேச்சிற் பித்தாகி, பசியை மறந்து
உறக்கத்தைத் தொலைத்து
பகலிலும் கனவுகளுடன் கூடி - பல
கவிதைகளுக்கு அப்பனான பின்,
கிடைத்த உன் மறுப்பிலிருந்து
ஒன்றை மட்டும் புரிந்து கொண்டேன்
இறைவன் எனக்கு
இதைவிட அதிகமாய்
ஏதோ தரப்போகின்றான்!

- கர்ணன்.

## தனியான தனிமை

கவிதைத் தளிர்கள்


விடியும்
ஒவ்வொரு இரவும்
விதவையாகியது,
சூரியன் கூட
சூனியமானது,
ஏனென்றால்
கண்ணுக்குள்
நிழலாகி
மனதுக்கு அருகாகி
உறவுக்கு முடிவாகியும்
உடன் இல்லையே
என்பதினால்....

- இ.சிவராதிகா.

## உன் முகவரிகூட....

அந்த ஒரு
சொற்ப காலத்துள்ளே
நீ போட்ட ஆட்டம்
அப்பப்பா.....!
உன் வாசலிலே
கூட்டத்தைப் பார்த்து
நீ போட்ட கணக்கோ
ஏராளமப்பா
நீயோ பாவமப்பா
உன் நாத ஓசை
யாழையே நிரப்புமென்றாய்.....
இறுதியில்
அதுவே உனது
மரண ஓலமாய் மாறியபோது....
நீ ஓடியேவிட்டாய்
இன்று நீ
எங்கேயிருக்கிறாய்......?
அவ்வப்போது
பத்திரிகைகளில் மட்டும்
ஏதோ பிணாத்தியபடி.....
என்றாலும்
அவர்கள் உனக்கெறிந்த
எலும்புத்துண்டுகள்
உருசிதான் போலும்!
இன்றும் கூட
உன் தாடியிலும் மீசையிலும்
மீதியாய் உலர்ந்து போன
துண்டுகளுடன்.....
நாக்கைத் தொங்கப் போட்டபடியே
அலைந்து கொண்டிருக்கிறாய்
அலை
நன்றாக அலை
இப்படியே நீ
அலைந்து கொண்டிருப்பாயேயானால்.....
தாடியும் மீசையும் வைத்து
மறைத்த உன் முகத்தைப் போலவே
உன் முகவரி கூட
தொலைந்து போய்விடும்.

- அ.சூரியன்.



# நீயுமா கருணா?

கருணா தான் தளபதியாக இருந்து ஈட்டிக்கொடுத்த வெற்றிச் சாதனைகளை வெறும் இராணுவ வெற்றிகளாகத் தான் பெற்றுக்கொடுத்தார். இராணுவ வெற்றிகளை எவர் பெற்றுக்கொடுத்தாலும் எந்த கெரில்லா அமைப்போ மரபுவழிப் படையணியோ வெற்றிகரமாகச் செயற்பட்டாலும் அந்த இராணுவ வெற்றிகள் தந்திரோபாய அரசியல் பரிமாணமும் பரிணாமமும் கொண்டதாக மாற்றப்படுவதன் மூலமே பிரதிநிதித்துவப்படுத்தப்படும் இனம் நிலைத்து நீடிக்கும் உரிமைகளை நிலைநாட்டமுடியும்.

**- ஊடுருவி -**

படைநடத்தி வெற்றிகளை ஈட்டிக்கொடுப்பது ஒரு 'மருட்சிகரமான சாதனை' (Success of Temptation) மட்டுமே. ஆயுத வலிமையுடன் உடல்வலிமை பொருத்தமான வேவு நுட்பங்கள் என்பனவற்றுடன் அச்சூழ்நிலையில் உருவாகும் உணர்வுக் கொந்தளிப்பு, ஆக்ரோஷம் என்பன தளபதிகளுக்கும் போர் வீரர்களுக்கும் இருக்கும்பொழுது எதிர்பார்க்கப்படும் அட்டவணைப்படியோ அல்லது கள நிலைமைகளை உடனுக்குடன் மதிப்பீடு செய்தோ செய்யப்படும் பல சண்டைகள் வெல்லப்படலாம். விடுதலைப் புலிகளின் கேந்திரச் சண்டைகள் பலவற்றை கேணல் கருணா வழிநடத்தியிருக்கலாம்; வெற்றிகளைக் குவித்திருக்கலாம். ஆனால், ஒட்டுமொத்தமான சண்டைகளின் வெற்றிகளை (Success of Battles), ஒருபோர் வெற்றியாக (Victory of War) மாற்றுவது என்பதும் அதனூடாக இனத்துக்கான அரசியல் வெற்றியை (Political Victory) ஈட்டிக்கொடுப்பது என்பதும் ஒரு 'அரசியல் தத்துவார்த்த அறிவுசார்' தளத்தில் நின்று செயற்படவேண்டிய நிபுணத்துவ நுணுக்க முறைமைகளூடாக அணுக வேண்டிய நுண்மையான விடயங்கள் (Very delicate issues) ஆகும்.

இராணுவ சாதனைகள் ஒரு ஆரம்பக் கட்டம் மட்டுமே! இராணுவவியலே அரசியலாகவும், அதுவே இனத்திற்கான அரசியல்



பண்பாடாகவும் அதுவே இனத்தின் இருப்பு முழுமைக்குமான ஆக்கசக்தியாகவும் கேணல் கருணா போன்றவர்கள் விளங்கிவைத்திருக்கின்றமை துர்ப்பலனாக உள்ளது.

புவிசார் அரசியல் (GeoPolitics), அரசியல்சார் பொருளியல் (Political Economy) இவற்றை விளங்கிக்கொண்டு தான்வாழும் சமூக பொருளாதார அரசியல் அடிப்படைகளை விளங்கிக்கொண்டு முடிவுகளை மேற்கொள்ளக்கூடிய ராணுவ வியலாளனாக இல்லாத கருணா, கிழக்கு மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சி பற்றி திடீரெனக் கதைப்பது தமிழ்மக்களுக்கு வேதனையளிக்கிறது.

ஒரு பலமான கெரில்லா இயக்கமாக இருந்து பின்பு ஒரு கட்டத்தில் மரபுவழிப் படையணிகளின் சாயல்களை பெருமளவுகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதியான கருணா, வடமாகாணத்தின் போரியல், அரசியல் ஸ்திரப்பாட்டில்தான் பல்லினச் சமூகங்களின் பழிவாங்கல் களமாக விளங்கும் கிழக்கு மாகாணத்தின் அதன் தமிழ் குடியிருப்பாளர்களின் அரசியல் பாதுகாப்பு ஸ்திரப்பட முடியும் என்பதை விளங்கிக் கொள்ளவும் மறுத்துள்ளார்.

கிழக்கில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படவில்லை என்பதையிட்டும் கிழக்கு மாகாணத்தின் இளைஞர்கள், புலிவீரர்களாகி வன்னிக்களங்களில் மடிந்துள்ளமையைப் பற்றியும் 'அதீத கரிசனை' காட்டி இலத்திரனியல் ஊடகங்களூடாக ஒரு சர்வதேசப் புகழை ஈட்டிக்கொள்ள முனையும் கருணாவிடம் 'தனிமனித சுயநலம்' குடிகொண்டுள்ள அளவுக்கு, தனது இனத்துக்காக இறுதிவரை உழைப்பதைத் தடுக்கக்கூடிய, அரசியல் தத்துவார்த்த ஏழ்மைத்தனமும் (Poverty of Political Philosophy) குடிகொண்டுள்ளமை மிகத் தெளிவாகிறது. தனிமனிதப் பலவீனங்களும், சுயநலங்களும் தத்துவார்த்த அறிவின்மையால் அவர் தன்னகத்தே நிரப்பிக்கொண்ட எதிர்பார்ப்பு மனோபாவம் - இவரது பலவீனங்களை இனங்கண்டு கொண்ட ஏதோவொரு சக்திக்கு இவரைப் பலிக்கடாவாக்கியுள்ளது.

சர்வதேச உதவிகளுடன் முறைப்படியாகக் கட்டியமைக்கப்பட்ட ஓர் அரச இராணுவக் கட்டமைப்பின் மூத்த தளபதியொருவருக்கு இராணுவ விஞ்ஞானத்துடன் ஒரு பல்தளப் படிப்பூட்டல் மூலமாக புவியியல், பொருளாதாரம், அரசியல், சர்வதேச தந்திரோபாயங்கள் போன்றன கற்பிக்கப்பட்டு தனது தேசாபிமானம் சார்ந்த 'தத்துவார்த்த' அறிவூட்டல் செய்யப்பட்டு, உத்தியோகபூர்வ ஊக்குவிப்புடன் ஆற்றல் காலத்துக்குக் காலம் வளர்க்கப்படுகிறது; புத்தூக்கங்களும் புத்தறிவுகளும் வழங்கப்படுவது தொடர்ந்து நிகழ்கிறது. அரச இராணுவக் கட்டமைப்புகளில் 'கூலிக்கு மாரடிக்கும்' தன்மை நிலவுவதாக விமர்சிக்கப்படுவதும் அப்படைகளில் தியாக மனப்பாங்கும், அர்ப்பணிப்பும் போதிய அளவில் இல்லை என்று சொல்லப்படுவதும் உண்டு.

ஆனால், ஒரு விடுதலைப் படையிடம் - அதில் நீண்டகாலம் பணியாற்றிய கருணாவிடம் அனைத்தையும் - அதாவது தான் ஈட்டிக்கொடுத்த சாதனைகள் அனைத்தையும் - பூச்சியமாக மாற்றும் வகையில் தனக்கும், தான் சார்ந்த அமைப்புக்கும், இனத்துக்கும் களங்கத்தையும் ஆபத்தையும் விளைவிக்கும் மனோபாவம், செயற்பாடு என்பன ஏற்பட்டமையை சரியாகப் படித்து, மூலமுதல் உபாயத்திலா, துணை உபாயங்களிலா 'திருத்தங்கள்' மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை உரிய வேகத்துடன் செய்தேயாக வேண்டும்.

தற்போதைய கட்டத்தில் விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர் வே.பாலகுமார் அவர்கள் கூறியதுபோல, விடுதலைப் போரியல் வரலாற்றில் மக்கள் சந்திக்க இருக்கும் தேர்தல்களம், ஒரு போர்க்களம்தான். கருணாவால் ஏற்படுத்தப்பட்டுள்ள நெருக்கடிக்குப் பின்னால் மாற்றுச் சக்தியொன்று 'மறைமுகமாக' செயற்படுவது தெளிவாகி வருவதாக வன்னியில் விடுதலைப் புலிகள் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் இந்த நெருக்கடியை மக்களின் ஜனநாயக அரசியல் பக்கபலம் மூலம் இயன்றளவு சீர்செய்யக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. நடைபெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்மக்கள் மிகக்கவனமாகச் சிந்தித்து தமிழர் உரிமைகளை வென்றெடுக்கவும் சதிவலைகளை அறுத்துத் தூளாக்கவும் கூடியவகையில் வாக்களிக்கவேண்டிய பொறுப்பு தமிழ்வாக்காளர்களுக்கு உண்டு.

என்றைக்கும் எவரும் புரிந்துகொள்ளவேண்டிய உண்மை ஒன்று உள்ளது. கொழும்பின் பௌத்த சிங்கள அரசாங்கங்கள் மாற்றுக்கருத்துள்ள தமிழ் அரசியல் தலைமைகளையும் மாற்றுக்கருத்துள்ள தமிழ்அரசியல் கட்சிகளையும் வரவேற்கவும் வருடி வளர்க்கவும் முனைந்து நிற்பதன் காரணம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இருப்பும் செயற்பாடும்தான். விடுதலைப் புலிகள் அமைப்பு பலவீனப்பட்டாலோ அழிக்கப்பட்டாலோ, எந்தச் சிங்கள பௌத்த அரசாங்கமும் எந்த மாற்றுத்தமிழ் அரசியல் சக்திகளையும் மதித்து உரிமைப் பேச்சுக்கள் நடத்தி, ஒரு 'சாதாரண' மாநில சுயாட்சியைக்கூட தமிழர்களுக்கு வழங்கும் என்பதற்கான எள்ளளவான வாய்ப்புக்களும் இல்லை. அப்படியொரு கட்டம் வருமானால் அது தமிழர்கள் 'நிரந்தர அடிமைத்தனம்' என்பதை சிங்கள அரசாங்கங்கள் மூலம் அனுபவிக்கவே வழிகோலும்.

ஏனெனில், கொழும்பு அரசியல் அதிதீவிர சிங்கள பௌத்த பேரினவாதத் தளத்தோடு எழுச்சிகொள்ளும் காலம் ஆரம்பித்து விட்டமையை தெளிவாக உணரமுடிகிறது.

மக்கள் சமூகம் மிகத்தெளிவுடன் குழப்பமில்லாமல் அரசியல் நிதானத்துடன் செயற்படுவதைத் தேர்தல்களம் நிரூபணமாக்கவேண்டும்.

# ஜப்பானின் அமெரிக்க விசுவாசம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## சுயவானப் பாதுகாப்புப் படை

1954 ஜூலை முதலாம் திகதி ஜப்பானின் விமானப்படை (Air Self - Defence Force) ஆரம்பிக்கப்பட்டது. 1963 ஜனவரியில் நூற்றியெண்பது 4F-104J ரக சண்டை விமானங்களும் முந்நூற்றி நாற்பத்தொரு F-86F Sabre ரக பகல் சண்டை விமானங்களும், நூற்றியெட்டு F-86D Sabre ரக அனைத்துக் காலநிலைச் சண்டைகளுக்கும் சாதகமான விமானங்களும் பதினெட்டு RF-86F வேவுச்சண்டை விமானங்களும் இருநூற்றி ஐம்பது T-33A ரக நவீன பயிற்சி ஜெட் விமானங்களும் ஜப்பான் தனது சொந்த தொழில்நுட்பத்திலேயே தயாரித்த நாற்பத்திநான்கு TIA ரக ஜெட் பயிற்சி விமானங்களும் போன்ற விமானப்படைச் சாதன பலம் ஜப்பானிடம் இருந்தது என்றால் இன்று ஏறத்தாழ நாற்பது வருடங்கள் கழிந்தநிலையில், எவ்வாறான நவீனப்படுத்தல்கள் இடம்பெற்றிருக்கும் என்பதை ஊகிக்கமுடியும். மேலும் ஜப்பானின் கடற்படையும், விமானப்படையும் மிகவும் ஒருங்கிணைவாக, ஒத்துழைப்பான திறனுடன் பணியாற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

## அமெரிக்க நன்றி மறவா ஜப்பான்

இவ்வளவு தூரம் மிகப்பலமான அடித்தளத்தோடு கட்டியெழுப்பப்பட்ட ஜப்பானின் பாதுகாப்புத்துறையும் ஜப்பானின் அரசியல்வாதிகளும் மக்களும் அமெரிக்காவுக்கு என்றைக்கும் நன்றியும் விசுவாசமும் உடையவர்களாக இருக்கவேண்டியுள்ளது. ஜப்பானின் சமூகங்கள் மத்தியில் அமெரிக்க எதிர்ப்புணர்வுகள் வெவ்வேறு காரணங்களால் எழுந்தாலும், அவை அமெரிக்கா - ஜப்பானிய உறவுகளை குலைத்துவிடும் அளவுக்கு செல்வதில்லை. ஏனெனில், ஜப்பானின் இறைமைக்கும் இருப்புக்கும் இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்து வைக்கப்பட்ட அன்றிலிருந்து இன்றுவரை உத்தரவாதம் கொடுத்து வரும் ஒரே நாடு அமெரிக்கா தான். அமெரிக்காவை விட்டால் ஜப்பானுக்கு 'இரட்சிக்க' உலகில் எவருமில்லை. பொருளாதார தளங்களில் (Economical Dimension) ஜப்பான், அமெரிக்காவை விஞ்சும் நிலைமைகள் இருப்பினும், எதுவும் செய்நன்றியைத் தாண்டிச் செல்வதற்கான அறிகுறிகள் தெரியவில்லை.

## ஜப்பான் இனிமேல் போரில் ஈடுபடுமா?

இரண்டாம் உலகப்போரின் இறுதியில் மிகக் காட்டமான பாடத்தைக் கற்றுக்கொண்ட ஜப்பான், தனது சுயபாதுகாப்புக்காக (Self Defence) மட்டுமே தனது ஆயுதப்படைகளைப் பிரயோகிப்பது என்ற தனது அடிப்படைத் திட்டத்தில் (Basic Plan) எவ்வளவு தூரம் உறுதிபூண்டுள்ளது, என்பது மேலும் விழிப்புக்கும் ஆய்வுக்குமுரிய துறைசார்ந்த பெரு விடயமாகும். இனிமேல் அமெரிக்காவுடன் ஜப்பானும் சர்வதேசப் போர்களில் பங்களிக்கும் நிலையேற்படலாம். எனினும், ஜப்பானிய மக்களைப் பொறுத்த வரையில், 'தலைமையிடாக்கொள்கையை' மிகவும் காதலிக்கிறார்கள். மிகுந்த சுறுசுறுப்பானவர்களாகவும் ஒவ்வொரு நிமிடத்தையும் தமது தேசத்தின் தொழில்நுட்ப, பொருளாதார அபிவிருத்திக்கும் திறமையான நிர்வாகத் துறைக்கும் பயன்படுத்துபவர்களாகவும் உள்ள ஜப்பான் 'மக்கள் - தேவையற்றவற்றுள் மூக்கை நுழைக்கும் எரிச்சலூட்டும் குணாம்சம் கொண்டவர்கள் அல்லர். வலி, வேதனை, துன்பத்தில் உதவும் பாங்கு, நியாயமான பாலியல் நேர்மை, குடும்பக்கட்டுப்பாடு என்பன உள்ளவர்கள்தான் ஜப்பானின் சாதாரணமக்கள். உறுதியான தேசப்பற்று உள்ளவர்களாகவும் உள்ளனர்.

எது எப்படியிருப்பினும் 'அரசு' என்ற பதத்துள் அடங்கும் மக்களும் ஆளும் அரசாங்கமும் ஒன்று இன்றி மற்றது பற்றிச் சிந்திக்க முடியாதவை தமது நிலம், கடல், வான் இவற்றின் இறைமையை பாதுகாத்தபடி ஏனையநாடுகளின் வளத்தைச் சுரண்டுவது நோக்கிய தமது விஸ்திப்பை அரசியல், சமாதான யுக்திகள் அடங்கிய பொருளாதார இராஜதந்திரத்தாலும் (Cheque - Book diplomacy) ஜப்பான் சாதிக்க முனைகிறது. எல்லாம் தாரா பொருளாதார முதலாளிய வர்க்கத்துக்கான பாடுகளே! (ஜப்பானின் பிந்திய இராணுவ - அரசியல் உபாயங்களின் போக்குப்பற்றி சூரியகாந்தியின் மற்றொரு கட்டுரையில் வாசகர்கள் அறிந்து கொள்ளலாம்) ☆